# அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ!



ரமணிசந்திரன்

# அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ!

ரமணிசந்திரன்


அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ! |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : செப்டம்பர், 2011 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 208 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# அவன் எங்கே பிறந்திருக்கிறானோ!

# அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ!

## 1

அமைதியாக வேலை செய்ய முடியாமல், அன்று சைதன்யனின் உள்ளத்தில், ஏதோ ஓர் உணர்ச்சி கிளர்ந்து எழுந்து கொண்டே இருந்தது. ஏதோ ஓர் எதிர்பார்ப்பு! ஒவ்வோர் அணுவிலும் பரபரப்பு!

ஒருவேளை, திருமணம் நிச்சயமாகிற நிலையில் உள்ள எல்லா ஆண்களுக்குமே இப்படித்தான் இருக்குமோ, என்னவோ, அவனுக்குத் தெரியாது. ஆனால், அவனுக்கு இது புது அனுபவம்!

என்னவோ, தொழில், தொழில் வளர்ச்சி என்று அதிலேயே கவனமாக, இந்த இருபத்தேழு வயது வரை இருந்துவிட்டான். எப்படியோ, திருமணம் பற்றிய நினைவே, அதுவரை வந்ததுமில்லை.

இப்போதும் கூட, அவனது கல்யாணம்பற்றிப் பேச்செடுத்து, அதிலேயே தீவிரமாக நின்று இவள் 'மணப்பெண்' என்கிற அளவுக்குக் கொண்டு வந்திருப்பது, அவனுடைய அருமைத் தங்கை மைத்திரேயிதான்.

அதுவரையிலும், அவனது மணம் பற்றி யாரும் பேசவே இல்லை என்று சொல்ல முடியாது. அவனுடையது, சற்று வசதி படைத்த குடும்பமே. செல்வம், செல்வாக்கு எதிலுமே குறைவு கிடையாது. எனவே, சைதன்யன் படித்து முடித்ததுமே, இந்தப் பேச்சு, அங்கங்கிருந்து வந்து கொண்டேதான் இருந்தது.

பெற்றோருக்கும் பேரன், பேத்தி ஆசை வரத்தானே செய்யும்? ஆனால் வருங்காலம் பற்றி ஏற்கெனவே மனதில் திட்டமிட்டு வைத்திருந்த சைதன்யன்தான், அதை ஒரேயடியாக அப்போது மறுத்துவிட்டான்.

படித்த படிப்புக்கு ஏற்றதாகத் தானே தொழில் ஒன்றைத் தொடங்கி, நன்கு வளர்த்து, அதன் பிறகே திருமணம் என்று அடித்துச் சொல்லிவிட்டான்.

மகனின் பேச்சில் உறுதியும் நம்பிக்கையும், கூடவே ஒரு நியாயமும் இருக்கவே, பெற்றோரும் அவன் போக்கில் செல்ல விட்டனர்.

ஆதியில் ஒரு பெரிய ஆட்டோமொபைல் தொழிற்சாலைக்காக உருவான நகரம், சந்தனபுரி. முதலில் அதில் பணிபுரிவோருக்கான குடியிருப்புகள், அவர்களுடைய

மக்களுக்கான கல்விக் கூடங்கள், உணவகம், கடை கண்ணிகள், பொழுதுபோக்கு மையங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்று, ஒன்றுக்கு ஒன்று தொடர்பாக எல் லாமே பல்கிப் பெருகின.

சைதன்யனின் தொழிலும் நன்கு வளர்ந்தது. ஐந்து ஆண்டுகளில், கெட்டிக்கார இளம் தொழிலதிபன் என் கிற பெயரையும் எடுத்துவிட்டான்.

இந்தச் சமயத்தில்தான், அவனுடைய செல்லத் தங்கை, அவனை விட ஒன்பது வயது சின்னவளான மைத்திரேயிக் குள், அண்ணனின் திருமணத்தைக் காணும் பேராவல், சுனாமியாகக் கிளர்ந்தெழுந்தது.

எப்போது பார்த்தாலும், ஒரே 'அண்ணன் திருமண' ஜபம்தான்!

''என்ன? உன் வழிக்குத் தடங்கல் இருக்கவே வேண் டாம் என்ற யோசனையா? நீ சின்னப் பெண்மா. பதி னெட்டே வயதுதான் ஆகிறது! பெண்ணின் திருமண வயது, இருபத்தொன்று என்று போட்டிருக்கிறது. அத னால், பொறு மகளே, பொறு!'' என்று கிண்டலடித்து, அந் தப் பேச்சை இலகுவாகத் தள்ளிவிட முயன்றான் அண்ணன்.

நிம்மதியாகத் தொழிலைப் பார்த்து வளர்த்துக் கொண் டிருக்க விடாமல், இது என்ன இடைஞ்சல் என்பது அவனுக்கு.

இப்போதுதான், அடுத்த 'ஃபாக்டரி' ஒன்றையும் தொடங்கி யிருந்தான். அதைக் கொஞ்சல் கூடுதல் கவனத்துடன் பார்த்தாக வேண்டும்.

ஏற்கெனவே தொடங்கியிருந்ததோடு, விற்பனை யோடு நிர்வாகத்தையும் நடத்துவதற்காக, நகர்ப்பகுதி யில் அலுவலகம் ஒன்றும் இருந்தது.

இதற்கே நேரம் போதாமல், அவ்வப்போது, நந்த குமார் வந்து, மகனுக்கு உதவிக் கொண்டிருந்தார். இந்த அழகில் திருமணத்துக்கும், அதிலிருந்து தொடரும் இல்லற வாழ்வுக்கும், அவனுக்கு ஏது அவகாசம்?

ஆனால், ஒன்பது ஆண்டுகள் கழித்துப் பிறந்த செல் லத் தங்கை ஆயிற்றே! விளையாட்டாகவே, திருமணப் பேச்சைத் தள்ளிவிட முயன்றான் அவன்.

ஆனால், அவள் ஒரே பிடிவாதமாக நின்றாள். ''மக்கு மாதிரிப் பேசாதீர்கள், அண்ணா! நான் என்ன எனக்கா திருமணம் செய்து வைக்கச் சொன்னேன்? என் அருமை அண்ணனுக்குத் தொழில், தொழில் என்று, நம் குடும்ப அமைப்பே மறந்துவிடும் போல இருக்கிறது! ஆனால் எனக்கு அத்தை என்று குட்டிப் பசங்கள் அழைப்பதைக் கேட்டு மகிழ மிகவும் ஆசையாக இருக்கிறது. அதனால் ப்ளீஸ், சீக்கிரமாகக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள், அண்ணா!'' என்றாள் கெஞ்சுதலாக.

தங்கையின் 'ப்ளீசில்' அண்ணன் ரொம்பவே ரொம் பவே உருகிப் போனான். ஓரளவு விவரம் தெரிந்து 'ங்கா' சொல்லும் குழந்தையிலிருந்து, தங்கை வளர்வதைக் கூடவே இருந்து பார்த்து, ரசித்து மகிழ்ந்தவன் ஆயிற்றே! பெற்றோருக்குப் போலவே, அவனுக்கும் மைத்தி கண் ணின் கருமணிதான்.

எனவே, ''இதற்கு நீ இப்படி 'ப்ளீஸ்' போட்டுக் கெஞ்ச வேண்டுமா, செல்லம்? இன்னாரைக் கட்டிக்

கொள் என்று கட்டளை போட வேண்டியதுதானே?'' என்று அவளிடம் ஒப்பித் தலையாட்டினான். கூடவே, ''ஆனால், அந்த இன்னாரைக் கண்டு பிடிப்பதுதான் ரொம்பக் கஷ்டம்! இல்லையாம்மா?'' என்று தங்கையைச் சீண்டவும் செய்தான், சைதன்யன்.

அப்போதுதான் தெரிந்தது, தன் அண்ணி பதவிக்காக, ஏற்ற ஒருத்தியைத் தங்கை ஏற்கெனவே கண்டுபிடித்து வைத்திருக்கிறாள் என்பதும், அதனால் மட்டுமே, மைத்தி ரேயி, தன் அண்ணனின் கல்யாணத்தில் திடுமென அவ்வளவு ஆர்வம் காட்டினாள் என்பதும்!

அன்றுவரை வீட்டில் சின்னக் குழந்தையாகக் கருதப் பட்ட மைத்திரேயியின் கண்டுபிடிப்பும், சற்றும் சாதாரணப் பட்டதாக இருக்கவில்லை.

வருங்கால மருமகள், அந்தக் குடும்பத்துடைய எதிர் கால இல்லத்தரசி எப்படியெப்படி இருக்க வேண்டும் என்று, மஞ்சுளா சிலபல விருப்பங்கள் வைத்திருந்தாள். அத்தனைக்கும் ஈடு கொடுப்பவளாக, மைத்தியுடைய கண்டுபிடிப்பு இருந்தாள்.

அழகு. அடக்கம், குடிப்பிறப்பு, அநாகரிகமற்ற நாக ரிகம்....

இதில் அழகு மட்டும் மஞ்சுளாவே நினைத்திராத அளவு அதிகம்! அந்தச் சுற்று வட்டாரத்தில் பேரழகி என்று பெயர் சொல்லக்கூடிய ஒருத்தியாக அந்தப் பெண் இருந்தாள். பெயர் கூட மேனகைதான்.

மேனகை யாரும் அறியாத புதியவள் அல்ல. சுமார் ஓர் ஆண்டு காலமாக, அவ்வப்போது சில பல நிகழ்ச்சி களில் தாத்தா பாட்டியுடன் வரும் அவளை மஞ்சுளாவும்

பார்த்திருக்கிறாள். ஆனால், ஏனோ மருமகளாக எண்ணிப் பார்க்கத் தோன்றியதில்லை!

இப்போது, வீட்டில் எல்லோருக்கும் சின்னவளான மைத்திரேயி, இந்தக் கருத்தைக் கூறவும், இந்த எண்ணம் தனக்கு ஏன் இவ்வளவு காலம் தோன்றவே இல்லை என்று, அந்த அன்னைக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒருவேளை, மகன் பிடி கொடுக்காமல் இருந்தது கூட, அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்! அவள் மட்டும் ஆசைப்பட்டு என்ன பயன் என்றுவிட்டுவிட்டாளோ, என்னவோ?

ஆனால், மகன் இப்போது தங்கையிடம் இளகவும், பெற்றோரும் அதை வலுவாகப் பற்றிக் கொண்டனர்.

அங்கங்கே பார்த்த அளவில், மகளின் தேர்வில் மறுப்பதற்கு எதுவும் இல்லை என்று தோன்றவும், அந்த மேனகா பற்றி, மஞ்சுளா மேற்கொண்டு விசாரித்தாள்.

சந்தனபுரியில், மதிப்பும் மரியாதையுமாக வாழ்ந்து வரும் மேஜர் பரசுராமனுடைய மகன் வயிற்றுப் பேத்தி இந்த மேனகா. சுமார் ஓர் ஆண்டாக, இந்தத் தாத்தா வீட்டில் வசித்து வருகிறாள்.

இவ்வளவு காலமாக இல்லாமல், இந்த ஒரு வருஷமாக, இந்தத் தந்தை வழித் தாத்தா வீட்டில் மேனகா வசிக்க வந்ததற்கு ஒரு காரணம் இருந்தது.

மேனகா பிறக்கும்போதே மிக அழகாக இருந்தாளாம். பிரசவம் பார்த்த டாக்டரே, ''உங்களுக்கு மேனகையே பிறந்திருக்கிறாள்!'' என்றுதான் குழந்தையைக் கொண்டு

வரச்சொல்லித் தந்தையிடம் காட்டினாராம். சிசுவின் அழகில் மயங்கி, அந்தப் பெயரையே மகளுக்கு வைத்து விட்டாராம், அவளுடைய தந்தை மாணிக்கராஜன்.

வளர, வளர அழகு அதிகமாயிற்றே தவிர, எந்த வகையிலும் குறையவில்லை.

மகள் பேரழகி என்று பெருமைப்படும்போது, அதற்கான கஷ்டங்களையும் அனுபவித்துத்தானே ஆக வேண்டும்?

தினம் ஒருவன் 'ஐ லவ் யூ' சொல்லிக் கொண்டு வந்து, வழியை மறிப்பானாம். எனக்குக் கட்டிக்கொடு, எனக்குக் கட்டிக்கொடு என்று, அது வேறு பெரும் போட்டியாம்.

ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு, யாரைப் பார்ப்பது? யாரைப் பகைப்பது?

யோசித்துவிட்டு, ஆசை மகளைப் பிரிந்திருந்தாலும் பரவாயில்லை என்று, அவளைத் தன்னுடைய தந்தை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார், மாணிக்கராஜன்.

பரசுராமன் ஓய்வு பெற்ற ராணுவ மேஜர். அந்தக் கம்பீரம், அவரது பேச்சு, நடத்தை எல்லாவற்றிலும் இருக்கும். சும்மா யாரும் அவரது வீட்டுக்குள் நுழைந்து, அவருடைய பேத்தியை நெருங்கிவிட முடியாது.

ஊரும் சென்னையைப் போலப் பிரம்மாண்டமானது அல்ல. இப்போது தொழில் வளம் பலவிதமாகப் பெருகியதில் ஒரு நகரமாகவே ஆகிவிட்டிருந்தபோதும், அளவில் பெரிதும் சிறிய நகரமே. பெரு நகரத்துக்குரிய எல்லா வசதிகளுமே அங்கே வந்துவிட்ட போதும்,

ஊர்ப்புறத்துக்கு உரிய பழக்க வழக்கங்களும், சற்றுக் கண்டிப்புடனேயே கடைப்பிடிக்கப்பட்டன.

பெண்கள் எல்லோரும் பெரியவர்களிடம் மட்டு மரியாதையோடு நடப்பது உட்பட!

அத்தோடு, யாரோ பட்டாளத்தார் என்று, சற்று அலட்சியமாக எண்ணியிருந்த தாத்தாவின் மதிப்பும், அவர் வீட்டுக்கே வந்து வசிக்கத் தொடங்கிய பிறகுதான், பேத்தி மேனகைக்கே புரிந்தது எனலாம். அவரது நிழலில் அவளுக்கும் அதே மதிப்பு, மரியாதைகள் அளிக்கப்பட்டன. அவள் என்றும் அறிந்திராத சிறப்புகள்!

சென்னையில் நேர்ந்த பல படபடப்பு, பதட்டங் களுக்குப் பிறகு, அவளது வாழ்க்கை, இங்கே அமைதியான நீரோட்டமாகச் செல்ல, தாத்தாவுடைய அன்புப் பேத்தியாக, மேனகை அங்கே பெருமையாகவே வளைய வர முடிந்தது.

எனவே மேனகைக்கு அந்த ஊரே மிகவும் பிடித்துப் போயிற்று. இந்த அழகான ஊரை விட்டு, எங்கேயும் எதற்காகவும் செல்லப் போவதே இல்லை என்பாளாம்!

இதுவும் நந்தகுமார் குடும்பத்துக்கு முக்கியம்தானே!

ஆராய்ந்து அறிந்த விவரங்களில் குறைப்பட எதுவும் இல்லாததால், நந்தகுமாரும், மஞ்சுளாவும் மேலே காய்களை நகர்த்தினர்.

மேனகையுடைய தந்தை, மகளின் திருமணப் பொறுப்பைத் தந்தையிடமே ஒப்படைத்து விட்டதால், அன்று இரு குடும்பத்தினரும், அந்த ஊரின் பெரிய ஹோட்டலில் சந்தித்துப் பேசுவதாகத் திட்டமிட்டிருந் தனர்.

மகன் நம்பி ஒப்படைத்த பெரும் பொறுப்பைக் குறையின்றி நிறைவேற்றும் நோக்கத்தில், தன்னை அருகிருந்து ஆராய மேஜர் விரும்புகிறார் என்று சிறு ஐயமும் சைதன்யனுக்கு உண்டு. ஆனால், அது பற்றிய கலக்கம் எதுவும் அவனுக்கு ஏற்படவில்லை.

இந்த ஐந்து ஆண்டுகளில், தொழில் முறையில் எத்தனையோ பேருடன் பேசிப் பழகித் தன் விருப் பத்துக்கு வளைத்தவன், அவன். இவரிடம் நல்ல பெயர் எடுப்பது ஒன்றும் பெரிதல்ல! அவனை அவர் மறுக்கப் போவதுமில்லை.

அப்போதைக்கு இரு குடும்பங்களும் சேர்ந்து கலந் துரையாடுவது போலத்தான் ஏற்பாடு. ஆனால், பாக்கு வெற்றிலை மாற்றுவது என்பார்களே, அது போல, வரப் போகும் திருமணத்தை உறுதி செய்வதுதான், இந்தச் சந்திப்பின் நோக்கம்.

ஏனெனில், மேனகையின் மனநிலை, தங்கையின் மூலமாக, ஏற்கெனவே அவன் அறிந்ததுதான்! இப்படித் தான் என்று முத்திரை குத்துவதுதான் பாக்கி!

அதற்காகக் கிளம்பும்போதுதான், சைதன்யன், தன் னைத்தானே இவ்வளவு ஆராய்ந்து கொண்டிருந்தான்.

என்ன பரபரப்பு! என்ன குறுகுறுப்பு என்று!

மேனகைக்கு இவ்வளவு பரபரப்பு இருக்குமா என்று ஒரு யோசனை வந்தது.

ஆண்பிள்ளை! அவனுக்கே இந்தப் பரபரப்பு என்றால், குடும்பப் பாதுகாப்பில் வாழும் வீட்டுப்புறா! அவளுக்கு எப்படி இருக்கும், பாவம்! எதை அணிவது, எதை உடுப்பது என்று குழம்பித் தவித்துக் கொண்டிருப்பாள்.

ஒரு சாதாரண விழாவுக்குக் கிளம்புவதற்கே, மைத்தி படும்பாடு, அம்மாவை அவள் படுத்தும்பாடு எல்லாம், அவன் பார்ப்பதுதானே?

அனேகமாக ஹோட்டலுக்கு முதலில் சென்று, மேனகையின் வருகைக்காகக் காத்திருக்கத்தான் நேரும். ஆனால், பரவாயில்லை. எப்படியும் அவன் நேர்த்துக்குப் போயாக வேண்டும். நேரம் தவறும் பழக்கம் அவனுக்குக் கிடையாது.

அத்தோடு, அந்த எழிலரசிக்காகச் சற்று நேரம் காத்திருந்தால்தான் என்ன? என்ன மாதிரித் தரிசனம் தரப் போகிறாளோ என்ற விதம்விதமான கற்பனையிலேயே, எவ்வளவு நேரம் காத்திருக்க நேர்ந்தாலும், பொழுது பறந்து போய்விடாதா?

மேஜையில் இருந்த லாப்டாப்பில் நேரக் குறிப்பைப் பார்த்தான் சைதன்யன்.

இனி அதிக நேரம் தாமதிக்க முடியாது.

மேஜையில் கடைசியாக இருந்த காகிதத்தை எடுத்துப் படித்தவனின் புருவங்கள் லேசாக நெரிந்தன.

கடிதத்தின் பக்க வாட்டில், கணக்கர் எழுதியிருந்த குறிப்புகளைப் படித்தவாறே, அவரது இருப்பிடம் நோக்கி நடந்து, ''இதற்கு மேல், இவர்களுக்கு அவகாசம் கொடுக்க முடியாது, மிஸ்டர் சந்தானம். மூன்று நாளைக்குள் பணம் வந்து சேரவில்லை என்றால், வேறு மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று, மிகவும் கடுமையாக எழுதி, ரிஜிஸ்டர் தபாலில் அனுப்புங்கள். அப்போதுதான், கடிதம் வரவில்லை என்று, பொய்ச்

சாக்குச் சொல்ல அவர்களால் முடியாது! பொருளை வாங்கும்போது மட்டும், முப்பத்திரண்டு பற்களையும் காட்டி வழிகிறார்கள். பணம் கொடுப்பதென்றால், பழக்கமே கிடையாது போல...'' என்று கடுப்புடன் சொல்லிக் கொண்டே போனவன், கணக்கரிடம் இருந்து எந்தப் பதிலும் வராது போகவும், ''சார், மிஸ்டர் சந்தான மூர்த்தி!'' என்று உரக்க அழைத்தான்.

என்ன இது?

சற்று முன்தான், ''இந்த ஒரு கடிதத்துக்கு மட்டும் என்ன நடவடிக்கை எடுப்பது என்று சொல்லி விடுங்கள், சார். கிட்டத்தட்ட ஒரு வருஷமாக இந்தப் பணம் நிலுவையிலேயே இருக்கிறது. மொத்தத் தொகையும் வரிசையாகத் தேதியோடு, பக்கவாட்டில் குறித்து வைத்திருக்கிறேன். பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்,'' என்று அவன் முன்னே கடிதத்தை வைத்துவிட்டுப் போனார். அதற்குள்ளாக ஆள் எங்கே போனார்?

ஒருவேளை, அவசரம் என்று எதுவும் எழுதி வைத்து விட்டுப் போயிருப்பாரோ என்று பார்ப்பதற்காக, அவரது மேஜையின் அருகே சென்றவன், ஒரு கணம் திகைத்து நின்றான்.

பாதி மயங்கிய நிலையில் அவரது இருக்கையை ஒட்டியே சரிந்து கிடந்தவர், கணக்கர் சந்தான மூர்த்தியே தான்!

திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான் சைதன்யன்.

அலுவலக வேலை நேரம் முடிந்து, எல்லோரும் சென்று விட்டிருந்தனர். இவருமே, இந்த ஒரு கடிதத்துக் கான பதிலுக்காகவே காத்திருந்தவர்.

அவசரமாக ஓடிச்சென்று, தண்ணீர் கொணர்ந்து, கணக்கரின் முகத்தில் தெளித்தான்.

மயக்கம் தெளிந்தபோதும், கண்களில் தெரிந்த வெறுமை சைதன்யனை யோசிக்க வைத்தது. கணக்கரின் உடம்பில் ஏதோ பெரிய பிரச்சனை! யோசிக்கக் கூட இயலாத நிலை!

அவன் இப்போது கிளம்பினால்தான், வீட்டுக்குப் போய்க், குளித்துத் தயாராகி ஹோட்டல் சந்திப்புக்குச் செல்ல நேரம் சரியாக இருக்கும். ஆனால், இந்த மாதிரிக் கிடக்கும் ஒருவரைப் 'பார்த்துக் கொள்' என்று ப்யூனிடம் ஒப்படைத்துவிட்டு, எப்படிப் போவது?

கணக்கருக்குச் செய்ய வேண்டியது என்ன என்று, அந்தக் கடை நிலை ஊழியனுக்குத் தெரியாது. தனக்கு வேண்டியது இன்னது என்று சொல்லி, அவனைச் செய்ய வைக்க, இவராலும் இப்போது முடியாது.

ஒருகணம் யோசித்துவிட்டு, சைதன்யன் அலுவலக ப்யூனை அழைத்தான். இருவருமாகச் சேர்ந்து, கணக்கரைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று, அவனது காரில் ஏற்றினார்கள்.

சந்தானமூர்த்தியின் பையில் இருந்த கார்டை எடுத்து விலாசம் பார்த்து, அவரது வீட்டுக்குக் காரைச் செலுத்தினான்.

கணக்கரது வீட்டில் அவரைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ளத் தக்க உறவினர் யாராவது இருப்பார்கள். மனைவி, மக்கள் இன்னும் யாராவது... அவர்களிடம் அவரை ஒப்படைத்துவிட்டால், அவனது பொறுப்புத் தீர்ந்தது.

அப்புறம், சற்று அவசரமாகக் கிளம்பி, அவன் தன் விஷயத்தைப் பார்க்கச் செல்ல வேண்டும்!

சந்தானமூர்த்தியின் வீட்டில் அவரைக் காரை விட்டு இறக்கக் கூட முடியாது போயிற்று!

கண் செருகக் காரில் சாய்ந்து கிடந்தவரைப் பார்த்ததும், ''ஐயோ! ஐயோ!'' என்று கதறியவாறு மலங்க விழித்தது தவிர, அவருடைய மனைவிக்கும், மகளுக்கும் வேறு எதைச் செய்யவும், எதையும் செய்யலாமா என்று யோசிக்கவும் கூடத் தெரியவில்லை!

சத்தத்தைக் கேட்டு வெளியே வந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி, பொறுப்பேற்று எதையும் செய்வதற்கு, அப்போது வீட்டில் யாரும் இல்லை என்று தெளிவு படுத்தினாள். ''மகன் ஊரிலேயே இல்லை! அந்தப் பெண்ணும் வர லேட்டாகும்...! ஆனால், அவள் வருகிற வரைக்கும் தாங்குமா?'' என்று அவள் உரக்கக் கேட்க, தாயும் மகளும், ''ஐயோம்மா, ஐயோ!'' என்று மேலும் பதறினார்கள்.

வேறு வழியில்லை.

''கவலைப்படாதீர்கள். நானே மருத்துவமனைக்கு அழைத்துப் போகிறேன்,'' என்று கூறிக் கணக்கருடைய மனைவி, மகளைக் காரில் ஏறச் சொன்னான்.

பக்கத்து வீட்டுப் பெண்மணியிடம், எங்கே அழைத்துப் போகிறான், என்ன பிரச்சனை என்று விவரம் சொல்லி, அதை, அவள் குறிப்பிட்ட 'அந்தப் பெண்'ணிடம் தெரிவிக்குமாறு கூறிவிட்டு, மறுபடியும் காரை எடுத்தான்.

பரவாயில்லை. மருத்துவமனைக்குச் சென்று அங்கே தெரிந்த யாரிடமாவது சந்தானமூர்த்தியை ஒப்படைத்து விட்டால், அப்புறம் மருத்துவமனையில் பார்த்துக் கொள் வார்கள்... அவனும் கிளம்பி விடலாம். வெறுமனே உடையை மட்டும் மாற்றிக் கொண்டு...

ஆனால், மனிதனால் திட்டம் போட மட்டும்தான் முடியும்.

சிறு நோய் என்றாலும், சைதன்யனுடைய குடும்பம் வழக்கமாகச் செல்லும் மருத்துவமனைதான். வருடாந்தர 'செக்கப்' கூட அங்கேதான். ஆனால், அவனுக்குப் பழக் கப்பட்ட மருத்துவர்கள், அவரவர் முக்கியப் பணியில் இருந்தார்கள்.

சந்தானமூர்த்தியைப் பரிசோதித்த மருத்துவரும் ஓரளவு தெரிந்தவர்தான். அவரோ, நோயாளியை நேராக ஐசியுவுக்கு அனுப்பிவிட்டு, ''சற்று ஆபத்தான நிலை தான். பல முக்கியமான சோதனைகளைச் செய்த பிறகு தான், நோயாளி என்ன நிலையில் இருக்கிறார் என்று, சரியாகச் சொல்ல முடியும். பரிசோதனைகள் பற்றி எழுதித் தருகிறேன். நீங்கள் போய்ப் பணத்தைக் கட்டி 'அட்மிஷன்' போட ஏற்பாடு செய்யுங்கள். பிறகுதான் சிகிச்சையைத் தொடங்க முடியும்,'' என்று கூறிவிட்டு, அவரும் ஐசியுவினுள் புகுந்துவிட்டார்.

''ப.. பணமா? இந்த ஆஸ்பத்திரியைப் பார்த்தாலே பயமாக இருக்கிறதே! எவ்வளவு ஆகுமோ, தெரியவில் லையே!'' குரலும், உடலும் சேர்ந்து நடுங்கினாள், சந் தானமூர்த்தியுடைய மனைவி.

''எனக்கும் பயமாக இருக்கிறதே! அம்மா, அப்பா பிழைப்பாரா? இப்போது என்ன செய்வது? அக்காவை யும் காணோமே...'' என்று புலம்பி அழுதாள் பெண்.

இவர்களைத் தனியே விட்டுவிட்டு எப்படிப் போவது?

அருகில் நெருங்கி, ''பயப்படாதீர்கள். சந்தானம் சாருக்கு ஒன்றும் ஆகாது. அதோ, அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருங்கள். பணம் பற்றியும் கவலை வேண் டாம். சந்தானம் சார் எங்களிடம்தான் வேலை பார்க் கிறார். நான் போய்ப் பணத்தைக் கட்டிவிட்டு வரு கிறேன்,'' என்று விட்டு, சைதன்யன் பணத்தைக் கட்டச் சென்றான்.

கிரெடிட் கார்டு கொண்டு பணத்தைக் கட்டி, பணம் கட்டிவிட்ட தகவலை ஐசியுவில் அவன் தெரிவித்து முடித்தபோது, அவனது செல் அழைத்தது.

அவனுடைய தந்தை!

''அப்பா, நானே ஃபோன் பண்ணிச் சொல்ல வேண் டும் என்று நினைத்தேன். அதற்குள் நீங்களே கூப்பிட்டு விட்டீர்கள்!'' என்று தொடங்கி, வேகமாகவும், சுருக்க மாகவும் விவரத்தைச் சொல்லிவிட்டு, முடிந்தவரை சீக்கிரமாக வருவதாகச் சொன்னான்.

''உன் காரணம் சரியானதாக இருக்கும் என்று எனக்குத் தெரியும்ப்பா! ஆனால், பரசுராமன் கொஞ்சம் ஒரு மா...'' என்று நந்தகுமார் சொல்லிக் கொண்டிருக் கும்போதே, அவரிடமிருந்து செல்லைப் பறித்து, ''என் னண்ணா, நீ? இந்த நேரத்தில், நீ இங்கே இல்லா விட்டால் எப்படி? மேனகா முகத்தைப் பார்க்க

முடியாமல் எனக்கு அவமானமாக இருக்கிறது!'' என்று மைத்திரேயி ஆத்திரத்தோடு கத்தினாள்.

அவனது பதிலைக் காதிலேயே வாங்காமல் சற்று நேரம் கடுகாய்ப் பொரிந்துவிட்டு, ''மேனகாவை மணக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பது, உங்களுக்கே தெரியும்! உங்களுக்கு அந்த அதிருஷ்டம் நிலைக்க வேண்டும் என்றால், மற்ற என்ன வேலை என்றாலும், அதைத் தூக்கி எறிந்துவிட்டு, உடனே வாருங்கள்! இல்லாவிட்டால்... இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று, உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை!'' என்ற மிரட்டலோடு செல்லை அணைத்தாள் அவள்.

அந்தப் பெண் மேனகையின் எழில் உருவம் சைதன்யனின் மனக் கண் முன் வந்து நின்று முத்துப்பல் காட்டிச் சிரித்தது.

இந்த அழகியை அவன் கை நழுவ விட்டுவிடப் போகிறானா?

## 2

**சை**தன்யன் கலங்கி நின்றது, ஒரு சில கணங்களே!

அதற்குள் ஒரு விசும்பல் ஒலி கேட்கத் திரும்பிப் பார்த்தான்.

சந்தானத்துடைய மகள்தான். ''இரண்டு நாளில் 'கோச்சிங் கிளாசில் பெரிய டெஸ்ட்.' அப்பா நன்றாக

ஆகாவிட்டால், நான் எப்படிம்மா படிப்பேன்? அம்மா, எனக்கு அப்பா வேணும்மா! அப்பா இல்லாவிட்டால், நானும் செத்துப் போவேம்மா! அம்மா, எனக்குப் பயமாக இருக்கிறதே!''

மகளின் ஒவ்வொரு வார்த்தைக்கும், தாயார் அதிர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.

சூழ்நிலை மட்டும் சற்று எளிமையானதாக இருக்குமானால், அவளுமே கதறி அழுதிருப்பாள்!

சற்று யோசித்துவிட்டு, வெளியே செல்லத் திரும்பியவன், இரு பெண்களின் முகத்திலும் அச்சத்தைக் காணவும், மறுபடியும் அவர்களிடமே சென்றான்.

''நான் வேறு எங்கும் போகவில்லை. சந்தானம் சாருக்கு நல்லபடி ஆகும்வரை, உங்களைத் தனியே விட்டுவிட்டுப் போக மாட்டேன். இப்போது கான்டீனுக்குப் போய்க் காபி வாங்கி வருகிறேன். அதற்குள் நர்ஸ் வந்து ஏதாவது கேட்டால், இந்த எண்ணைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லுங்கள்,'' என்று விட்டுப் போனான்.

மூன்று கப் என்பதால், காபியைக் கொண்டு போய்க் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டுத் தந்தையை அழைத்து, அங்கிருந்த நிலவரத்தைத் தெரிவித்தான்.

''பொறுப்பேற்றுக் கவனிக்க, சந்தானம் சார் வீட்டில் யாரும் இல்லையப்பா. கையில் பணமும் இருப்பதாகத் தெரியவில்லை. நல்லபடியாக டாக்டர் ஒரு தகவல் சொல்லும்வரை, விட்டுவிட்டு வருவது கஷ்டம். இன்னொரு பெரிய பெண் இருப்பதாகத் தெரிகிறது. தகவல் அறிந்து அவள் வரும் வரையேனும், இங்கே இருந்துதான் ஆக வேண்டும். மேஜர் வீட்டில்

நிலைமையை எடுத்துச் சொல்லுங்கள். ஆனால், எனக் காகக் காத்திராமல், உணவைத் தொடங்கி விடுங்கள். முடிந்தால், தாமதமாக வந்து கலந்து கொள்கிறேன்,'' என்றான்.

''சரிப்பா. ஆனால் இயன்றவரை வந்துவிடவே முயற்சி செய்,'' என்றார் தந்தை.

அவன் ஐசியு தளத்துக்குச் சென்றபோது காபி வந் திருந்தது.

ஆனால், காபியைத் தொடத் தைரியம் இல்லாதது போல அவர்கள் காத்திருந்த விதம், அவன் மனதை இன்னமும் சங்கடப்படுத்தியது. எடுத்துக் கொள்ளும்படி சைகை காட்டிவிட்டுத் தான் ஒரு கப்பை எடுத்து மெல்ல அருந்தலானான்.

உற்சாகமாகக் கலந்து உரையாடும்படியான இடமோ, நிகழ்ச்சியோ அல்லதான்.

ஆனால், சாதாரணமாக ஓரிரு வார்த்தைகள் பேசக்கூட இயலாதவாறு, தாயும் மகளும் அவனையே மிரட்சியுடன் பார்த்தனர். முதலாளி என்கிற தடை!

சந்தானமூர்த்தியின் உடல் நிலை பற்றி எதுவும் தெரியாமல், சும்மா பொய் நம்பிக்கை கொடுத்துப் பேச, சைதன்யனாலும் முடியவில்லை.

உள்ளே என்ன நிலையோ என்ற கலக்கத்தைப் போலவே, அங்கே ஹோட்டலில் என்ன நடக்கிறதோ என்று, அந்தப் பரபரப்பும் சேர, அவன் மனதும் அலை பாய்ந்து கொண்டேதான் இருந்தது. தங்கையின் எச் சரிக்கை வேறு இருக்கிறதே!

ஆனால், எதையும் வெளியே காட்டாமல், அவன் அமைதியாகவும் தோற்றமளிக்க வேண்டியிருந்தது.

நல்லவேளையாக ஐசியு கதவு திறந்து, நர்ஸ் ஒருவர் வெளியே வந்தார்.

''மிஸ்டர் சந்தான மூர்த்திக்காக வந்திருப்பது...'' என்று அவள் தொடங்குமுன், எழுந்து அருகில் சென்றான்.

ஒரு லிஸ்ட்டை நீட்டி, ''இந்த மருந்துகள் உடனே தேவை. கீழே 'டிஸ்பென்சரி' இருக்கிறது. போய் உடனே வாங்கி வாருங்கள்,'' என்றார் நர்ஸ்.

லிஸ்டை வாங்கியவாறே, ''சிஸ்டர், அவருக்கு எப்படி இருக்கிறது என்று சொல்ல முடியுமா?'' என்று நயந்த குரலில் சைதன்யன் கேட்டான்.

''சிகிச்சை நடக்கிறது. வந்ததற்கு இப்போது எவ்வளவோ பரவாயில்லை. ஆனால் இன்னும் நிறையத் தூரம் போக வேண்டும். நீங்கள் சீக்கிரமாக மருந்தை வாங்கி வாருங்கள். வந்து, அங்கே 'ஸ்டாஃப்' அறை சிஸ்டரிடம் கொடுங்கள். தேவை வரிசைப்படி, எங்களுக்கு உள்ளே வந்துவிடும்,'' என்ற நர்ஸ் மறுபடியும் ஐசியுவுக்குள் புகுந்துவிட்டார்.

கவலையோடு பார்த்துக் கொண்டு நின்ற பெண்ணிடம் சென்று, ''ரொம்பப் பரவாயில்லையாம். இனி அதிகப் பயம் வேண்டாம், நன்றாகி விடுவார் என்கிறார்கள். நான் போய் மருந்து வாங்கி வருகிறேன்,'' என்றுவிட்டுக் கீழ்த் தளத்தில் இருந்த மருந்துக் கடைக்குச் சென்றான் அவன்.

மருந்துகளை வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது, அவனுக்கு எரிச்சலூட்டும் படியாக ஒன்று நடந்தது.

ஐசியு இருந்தது, நாலாவது தளம். உயரே செல்வ தற்காக 'லிஃப்ட்' கதவை மூடிக் கொண்டிருந்தார்கள்.

''ஒரு நிமிஷம்!'' என்று குரல் கொடுத்தபடி அவன் விரைந்தது போலவே, ''கொஞ்சம் பொறுங்கள்!'' என்று கூறியவாறு ஒரு பெண்ணும் 'லிஃப்டு'க்கு ஓடி வந்தாள்.

'லிஃப்டு'க்குள் கூட்டம்!

'லிஃப்டை' இயக்குகிறவன், வழியில் நின்று கொண்டு, ''யாராவது ஒருவர் மட்டும் வாருங்கள். ஒருவருக்குத் தான் இடம் இருக்கிறது,'' என்றான்.

''எனக்கு அவசரம். நான் ஐசியு தளத்துக்கு அவசரமாகப் போக வேண்டும்,'' என்று உள்ளே புக முயன்றாள், அந்தப் பெண்.

முட்டி மோதிக் கொண்டு உள்ளே புகுந்துவிடலாம். ஆனால் பெண்களை இடித்துத் தள்ளிவிட்டு, முண்டி யடித்து முன்னே செல்லும் பழக்கம் அவன் வீட்டில் கிடையாது.

''நான் மிக அவசரமாகப் போக வேண்டும்! தேவைப் படும் மருந்து என்னிடம் இருக்கிறது!'' என்றான் அவன், சற்று உரக்கவே.

''இல்லை. எனக்கு மிகவும் அவசரம். நான் உடனே போயாக வேண்டும்,'' என்றாள் அவள்.

''இல்லை, எனக்கு அவசரம்...''

''அவசரம் என்றால் படியேறிப் போக வேண்டியது தானே? கால்கள் நல்லபடியாகத்தானே இருக்கின்றன?'' என்றாள் அவள் துடுக்காக.

என்ன திமிர்!

''ஏன்? சொல்லுகிறவள் கால்கள் இல்லாமல் தவழ்ந்தா வந்தாள்? படியேற முடியும்தானே?''

''திவ்வியமாக முடியும். ஆனால், ஒரு மணி நேர மாகப் பஸ்சில் நின்று கொண்டே வந்து, பஸ் நிறுத் தத்தில் இருந்து ஓடி வந்திருக்கிறேன். நாலு மாடி என் றார்கள். ஏறுவது கஷ்டம். நீங்கள் இங்கே ஏசியில் தானே...''

''யாராவது ஒருத்தர் உள்ளே வாருங்கள். அல்லது, பேசி முடித்துவிட்டுப் பிறகு வாருங்கள்!'' என்று கதவை மூட முனைந்தான் 'லிஃப்ட் ஆபரேட்டர்'

''இல்லையப்பா. நான் வருகிறேன்!'' என்று சட் டென்று 'லிஃப்டினுள் காலை வைத்துவிட்டாள் அந்தப் பெண்.

சைதன்யன் ஆத்திரத்துடன் முறைக்க, ''சுத்த சோம் பேறிகள்! மாடிப்படி ஏறக் கூட, உடம்பு வணங்காது போல!'' என்று அவள் கூறியது, மூடிக் கொண்டிருந்த கதவின் வழியே வெளியே துல்லியமாகக் கேட்டது!

உயரே ஏறிக் கொண்டிருந்த லிஃப்டை முறைப்பது தவிர, ஒன்றும் செய்ய முடியாத நிலை, முறைப்பதில் பலனும் இல்லை!

ஓர் ஆத்திர மூச்சை வெளியேற்றிவிட்டு, சைதன்யன் வேகமாகப் படியேறலானான்.

'ஸ்டாஃப்' அறைக்குச் சென்று, மருந்துகளைக் கொடுத்துவிட்டு, வேகமும் படியேற்றமுமாக அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றியபடி பார்த் தால், சந்தானமூர்த்தியுடைய மனைவி மகள் இருந்த இடம் காலியாக இருந்தது.

பார்வையால் தேடியபோது, சற்று ஒதுக்குப்புறமாக நின்று யாருடனோ... வேறு யாருமல்ல, அந்தச் சண்டைக்காரியுடன்தான்! அவளோடு, அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஆக, இவர்களைச் சந்திப்பதற்காகத்தான் அவ்வளவு விரைவாக வந்தாளா?

அந்த 'இன்னொரு பெண்!' பொறுப்பேற்க வந்தாளா?

அப்படியென்றால், அவன் சீக்கிரமே கிளம்பி விட முடியுமோ?

மேனகையின் மதிமுகம் நினைவு வர, சைதன்யன் அவசரமாக அவர்களை நோக்கிச் சென்றான்.

மெல்லிய குரலில் பேசினாலும், பேச்சு தெளிவாகவே காதில் விழுந்தது.

''...... அதுதான் அனுமதி வாங்கிக் கொண்டு ஓடி வந்தேன். ஆனால், இந்த மருத்துவமனைக்கு ஏன் வந்தீர்கள், அத்தை? இங்கே பயங்கரமாகச் செலவாகுமே! இதெல்லாம் பணத்தை மூட்டை கட்டிப் போட்டு வைக்கிறவர்களுக்கான இடம் என்று, கடையில் பேசிக் கொள்வார்களே!'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

ஆக, இங்கேயும் சண்டை கிளப்பத்தான் வந்திருக்கிறாளா? அப்படிக் கணக்குப் பார்க்கிறவள், தகப்பனார்... இல்லை, ஏதோ 'அத்தை' என்று அல்லவா அழைத்தாள். அப்படியானால் மருமகள் உறவு. என்ன மாதிரி மருமகளோ? அக்கா தங்கை மகளாக இருந்து, சும்மா வந்திருந்தால்.. எப்படிப் பொறுப்பேற்பாள்?

அவனது நடை தளர்கையில், சந்தானமூர்த்தியுடைய மனைவி பேசினாள். ''எனக்கும் அதே கவலைதான், சுமிம்மா. முதலில் மாமா இருந்த நிலையில், எதுவுமே புரியவில்லை. இந்தப் பவி வேறு எனக்கு மேல் 'பேபே' என்கிறது! நாங்கள் முழிக்கவும், தானே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லி, இங்கே கூட்டி வந்து, சேர்த்தும் விட்டார். அதற்குப் பிறகுதான்... மாமா உடம்பு ஒரு பக்கம் நெஞ்சைக் கலக்கினால், செலவு என்ன ஆகுமோ என்று, அது வேறு வயிறு கலக்குகிறது! ஆனால், முதலாளி மனிதர்கிட்டே, எங்களுக்குக் கட்டாது, வேறு இடத்துக்குப் போ என்று எப்படிச் சொல்லுவது? அவர் இவ்வளவு செய்வதே பெரிது! உள்ளே மாமா எப்படி இருக்கிறாரோ என்று... அது வேறு...''

''ஷ்! அழாதீர்கள் அத்தை! மாமாவுக்குச் சரியாகி விடும். இது போலப் பெரிய மருத்துவமனைகளில் பார்ப்பதில் அது ஒன்று. என்ன செலவானாலும், எப்படியும் குணப்படுத்தி விடுவார்கள். இப்போது மாமாதானே முக்கியம்? அதனால், செலவு பற்றியும் நினையாதீர்கள். என் சேமிப்பு இருக்கிறது. அது போதாவிட்டாலும், பவிக்காக ஆர்டி கட்டியதில் கடன் வாங்கிச் சமாளித்து விடலாம். இப்போது நீங்கள் தைரியமாக இருப்பதுதான் முக்கியம்,'' என்று தேற்றினாள் அந்த 'சுமிம்மா.'

சைதன்யன் ஒருவாறு அவளது பார்வை வட்டத்துக்குள் வந்துவிட, வேகமாக அக்கம் பக்கம் ஆராய்ந்து விட்டு, ''யார் அத்தை? இங்கே வருகிறாரே..''என்று குரலை மேலும் தணித்துக் கேட்டாள் அவள்.

''இவர்தான் முதலாளி, சுமி. மாமாவுக்கு மருந்து வாங்கப் போனார்,'' என்று அரைகுறையாக அறிமுகம் செய்து வைத்தாள், பெரியவள்.

''வணக்கம்!'' என்று தாமரை மொட்டாகக் கை குவித்தாள். நேராக விஷயத்துக்கு வந்தாள். ''சாரி சார். நீங்கள் மாமாவுக்காக மருந்து வாங்கப் போனீர்கள் என்று தெரியாது,'' என்றாள், மன்னிப்புக் கோரும் தொனியில்.

ஓஹோ! நடந்துகொண்ட முறைக்காக விளக்கம் கூறி, மன்னிப்பும் கேட்டாயிற்றாக்கும்! இதற்கு இவள் சும்மாவே இருந்திருக்கலாம்!

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''யாருக்காக வாங்கினாலும், தேவை ஒன்றாகவே இருக்கக்கூடும்!'' என்றான் அவன், உணர்ச்சி துடைத்த குரலில்.

அவன் எதிர்நோக்கியது போலவே, அவள் முகம் கன்றியது.

''சா, சாரி சார். அத்தை கொஞ்சம் பயந்த சுபாவம் உள்ளவர்கள். அதிலும் மாமாவுக்கு ஒன்று என்றால், கதி கலங்கிப் போவார்கள். பவித்ராவும் சின்னப்பெண். ரொம்பப் பயந்து நடுங்கிக் கொண்டு இருப்பார்களே என்று... ஓடி வந்ததில்.. ப... படி...''

பயந்தாங்குளி! அத்தையின் முன்னிலையில், முழுமையாக விளக்கம் சொல்ல முடியாமல், அவள் தடுமாறியது, சைதன்யனுக்கு ரசிக்கத் தக்கதாகவே தோன்றியது.

இன்னும், கணவருடைய முதலாளியையே சோம்பேறி என்ற கதை வெளியே வரும்போது, அத்தையம்மாள் என்ன செய்யக்கூடும்?

முட்டாளே என்று மருமகளின் முதுகில் ஓங்கி ஒன்று வைப்பாளா?

அல்லது, அதற்குரிய திடமும் இல்லாமல், 'ஐயோ, ஐயோ!' என்று அரற்றி, மயக்கம் போட்டு விழுந்துவிட்டால்?

இரண்டுமே அந்த இடத்தில் அவர்களை அங்கே கூட்டி வந்த அவனுக்குக் கேவலம்தான்!

அத்தோடு, அவள் சீக்கிரமாகப் பொறுப்பேற்பதைப் பொறுத்துதானே, அவனும் அங்கிருந்து கிளம்ப முடியும்?

எனவே, அந்த சுமியை இன்னும் கொஞ்சம் தவிக்க விட்டுப் பார்க்கும் ஆசையை அடக்கிக்கொண்டு, ''பரவாயில்லை. ஒரு திடமான உறவு இவர்களுக்கு மிகவும் தேவையாகத்தான் இருந்தது. நீங்கள் விரைந்து வந்தது, ஒரு வகையில் சரிதான்! திருமதி சந்தானத்தை அழைத்துப்போய், உட்கார வைத்து, ஆசுவாசமாகப் பேசுங்கள்,'' என்று கூறினான்.

சொல்லும்போதே, சைதன்யனின் பார்வை கைக்கடிகாரத்தின் மீது பட்டு மீண்டது.

இவளேனும் சற்று விவரம் தெரிந்தவளாக இருந்தால்...

எதிரே நின்றவள், ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

''நீங்கள் செய்த உதவிக்கு மிக்க நன்றி சார். இனி, நான் பார்த்துக் கொள்கிறேன். அதனால், நீங்கள் வேண்டுமானால்...''

உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ என்கிறாளா?

கிளம்பத் துடித்துக் கொண்டிருந்தவன்தான். ஆனால், இவள் என்ன, என்னைப் போகச் சொல்லுவது என்று, காரணமற்ற எரிச்சல் வந்தது, சைதன்யனுக்கு.

பொறுப்பேற்க ஆள் வந்தாயிற்று என்று கிளம்பி விட லாம்தான்.

ஆனால், கணக்கர் பிழைப்பாரா என்று உறுதியாகத் தெரியாமல் எப்படிப் போவது என்று, இப்போது தோன்றியது.

அத்தோடு, இவள் ஒன்றும், வீட்டின் மூத்த பெண் அல்ல. மாமா, அத்தை என்கிறாளே! யாரோ விருந்துக்கு வந்தவளாகக் கூட இருக்கலாம்! தான்தான் எல்லாம் என்று வெறும் வாய்ப்பெருமை காட்டுகிற வகையோ, என்னமோ? இவளை நம்பி, எப்படிப் பொறுப்பை ஒப்படைப்பது?

ஆனால் அங்கே அவனது எதிர்காலம் பற்றி...

சைதன்யன் எண்ணமிடும்போதே, ''இதுவரை எவ்வளவு பணம் ஆயிற்று என்று சொன்னீர்கள் என்றால், நாளை வரும்போது பாங்க்கில் எடுத்துவர வசதியாக இருக்கும். அதைச் சொல்லிவிட்டு நீங்கள் போக... வந்து... உங்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும். அதை விட்டுவிட்டு அனாவசியமாக இங்கே காத்துக் கிடப்பானேன்?'' என்றாள் அந்தப் பெண் தொடர்ந்து.

என்ன திமிராக விரட்டுகிறாள் என்று தோன்றியது, அவனுக்கு. எதனால் இந்தத் திமிர்?

ஒரு மணி நேரப் பஸ் பயணம் என்றாளே, அதனாலோ என்னவோ, சற்றுக் களைத்து, நலுங்கிய தோற்றம்! இவள் அவனை விரட்டுகிறாளா?

''இல்லாமலும் இருக்கலாம்,'' என்றான் அவன் மொட்டையாக.

அவள் திகைத்து நோக்கவும், ''என் எண்ணிறந்த வேலைகளைப் பற்றிச் சொன்னேன். அதிகப் பிரசங்கித் தனத்துக்கு ஓர் எல்லை இருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று, நீ சொல்லக்கூடாது,'' என்றான் அவன் நிதானமாக.

தலையில் ஒரு குட்டுதான். ஆனால், இதில் வாயை மூடிக் கொள்வாள் என்று அவன் நினைத்ததற்கு மாறாக, ''இரண்டு மூன்று தரம் கைக்கடிகாரத்தைப் பார்த்தீர்களே, அவசரமாகச் செல்ல வேண்டியிருக்குமோ என்றுதான் சொன்னேன்,'' என்று தெளிவாகப் பதில் சொன்னாள் அவள்.

மறைவாகத்தானே பார்த்தான்? ஆனால், இதையெல்லாமா ஒருத்தி கவனிப்பாள்?

முகத்தில் சிவப்பு ஏறாமல் தடுக்க, அவன்தான் முயற்சி பண்ண வேண்டியிருந்தது.

ஆனாலும் எப்படியோ சமாளித்து, ''அது பரவாயில்லை. இப்போது அதிக முக்கியம் உன் மாமாவின் உடல்நிலை தான். அது பற்றி, இன்னும் கொஞ்சம் தெளிவாகத் தெரியாமல், போக முடியாது. டாக்டர் வெளியே வந்ததும், அவரைப் பார்த்துவிட்டே போகிறேன்,'' என்றான், சற்று அமர்த்தலாக.

சொல்லும்போதே, உள்ளே இடித்தது. இப்படிச் சொன்ன பிறகு, டாக்டரைப் பாராமல் போக முடியாதே! அவர் எப்போது வெளியே வருவாரோ?

ஆனாலும், இவளிடம் சொன்னதற்காக இல்லை என்றாலும், பழகிய மனிதர், தந்தை வயது, அவருக்கு ஆபத்து இல்லை என்று அறியுமுன், என்னவோ ஆகட்டும் என்று, எப்படி விட்டுப் போக முடியும்?

ஹோட்டலில், பரசுராமன் குடும்பத்தைத் தந்தைதான் சமாளித்தாக வேண்டும்! அந்தக் குடும்பத்தை விடவும், அவனுடைய தங்கையைச் சமாளிப்பதுதான் கடினமாக இருக்கும். கெட்டிக்காரியே என்றாலும், பேசிவிட்டு யோசிக்கிறவள், அவள். ஆனால் அதைப் பற்றி இப் போது கவலைப்பட்டு ஒரு பயனுமில்லை!

மனதை மேனகையிடமிருந்து திருப்பும் முயற்சி யாகச் சுற்றிலும் பார்த்தபோது, சற்றுத் தள்ளி அமர்ந் திருந்த சந்தானமூர்த்தியுடைய குடும்பம் கண்ணில் பட்டது.

சின்னவள், சுமியின் மடியிலேயே கவிழ்ந்து படுத்து விட, பெரியவளும் அந்த சுமியின் தோளில்தான் சாய்ந்திருந்தாள்.

மடியில் கிடந்த தலையை லேசாக வருடியவாறு, மெல்லிய குரலில், ஏதோ இதமாகப் பேசிக் கொண்டிருந் தாள் 'சுமி.'

மனம் இளகிப் போயிற்று அவனுக்கு.

தகவல் அறிந்ததும், அலுவலில் இருந்து ஓடோடி வந்த பெண்!

முகத்தில் இருந்த களைப்பை நீக்கிவிட்டால், அழ காகக் கூட இருப்பாள்!

சற்று யோசித்துவிட்டு, சத்தமின்றி, மெல்லக் கிளம்பிப் பின் புறமாகப் படியிறங்கிப் போனான்.

காண்டீனில் கிடைத்த பிஸ்கட், மசாலாக் கடலை, சிப்ஸ் போன்ற கொறிப்பதற்கான சிலதோடு, அவளுக்கு ஒரு கப் காபியும் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான்.

சைதன்யன் அருகில் வரவும், எல்லோரும் அவசரமாக எழ முயன்றனர்.

''வேண்டாம். அப்படியே இலகுவாக இருங்கள். டாக்டர் வர எவ்வளவு நேரம் ஆகும் என்று தெரியாது. வயிறு காய்ந்திருக்கும்போது, கவலை இன்னும் அதிகமாகத் தெரியும். காபி உனக்கு,'' என்று கடைசியாக 'சுமி'யைப் பார்த்துச் சொல்லிவிட்டு, கொண்டு வந்த அனைத்தையும் பையோடு அருகில் கிடந்த இருக்கை மீது வைத்தான்.

ஒரு சிறு வேர்க்கடலைப் பாக்கெட்டை மட்டும் எடுத்துக கொண்டு, தன் பழைய இடத்திற்குச் சென்று அமர்ந்தான்.

அவனுக்கும் பசிக்கத் தொடங்கியிருக்கும் போல! எடுத்து வந்த கடலை விரைவிலேயே காலியாகி விட்டது.

உள்ளிருக்கும் விளக்கொளியில், இரவு தொடங்கியது தெரியவில்லை போலும்.

இயல்பாகக் கையைத் திருப்பிப் பார்க்கப் போனவன், சட்டென அந்த உந்துதலை அடக்கிக் கொண்டான், அதை வேறு பார்த்து, ஏதாவது சொல்லப் போகிறாள்!

செல்லை எடுத்து, அதில் மணி பார்த்தான்.

இனி ஹோட்டலுக்குச் சென்று பயனில்லை. தந்தையின் விளக்கத்தை மேனகையுடைய குடும்பம் ஏற்றிருக்குமா? முக்கியமாக, மேனகை?

சொல்வதற்கில்லை. இதுவரை, ஓரிரு வார்த்தை களுக்கு மேல், அவன் அவளுடன் பேசியது இல்லை. அதுவும் மைத்தியுடன் இருக்கும்போதுதான்.

மேஜர் வீட்டுப் பெண்ணைத் தனிமையில் சந்தித்துப் பேசுவது, அப்படி ஒன்றும் சாதாரணமில்லை. அத் தோடு, திருமணப் பேச்சு முடிவானால், அப்புறம்தான் வாழ்க்கை முழுவதும் இருக்கிறதே என்ற எண்ணம் அவனுக்கு.

ஆனால், இன்று பிரச்சனையாகி இருக்குமா?

கொஞ்சம் மனிதாபிமானத்தோடு யோசித்தால், புரி யாமல் இராது. இல்லாவிட்டாலும், எடுத்துச் சொன்னால் புரிந்துவிடும்.

அவன் யோசித்துக் கொண்டிருக்கையில், அவன் அருகே சில பாக்கெட்டுகள் வைக்கப்பட்டன.

அவள்தான், 'சுமி' அவன் வாங்கி வந்தவைகளி லேயே, சிலதைக் கொண்டு வந்து வைத்துக் கொண் டிருந்தாள்.

அவன் நிமிர்ந்து பார்க்கவும், தயக்கத்துடன் லேசாக முறுவலித்து, ''நிறைய வாங்கி வந்துவிட்டீர்கள். அத்தோடு, சாயங்காலத்திலிருந்து கூடவே இருப்பதாக, அத்தை சொன்னார்கள். உங்களுக்கும் பசித்திருக்கும். அதனால்தான், இன்னும் கொஞ்சம் எடுத்து வந்தேன்,'' என்றாள் அவள்.

பசிதான். ஆனால், என் பசி பற்றி, இவள் என்ன சொல் வது என்று அர்த்தமற்று எழுந்த எரிச்சலை வெளிக் காட்டாமல் அடக்கினான்.

அவள் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. இப்போது மட்டுமல்ல. முன்புமே! உறுத்தல் என்னவென்றால், அவனது கடலைப் பாக்கெட் வேகமாகக் காலியானதைக் கவனித்து, இதையெல்லாம் எடுத்து வந்தாளோ என்பது தான்.

ஆனால், இப்போது மறுத்தால், அசட்டுத்தனமாகப் பட்டினி வேறு கிடக்க நேரும்.

கூட இருப்பது மனிதாபிமானம். பட்டினி கிடப்பது, தேவையற்ற சுயமறுப்பு!

ஓர் உப்பு பிஸ்கட் பாக்கெட்டையும், இன்னொரு கடலைப் பாக்கெட்டையும் எடுத்துக் கொண்டு, "எனக்கு இது போதும். தாங்க்ஸ். மற்றதை எடுத்துப் போய், எல்லோரும் உண்ணுங்கள். எதிர்பாராத அதிர்ச்சி என்பதால், யாரும் எதையும் உட்கொண்டிருக்க வழியில்லை. முக்கியமாக நீ! அலுவலில் இருந்து நேரே வந்ததால், ஒன்றுமே உண்டிருக்க மாட்டாய்!" என்றவனின் பார்வையில், அவள் சட்டெனத் துப்பட்டாவைக் கீழிறக்கி விட்டுக் கொள்ள, அவனுக்கு ஆத்திரம் வந்தது.

அவன் என்ன, அவளது வயிறு எப்படி அழகாகக் கொத்துப் போலச் சுருண்டு ஒட்டிக் கிடக்கிறது என்றா பார்த்தான்? எவ்வளவு பசியோ என்று இரக்கத்தோடு நோக்கினால், மேடம் ரொம்பத்தான் அலட்டுகிறாள்!

அவனது வார்த்தைகளை ஏற்றவள் போல, மீதமிருந்த உண்டி வகையோடு, அவள் தன் உறவினரிடம் செல்லலானாள்.

ஒட்டிய வயிறு போல, இடையும் மெல்லியதுதான். இந்த மாதிரி இடையைப் பார்த்துவிட்டுத்தான், பொய்யோ எனும் இடையாள் என்று கம்பர் எழுதினார் போல என்று எண்ணிவிட்டு, அவசரமாகப் பார்வையை அகற்றிக் கொண்டான் சைதன்யன்.

ஏதோ ஒரு வகையில் அவன் சும்மா பார்ப்பதைக் கவனித்துவிட்டு, அதற்கும் ஏதாவது தப்பான விளக்கம் ஒன்றை நினைத்து வைப்பாள். எதற்கு வம்பு?

ஒரு வழியாகக் காத்திருத்தல் முடிவுக்கு வந்தது.

ஐசியு பிரிவிலிருந்து, சந்தானமூர்த்தியின் பொறுப் பேற்றுச் சென்ற மருத்துவர், ஒரு நர்சோடு வெளியே வந்தார்.

சைதன்யனைப் போலவே, சுமியும் டாக்டரிடம் விரைந்து வந்தாள்.

டாக்டர் சைதன்யனைப் பார்த்துப் பேசினார்.

''முதல் இதயத் தாக்குதல், நேரத்துக்கு வந்து விட்டதால், பிரச்சனை இல்லாது போயிற்று. எச்சரிக்கை யோடு இருந்தால், இனியுமே பயமில்லை. பத்து நாட் களில் வீட்டுக்குப் போகலாம். எதெது செய்யலாம், கூடாது என்று நர்சிடம் கேட்டுக் கொள்ளுங்கள்,'' என்றுரைத்தவர். அவனைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு நடந்தார்.

கூடவே நின்றவளை, நர்ஸ் பக்கம் கைகாட்டிவிட்டு சைதன்யன் வைத்தியரைத் தொடர்ந்தான்.

அதென்ன, அவன்தான் சொந்தக்காரன் போல, டாக்ட ரிடம் பேசப் போகிறான் என்று உள்ளூரப் புகைந்த

போதும், வேறு வழியின்றி நின்ற சுமி, முதல் கேள்வியாக, ''இந்தச் சிகிச்சைக்கு இதுவரை எவ்வளவு செலவு ஆகியிருக்கும்?'' என்று நர்சிடம் கேட்டாள்.

இதுபோல, எத்தனை பார்த்துப் பழக்கமோ? முகம் மாறாமல், ''அதெல்லாம் டாக்டர்தான் சொல்லுவார். நாம் உங்கள் வீட்டுப் பெரியவரின் உடல் நல விஷயம் பார்க்கலாம்,'' என்று டாக்டர் சொன்ன விவரம் தெரிவிக்கத் தொடங்கினாள், நர்ஸ்.

நர்ஸ் தந்த சிறு அச்சடித்த புத்தகத்திலும் எல்லாம் இருக்கவே, விளக்கங்கள் அதிகம் சொல்ல வேண்டியிருக்கவில்லை.

நர்ஸ் சென்ற சற்று நேரத்தில், சைதன்யன் வந்து சேர்ந்தான்.

தனியே நின்று கொண்டிருந்தவள், அவனிடம் ஓடிச் சென்று, ''பணம் கட்டினீர்களா? எவ்வளவு?''என்று கேட்டாள்.

''நாளைக் காலையில், தனி அறைக்குப் போய் விடலாமாம், டாக்டர் சொன்னார்,'' என்றான் அவன்.

''நான் பணம் பற்றிக் கேட்டேன்.''

''அந்த விவரம் உனக்கு அவசியமில்லை.''

''அதெப்படி? என் மாமா. அவரது மருத்துவச் செலவை நாங்கள் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்? யாருடைய பிச்சையும் எங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் தொகையைச் சொல்லுங்கள், போதும்,'' என்றாள் அவள் பிடிவாதக் குரலில்.

''ப்ளீஸ்! உன் அத்தை, அவர்கள் மகள் இருவரும் எங்கே?''

''மாமாவைப் போய்ப் பார்க்கலாம் என்றார்கள்...''

''நீ போய்ப் பார்க்கவில்லையா?''

''நீங்கள் வந்ததும், பணக் கணக்குக் கேட்க வேண்டும் என்பதற்காக நின்றுவிட்டேன். சொல்லுங்கள். எவ்வளவு கட்டியிருக்கிறீர்கள்? இன்னும் எவ்வளவு தேவைப் படும்?''

உள்ள தகுதிக்கேற்ப நடந்து கொள்ளாமல், அசட்டுத் தனமாக, என்ன பிடிவாதம் இது? சேமிப்பைக் கொடுக் கலாம், ஆர்டியை உடைக்கலாம் என்று, அவள் அத்தை யிடம் சொன்னது, அவன் காதிலும் விழத்தானே செய்தது?

அவனிடம் பணிபுரியும் எல்லோருக்கும் இது போலச் செய்வது சாத்தியமாகாதுதான். பணியாளர்களுக்காக மருத்துவச் செலவுக்கான காப்பீட்டுக்கு இப்போதுதான், இந்த விரிவாக்கத்துக்குப் பிறகே, ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கிறது. அது இப்போது பயன்படாது.

சந்தானமூர்த்தியை இந்த மருத்துவ மனைக்குக் கூட்டி வந்தது, அவனது சொந்த முடிவு. அந்த வகையில், அது தொடர்பான எல்லாமே அவனது பொறுப்பே! தாமதிக்க முடியாத அவரது உடல்நிலை, பொறுப்பேற்க ஆள் இல்லாத நிலை, இங்கே கிடைக்கும் உயர் தரமான சிகிச்சை முறை எல்லாமே காரணம் என்றாலும், நட்சத் திர ஹோட்டல் போல, இங்கே மிக அதிகமாக ஆகும் செலவை, அந்தக் குடும்பத்தின் தலையில் எப்படிக் கட்டுவது?

இதுவே, அவர்கள் கையில் பணம் நிறைய இருந்தாலும் பரவாயில்லை.

சந்தானமூர்த்திக்கு வரவை மிஞ்சிய செலவு என்பதும், ஓரளவு எல்லோரும் அறிந்த விஷயம். பையனைப் பெரிய படிப்பு படிக்க வைப்பது, பெரிய பெண்ணின் திருமணம் எல்லாம் சக்திக்கு மீறிச் செய்துவிட்டு, அன்றாடச் செலவை, அவர் இழுத்துப் பிடித்துச் சமாளிக்கிறார் என்று கேள்வியுற்றிருந்தான்.

இப்போது, அவருடைய உறவினளான இந்தப் பெண் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிச் சேமிப்பதைப் பிடுங்கிக் கொள்ள, அவன் என்ன மனிதத் தன்மையே இல்லாத ராட்சசனா? சொன்னால் இவளுக்குப் புரியாதா? கணக்கைக்கொடு, கணக்கைக்கொடு என்று, இது என்ன அசட்டுப் பிடிவாதம்?

மருத்துவமனையில், அதுவும் ஐசியு பகுதியில் நின்றுகொண்டு கத்துவது கூடாது என்று, தன்னை அடக்கிக்கொண்டு, "சற்று எரிச்சல் மூட்டாமல் இருக்கிறாயா?" என்று கேட்டான் அவன்.

"நீங்கள் தொகையைச் சொல்லிவிட்டால்..."

வேகமான 'ஹை ஹீல்ஸ்' நடைச் சத்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

"அண்ணா, என்ன இது? அங்கே உன் திருமணப் பேச்சு நடக்கிறது. அதற்கு வராமல், இங்கே எவளோடோ பேசிக் கொண்டு நிற்கிறாயே! உனக்கே அசிங்கமாக இல்லை?" என்று ஆத்திரத்துடன் கத்தினாள் அவனுடைய தங்கை மைத்திரேயி!

# 3

மைத்திரேயி கொதிநிலையில் இருந்தாள்!

இன்றைய ஏற்பாடு, கிட்டத்தட்ட... முழுதாக என்று கூடச் சொல்லலாம், எல்லாம் அவளது முயற்சியில் நடப்பது!

மேனகாவை முதலில் பார்த்தது, அவள் அண்ணியாக வேண்டும் என்று ஆசைப்பட்டது, பெற்றோரிடம் சொல்லித் திருமணம் பேச வைத்தது எல்லாமே அவள் தான்!

அதற்காகவேனும், அவளுடைய அண்ணன் சற்று முன்னதாகவே இங்கே வந்து நின்றிருக்க வேண்டாமா?

அதுதான் இல்லை என்றால், உரிய நேரத்துக்காவது வந்திருக்க வேண்டும்!

என் அண்ணனின் 'பங்ச்சுவாலிட்டி' என்று பீற்றிக் கொள்ளலாம்!

ஓர் ஐந்து பத்து நிமிஷத் தாமதம் என்றாலும் பரவா யில்லை. 'என் அண்ணன் தொழிலில் ரொம்ப பிஸி! அதனால் தாமதம்!' என்று அதைக் கூடப் பெருமையா கவே சமாளித்திருக்கலாம்! ஆனால் இப்படி ஒரு மணி நேரத்துக்கும் மேலாக, ஆளே வரவில்லை என்றால், என்ன சொல்லிச் சமாளிக்க முடியும்?

இத்தனைக்கும் நேரம் தவறாமை பற்றி, அவளுக்கு அவ்வளவு உபதேசிப்பவன்!

அப்படி என்ன தலை போகிற வேலை?

மேனகையுடைய தாத்தாவிடம், தந்தை சொன்னது, அவள் காதிலும் விழத்தான் செய்தது.

அண்ணனிடம் கூலி வாங்கிக் கொண்டு வேலை செய்கிற யாரோ ஒருத்தன்...! சரி, வயதில் பெரியவர் என்பதால், ஒருத்த'ர்' என்றே வைத்துக் கொள்ளலாம்! ஆனால், அந்தக் கூலிக்காரருக்காக, இந்த அண்ணன் போய், மருத்துவமனையில் உட்கார்ந்திருக்க வேண்டுமா? முதலாளி என்கிற பயம், மட்டு மரியாதை விட்டுப் போகாது?

அதுவும், என்ன மாதிரி முக்கியமான சந்திப்பை விட்டுவிட்டு!

அண்ணன் செயல் அவளுக்கே மடத்தனமாகத் தெரிந்தது!

மேனகா வீட்டார் என்ன நினைப்பார்கள்? மேனகாவுடைய தாத்தா, அந்த மேஜர் கிழவர் மூஞ்சி, அப்போதே குடும்பத்தில் அண்ணனை மட்டும் காணோம் என்றதுமே, சுண்டைக்காயாகச் சுருங்கிச் சின்னதாகிப் போய்விட்டது!

அவரைக் குற்றம் சொல்லவும் முடியாது. அவரே ராணுவத்தில் பெரிய பதவி வகித்தவர். அவருக்கு நேரம் ரொம்ப முக்கியம்! அத்தோடு, அவருடைய பேத்தியும், அற்ப சொற்பமானவள் அல்லவே!

எப்பேர்ப்பட்ட பேரழகி!

பெரியவரை நிமிர்ந்து பார்க்கவே அவமானமாக இருந்தது, மைத்திரேயிக்கு!

அதைவிடவும், அண்ணனின் தவறினால், இந்தத் திருமணமே நின்றுவிடுமோ என்று, அவளுக்கு ஒரே பயமாக, படபடப்பாக இருந்தது.

எவ்வளவு நாளாக அவள் ஆசைப்பட்டது, இந்தத் திருமணம்!

மேஜர் தம்பதியோடு, உரிய அலங்காரங்களோடு எழிலரசியாக வரும் மேனகையை, அவ்வப்போது, அக்கம் பக்கத்தில் நடைபெறும் விழாக்களில் மைத்தி ரேயி பார்த்திருக்கிறாள். 'அடேயப்பா, என்ன அழகு!' என்று வியந்திருக்கிறாள்.

இப்படிப்பட்ட அழகியாகத் தான் ஏன் பிறக்கவில்லை என்று தோன்றும்! குறைந்தது, ஓர் அக்கா, தங்கையாக அவள் வீட்டிலாவது பிறந்திருக்கலாமே என்று நினைப் பாள். பக்கத்தில் இருந்து, பார்த்துப் பார்த்து ரசிக்க லாமே!

நீலவானத்தில், எண்ணிறந்த நட்சத்திரங்களுக்கு இடையே தோன்றும் ஒரே நிலவு போல, விழாவுக்கு வந்த அத்தனை பேர் நடுவில் மேனகை இருப்பதாக, அவளது கற்பனை ஓடும்.

விழா நேரம் முழுவதும், அநாகரிகம் என்று தோன் றாத அளவில், அவ்வப்போது மேனகையைப் பார்த்துக் கொண்டே இருப்பாள்.

வீடு வந்து சேரும்வரை, அவளுக்கு வேறு நினைப் பதே சிரமமாக இருக்கும்.

ஆனால் ஒன்று! அந்த அழகியைப் பற்றிய அதே நினைவில் இருந்தாலும், அன்றையக் கொண்டாட்டம் முடிந்து வீடு வந்து சேர்ந்துவிட்டால், மைத்திரேயி, அவளைக்கூட மறந்து போவாள்! மறுநாள் கல்லூரிக்குச் செல்லத் தயாராவது, போவது, வருவது, பாடங்கள், குடும்பத்தோடு ஏதாவது அலட்டுவது என்று அன்றாடக் கடமை, நிகழ்வுகளில், மற்றது மறந்து போகும்.

விழாக்களுக்கு உடன் போவதே, பாதி தாயின் கட்டாயத்துக்காகத்தானே? உறவு, நட்பு என்று எல்லோருடனும் பேசிப் பழகத் தெரிய வேண்டும் என்று, மஞ்சுளா மகளை இழுத்துப் போவாள். அங்கே இன்னின்னாருடன், இன்னின்ன விதமாகப் பேச வேண்டும், உடையில் கவனமாக இருக்க வேண்டும்.. இப்படிப் பல 'வேண்டும்'களை நினைத்துக் கொண்டே இருக்க நேரும்போது, அப்பாடி முடிந்தது என்று அத்தோடு சேர்த்து, விழாத் தொடர்பான மற்றதையும் மறப்பது இயல்புதானே?

ஆனால், அடுத்தொரு பொது நிகழ்ச்சி என்றால், உடனே அந்த அழகியைப் பார்ப்பதுதான், மைத்திக்கு மிக முக்கியமானதாகத் தோன்றும். அவள் வர வேண்டுமே என்று தவிப்பதும், வந்துவிட்டாள் என்று மகிழ்வதும், அவளுக்கு வழக்கமாகியிருந்தது.

இப்படி இருக்கையில், ஒரு விழாவில், அந்த எழிலரசி தானாக வந்து அவளிடம் பேசவும், மைத்திக்குத் தலை சுற்றிப் போயிற்று!

அடியோடு அன்னியள் அல்லதான் என்றாலும், இருவருக்குள்ளும் ஒழுங்கான அறிமுகம் இதுவரை நடைபெற்றது இல்லை!

மேஜரிடம் உள்ள மரியாதை காரணமாக, அவருடைய பேத்தியைச் சாதாரணமாக அழைத்துப் போய்ப் பேசவோ, அடுத்தவருக்கு அறிமுகம் செய்து வைக்கவோ, யாருக்கும் தைரியம் வந்ததில்லை போலும். அவரவர் பழக்கப் பட்ட கும்பலோடேயே சுற்றிவிட்டுக் கிளம்பிப் போய் விடுவதுதான் பழக்கமாக இருந்தது.

அதேபோல அவளும், எப்போதும் தன்னுடைய தாத்தா, பாட்டியை விட்டு நகராமல், ரொம்ப நல்ல பெண்ணாக, அடக்க ஒடுக்கத்துடன், அவள் வீட்டுப் பெரியவர்கள் கூடவே அமர்ந்திருந்ததால், மற்றவர்களிடம் போல, அவளோடு கலந்து பழகவும் யாருக்கும் இயலாது போயிற்று!

அன்றும் அப்படித்தான். ஒரு புதுமனை புகுவிழா. அதிகாலையில் சடங்குகளை முடித்துவிட்டுப் பத்து மணிக்கு மேல் எல்லோரையும் கலந்துரையாடி மகிழவும், கூடவே விருந்துக்கும் அழைத்திருந்தார்கள்.

வழக்கம்போலப் பழக்கப்பட்ட சிலருடன்தான் மைத்திரேயி உரையாடிக் கொண்டிருந்தாள். அன்று சேர்ந்தவர்கள் பெரும்பாலும் உடன் பயின்றவர்கள்.

'திருப்தி' சூப்பர்மார்க்கெட் வீட்டுப்பெண், சகுந்தலா. பத்துவரை அவளோடு படித்தவள். அசையும் போதெல்லாம் மைத்தியின் காதுகளில் ஊசலாடி, ஒளிக் கற்றைய வாரி இறைத்த வைர 'டிராப்'பைப் பார்த்து வியந்து போன சகுந்தலா, அவளுடைய தாயை அழைத்துக் காட்டினாள்.

எங்கே வாங்கியது, என்ன என்று விவரம் கேட்ட போது, பிறந்த நாள் பரிசாக அண்ணன் கொடுத்தது,

திருச்சியில் வாங்கியது என்பதற்கு மேல் விவரம் தெரியாது என்று மைத்திரேயி தெரிவிக்க, அதற்கு மேல், பேச்சு சைதன்யனிடம் திரும்பியது.

சூப்பர் மார்க்கெட் குடும்பத்தில் சைதன்யனோடு படித்த பையன்களும் உண்டு.

முதலில் தம்பி, அவன் பின் தங்கிவிட, அடுத்து, அவனுடைய அண்ணனும், சைதன்யனுடைய வகுப்புத் தோழன் ஆனான். பிறகு, அவனையும் தாண்டிக் கொண்டு சைதன்யன் மேலே சென்றுவிட்டான்.

நல்லவேளையாக, சகுந்தலா படிப்பில் அண்ணன் மாரைக் கொண்டிருக்கவில்லை.

படிக்காத பிள்ளைகளோடு போராடித் தோற்ற தாயாருக்கு, சைதன்யனிடம் அப்படி ஒரு மரியாதை! எப்போதும் அவனைப் பற்றி மிக உயர்வாகவே பேசு வாள்.

அப்போதும், அதையே பின்பற்றி, ''உன் அண்ணன், சைதன்யன் வாங்கியது சோடை போகுமா? இந்த வயதில், தானாக ஒரு தொழிலைத் தொடங்கி, வளர்த் தும் விட்டான் என்றால், அது சும்மாவா நடக்கும்? இரண்டாவது ஃபாக்டரி திறந்திருக்கிறானாமே! கெட்டிக் காரன். தொடங்குகிறபோது, அப்பா பேரில் தொடங் கேன் என்று ஐடியா கூடக் கொடுத்தேன். ஆனால், அது சரிவராது என்று விட்டான். தொழிலில் பொறுப்புணர்வு முழுதாக இருக்காதாம். அப்பா பார்த்துக் கொள்வார் என்று, லாப நஷ்டம் பற்றிய பயம் விட்டுப் போகுமாம்! ஒரு வகையில், அதுவும் சரி போலத்தான் தெரிகிறது. இந்தச் சக்குவுடைய அண்ணன்மாரைப் பார்! கடைக்கு

இது நல்லது, இது கெட்டது என்று என்னமாவது தெரிகிறதா? அதே சமயம், சைதன்யன், எல்லோரும் அண்ணாந்து பார்க்கிற விதமாகச் செய்து காட்டி விட்டானே!'' என்று என்னவோ, தன் மகனைச் சொல்வது போலச் சொல்லிப் பெருமைப்பட்டாள், அந்தப் பெண்மணி.

மைத்திரேயிக்கும் ரொம்பப் பெருமைதான்.

அங்கங்கே அருகில் நின்றவர்கள் காதில் விழுந் திருக்குமா என்று பாராதது போலச் சுற்றிலும் பார்த்தாள்.

சற்று அருகிலேயே, யாரிடமோ, எதையோ விவாதித்தவாறு மேஜர் நின்றிருந்தார். மனைவி, பேத்தி யோடு!

மயில் கழுத்து வண்ணப்பட்டில், குந்தன் வேலை செய்த ரவிக்கையும் சேலையும் அணிந்து அழகான மயிலாகவே நின்ற அந்த அழகியின் காதுகளை, அவளுடைய அண்ணனின் பெருமை எட்டியிருக்குமா என்று, மைத்தியின் யோசனை ஓடிற்று.

ஆனால், அவள் முகத்தில் அது போல எந்தவித உணர்வும் இல்லை!

அப்படி ஏதாவது கேட்டு, அதற்காகவாவது, அந்தப் பேரழகி, தன்னிடம் வந்து பேசக்கூடாதா என்றிருந்தது, அவளுக்கு.

அந்த ஆசையில், அவளுக்குத் தன் தாயிடம் கூடக் கோபம் வந்தது.

நாலு பேரிடம் பழகத் தெரிய வேண்டும் என்று சொல்லியே, படிப்பைக் கெடுத்துக் கொண்டு, சும்மா சும்மா

இந்த மாதிரி விழாக்களுக்கு 'வாவா' என்று இழுத்து வருவது. அப்புறம், 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டு கிற' மாதிரி, பழைய ஆட்களிடமே பேசிச் சிரித்து விட்டுத் திரும்பிவிடுவது!

இதற்கு வராமல் வீட்டிலேயே இருந்திருக்கலாம்! ஆனால், வைர 'டிராப்'பைப் பெருமையாக அணிந்து காட்டியிருக்க முடியாது! ஆனாலும்...

''இந்த வைர 'டிராப்' உங்களுக்கென்றே தனியாக வடிவமைத்துச் செய்ததா? அவ்வளவு பொருத்தமாக இருக்கிறதே!'' என்று காதருகே ஒரு கிள்ளைக் குரல், கொஞ்சலாகக் கூற, திகைப்புடன் திரும்பிப் பார்த்த மைத் திரேயிக்கு மயக்கம் போட்டுக் கீழே விழாத குறைதான். அந்த அளவுக்குத் தலை சுற்றிவிட்டது!

ஏனெனில், அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி, அந்த அழகு மயில்!

சாப்பிட உட்கார்ந்த போது, கல்லூரித் தோழி அபூர்வா தானே பக்கத்தில் உட்கார்வதாக வந்தாள்.

அவள் இப்போது எங்கே போனாள்?

மைத்திரேயி சுற்றும் முற்றும் பார்ப்பதைக் கவனித்து, ''அந்தப் பெண் அபூர்வா என் பாட்டிக்குத் தெரிந்த வளாம். அவளிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று பாட்டி அழைத்தார்கள். பாட்டியோடு பேசிக் கொண்டு, அவர்கள் பக்கத்திலேயே அவள் உட்கார்ந்துவிட்டாள். உங்களுக்கு அவள்தான் அருகில் அமர வேண்டும் என்றால், நான் போய், அங்கே இருந்து கொண்டு அவளை இங்கே உங்களிடம் அனுப்பட்டுமா?'' என்று

லேசான வருத்தம் கலந்த தொனியில், புதியவள் பேசினாள். ''உங்களுக்குப் பேச வசதியாக இருக்கும்!''

ஏதோ தோன்றக் கூர்ந்து பார்த்தால், நிலா முகத் தாளின் கண்களில் நீர் திரையிட்டிருந்தது.

தான் மக்கு மாதிரி விழித்துக் கொண்டிருந்ததில், அவ ளோடு பேசப் பிடிக்கவில்லை என்று எண்ணிவிட் டாள்!

பதைத்துப் போய், ''அதெல்லாம் வே... வேண்டாம். அவள் எங்கே போனாள் என்று தேடிப் பார்த்தேன்! என்னை விட்டுவிட்டுச் சாப்பிட்டாயா, என்று சண்டை போடுவாள். இப்போது, அவளே போய் வேறு இடத்தில் உட்கார்ந்துவிட்டாள் என்றால், எனக்கு எவ்வளவோ நிம்மதி!'' என்று முறுவலித்தாள் மைத்திரேயி. ''உங்க ளோடு பேச வேண்டும் என்று, எனக்கு ரொம்ப நாளாக ஆசை! இன்றைக்குத்தான் முடிந்திருக்கிறது,'' என்றாள் மகிழ்ச்சியோடு.

''எனக்கும் எல்லோருடனும் பேசிப் பழக ஆசைதான். ஆனால், அது எப்போதும் ஆபத்தாக முடிந்து விடுவ தால், பாதுகாப்பாக நான் பாட்டி அருகிலேயே ஆணி அடித்தாற்போல அமர்ந்துவிடுவது. இன்றைக்குத்தான், அபூர்வா பாட்டி பக்கத்தில் உட்கார்ந்து விட்டதால் அங்கே இடம் இல்லாமல், இங்கே வந்தேன்.''

என்ன ஆபத்து என்று கேட்க வாயெடுத்துவிட்டு, கேளாமலே வாயை மூடிக் கொண்டாள், மைத்திரேயி.

அது என்ன விஷயமோ, என்னவோ? அவளது சொந்த விஷயத்தில் மூக்கை நீட்டுவது போல ஆகிவிடக் கூடாதே!

பரிமாற வந்தவரிடம், ''சோறு கொஞ்சமாக!'' என்று கூறிவிட்டு, யோசனையோடு ஓரக் கண்ணால் பார்த்தால், மேனகா பளீரென்று மின்னலடிப்பது போல, ஒரு புன்னகை செய்தாள்.

திகைத்து நோக்கியவளிடம், ''அதுவே, இங்கே உட்கார நேர்ந்ததே பெரிய அதிருஷ்டம் போலத் தோன்றுகிறது! உன்... உங்களைப் போல ஒருவரோடு பழக வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே!'' என்றுரைத்து இன்னொரு முறை மின்னலடித்தாள்.

ஒருவாறு மயக்கம் தெளிந்து, ''அதிருஷ்டக்காரி நான் தான். இவ்வளவு அழகான பெண்ணுடன் பேசக் கொடுத்து வைத்திருக்கிறதே!'' என்றாள் மைத்திரேயி.

ஆனால், மேனகையின் முகம் உடனே வாடிப் போயிற்று. ''தயவு பண்ணி, அழகைப் பற்றி மட்டும் பேச வேண்டாம், மைத்திரேயி. அதனால் நான் அனுபவித்திருக்கும் துன்பங்களை எண்ணிப் பார்க்கும்போது, சாதாரணமாகப் பிறந்தேனில்லையே என்று எவ்வளவு ஏக்கமாக இருக்கிறது, தெரியுமா?'' என்றாள் அவள்.

மீண்டும் மைத்திரேயி குழம்பிப் போனாள்.

முன்பானால், எல்லோருடனும் பேசிப் பழகுவதே ஆபத்தாகி விடுகிறது என்றாள். இப்போதானால், அழகினால் துன்பம் என்கிறாள். ஏன்? அழகான பெண் என்று, யாரேனும் தூக்கிப் போய்... என்னமும் பண்ணி... சேச்சே! அப்படி இராது. கண்ட கதைகளைப் படிக்கக் கூடாது என்று அம்மா சொல்வது சரிதான். என்ன மடத்தனமான கற்பனை எல்லாம் வருகிறது!

ஆனால், அது என்ன துன்பமாக இருக்கக்கூடும்?

மற்றவர்களின் சொந்த வாழ்வு பற்றித் தூண்டித் துருவிக் கேட்கக் கூடாது என்பது, அவளுக்குப் பால பாடம்!

தன்னை அடக்கிக் கொண்டு, அவள் உணவில் கவனம் செலுத்த முயன்றபோது, மேனகை ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

''சில சமயம், இப்படி அடக்கி அடக்கி வைத்து, நெஞ்சே வெடித்து விடும்போல, ஒரே வேதனையாகி விடுகிறது. வாய் விட்டுச் சொன்னால் நோயே விட்டுப் போய் விடுமாம்! மனம் திறந்து பேசக் கூட யாரும் இல்லாமல்... என்ன வாழ்வு இது!'' என்றாள் சலிப்புடன்.

நெய்ச் சோறும் பட்டாணிக் குருமாவும் சுவையாக இருந்தது. இவள் ஒரு பிடி கூட உண்ணாமல், வருந்திக் கொண்டிருக்கிறாளே!

மனம்விட்டுப் பேசக் கூட ஆள் இல்லை என்று...

இடது கையால் அவளது தோளைத் தொட்டு, ''பாருங்கள் மேனகா, உங்களைப் பார்ப்பதற்கே எனக்கு மிகவும் பிடிக்கும். உங்களுக்கும் என்னைப் பிடித்திருந் தால், சினேகிதியாக என்னை நம்பி, நீங்கள் எதையும் சொல்லலாம்! அது என்னை விட்டு எங்கேயும் போகாது! அம்மாவிடம் கூடச் சொல்ல மாட்டேன்,'' என்றாள் மைத்திரேயி.

''ஐய்யோ! பெண்கள் அம்மாவிடம் எதையும் மறைக் கவே கூடாதும்மா! இதுவும் அப்படி ஒன்றும் பெரிய ரகசியமில்லை, மைத்திரேயி. என்னவோ, இது பற்றி

எனக்குச் சொல்லப் பிடிப்பது இல்லை. நடந்த விஷயம்தான். ஆனால் ஒருவேளை, பெருமை பேசுவதாக யாரும் எண்ணிக் கொள்வார்களோ என்ற பயம் எனக்கு. நான் அதைப் பெருமையாக நினைத்ததே இல்லை என்றாலும்... சொல்லப்போனால், இந்த அழகால் எப்போதும் எனக்குக் கஷ்டம்தான்...'' என்று தயக்கத்துடனேயே தொடங்கி, அதே தயக்கத்துடனேயே எல்லா விவரங்களையும் மேனகா ஒப்பித்து முடித்தாள்.

பெண்களோடு கூடப் பழக முடியாமல், அந்தப் பெண்களுடைய அண்ணன், ஒன்றுவிட்ட அண்ணன், சித்தப்பா என்று, உடனே அவர்களுக்காகத் தூது வந்து விடுவார்களாம்! அந்தப் பெண்ணோடு பல சமயம், அவன்களும் வந்து நிற்பார்களாம். தினமும் வாசலில் பூச்செண்டோடு நாலைந்து பேர் நிற்பார்கள் என்று கேட்கவும், மைத்திரேயி சாசராகக் கண்களை விரித்தாள்.

''சென்னைக்காரர்களுக்குத் துணிச்சல் அதிகம்தான் போல! இங்கெல்லாம் அப்படி யாராவது செய்தால், எல்லோருமாகச் சேர்ந்து, முதுகில் டின் கட்டி விடுவார்கள்!'' என்றாள் சற்றுப் பெருமையாக.

''அதனால்தானே, என் அப்பா என்னை இங்கே தாத்தா வீட்டுக்கு அனுப்பி வைத்திருப்பதே! இங்கேயே இரு. ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு, அப்புறமாகச் சென்னைக்கு வா. போதும்... என்று சொல்லி விட்டார். ஆனால்... எனக்கு ஒன்றும் திருமணத்துக்கு அவசரம் இல்லை என்றாலும், அப்பா தாத்தா எல்லோரும் எனக்குச் சீக்கிரமாகக் கல்யாணத்தை முடித்துப்

பொறுப்பைத் தீர்த்து விட வேண்டும் என்று எண்ணு கிறார்கள். அதென்ன அவ்வளவு எளிதா என்றால், பெரிய பெரிய பணக்கார இடங்களில் கேட்கிறார்கள். நீ தலையாட்டினால் போதும் என்கிறார்கள். ஆனால், பணமா பெரிது? நல்ல குணம் படைத்த குடும்பமாக இல்லாவிட்டால், ஒத்துக் கொள்ள மாட்டேன் என்று, பாட்டியிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால், அப்பா, தாத்தாவோ பணமும் கட்டாயம் இருக்க வேண்டும் என் கிறார்கள். பணம், குணம் இரண்டும் சேர்ந்து இருப்பது, ரொம்பக் கஷ்டம் என்றும், எங்கள் வீட்டில் எல்லோரும் சொல்லுகிறார்கள். கடைசியில், என் தலையில் என்ன தான் எழுதியிருக்கிறதோ?'' என்று கவலையாகச் சொன்னாள் மேனகா.

மைத்தியின் மனதில் வித்து விழுந்தது அப்போதுதான் எனலாம்.

இவள் விரும்புகிற குணமும், இவளுடைய உறவினர் விரும்பும் பணமும் சேர்ந்து, அவள் வீட்டிலே இருக் கிறதே!

பணத்தை விடக் குணத்தைப் பெரிதாக எண்ணும், இவளும் குணவதியாகத்தான் இருக்க முடியும்!

அக்கா தங்கையாகப் பிறந்திருந்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாமே என்று எண்ணினாளே! அண்ணி யாக வந்தாலும் அப்படித்தானே? ஆனால், இந்த அண் ணனோ, திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறான்! இந்த மேனகாவே சொல்லுகிற மாதிரி, யார் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ?

இப்படியெல்லாம் எண்ணினாலும், வழக்கம் போலவே, விழா முடிந்து வந்ததும், அடுத்த நாள் பரிட்சைதான் அவள் மனதில் இருந்தது.

ஆனால், அவளை அடியோடு மறந்துவிட முடியாமல், அடுத்த சந்திப்பின் போது, மேனகா அவளுக்கு ஓர் அரிய பரிசை அளித்தாள்.

சின்னதாக ஒரு தந்த விசிறி. விரல் நீளத்தில், மடக்கிக் கைப்பையுள் வைத்துக் கொள்கிற மாதிரி, அழகான வேலைப்பாட்டுடன் விசிறி பளபளத்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் கேரளா சென்றபோது, அதன் வேலைப்பாட்டில் மயங்கி வாங்கினாளாம். ரொம்பப் பிடித்தமான கலைப்பொருள். இப்போது நட்பின் அறிகுறியாக, மைத்திரேயிக்குக் கொடுக்கிறாளாம்!

அதேபோல, ஹைதராபாத் முத்து வளையல் ஒன்று வந்தது. அப்புறம், கண்ணாடித் துண்டுகள் பதித்த பெட்டி ஒன்று!

மைத்தியை விட்டுப் பிரிந்து போகவே, அவளுக்கு மனமில்லையாம். அவளால்தான், மைத்தி கூடவே இருக்க முடியவில்லை என்றாலும், அவள் விரும்பிச் சேர்த்த சிறு சிறு கலைப் பொக்கிஷங்களாவது, மைத்தியோடு இருக்கட்டுமே!

ஏக்கம் ததும்பிய பார்வையோடு மேனகா சொன்ன போது, ''ஏன், நீங்களுமே என் வீட்டுக்கே வந்து விடுங்களேன்! என் அண்ணியாக!'' என்று தன்னையறியாது சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டு, மைத்தி விழித்தாள்.

இது குடும்பத்தின் கடைக்குட்டியான அவள் எடுக்கக் கூடிய முடிவில்லையே!

ஆனால், அதற்குள் அவசரமாக அவளது வாயைப் பொத்தினாள் மேனகை.

''மைத்தி, ப்ளீஸ்! நாமெல்லாம் சின்னப் பெண்கள். இது போலப் பேசவே கூடாது. வேண்டுமானால், நம் ஆசையை, நம் வீட்டுப் பெரியவர்களிடம் எடுத்துச் சொல்லலாம். அப்புறம், அவர்கள் வந்து பேச வேண்டிய பேச்சு இது!'' என்று வழி முறையை எடுத்துச் சொன்னாள்.

முறைமையை எடுத்துச் சொன்னாளே தவிர, மேனகை மறுக்கவில்லை என்று உணர்ந்த மைத்திரேயி வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

விழி தாழ்த்தி, ''யோசித்துப் பார், மைத்தி. தாத்தாவின் விருப்பம் போல, யாரோ ஒரு பணக்காரனை மணந்து, அறியாதவர்கள் நிறைந்த வீட்டுக்குச் செல்வதைவிட, அன்பும் அழகுமே உருவான நீ என் நாத்தனாராக அமைந்தால், வாழ்கை எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்றாள் அவள்.

''நா...ன்... நானா அழகு? உங்கள் பக்கத்தில் சூரியனுக்கு முன் மின்மினி! என்னைப் போய்...'' என்று மறுப்பாகப் பேசினாலும், மைத்திக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

இந்தப் பேரழகி அவளையும் அழகு என்றுவிட்டாளே!

அன்றிலிருந்து வீட்டில் எல்லோரையும் துளைத்தெடுத்து, மேனகா, சைதன்யன் திருமணப் பேச்சை,

இந்த அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருப்பவள், மைத்திரேயிதான்.

குடும்பத்தில் எல்லோருக்குமே மேனகையிடம் திருப்திதான்.

முதல் ஈர்ப்பு, மேனகையின் அழகுதான். ஆனால் மேஜருடைய பேத்தி என்பது நந்தகுமார், மஞ்சுளாவைத் திருப்திப்படுத்தியது.

இப்போது திருமணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்த சைதன்யனைத் தங்கையின் பேச்சும், மேனகையின் அழகும் சரிப்படுத்தின.

இன்று எல்லோரும் சந்தித்துப் பேசித் திருமணத்தை உறுதி செய்வது, அதுவும், எப்போது, எங்கே என்பன வற்றைத்தான் என்கிற அளவுக்கு, விஷயம் வந்திருந் தது.

இந்தச் சமயத்தில்... என்னவோ சொல்வார்களே, வெண்ணெய் திரண்டு வரும்போது பானை உடைந்தது போல என்று, அது போல, சம்பந்தமே இல்லாத யாரோ ஒருவருக்காக, எல்லாம் அப்படியே நின்று போகுமா? கூடவே கூடாது!

அபசகுனமாக எண்ணினாரா? அல்லது, சைதன் யனைப் பற்றித் தவறாக நினைத்தாரோ?

மேஜரின் முகம் கடுப்படித்தது! பிறகு அவர் சரியாகப் பேசவே இல்லை.

தந்தை சொன்ன காரணத்தை அவர் ஏற்கவில்லை என்பது, நன்றாகத் தெரிந்தது!

மேனகை கூட, ''உன் அண்ணனுக்கு உண்மை யாகவே விருப்பம்தானா? அல்லது தவிர்க்கிறாரா? தவிர்ப்பதற்கு வேறு ஏதாவது காரணம்...''என்று கேட்டு விட்டாள்.

ஏன், மைத்தியாலேயே நம்ப முடியவில்லையே!

அண்ணன் நல்லவன் என்பது அவளுக்குத் தெரியும், என்றாலும், அப்போதைக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லாமல் இருந்தவன்தானே? தங்கைக்காகச் சம்மதித்து விட்டு இப்போது பின்னடிக்கிறானா?

ஆனால், மேனகையை எப்படி ஒதுக்க முடியும்? அவளை ஒதுக்குவது என்றால்?

சந்தேகம் தெளிவதற்காகத்தான் அண்ணன் சொன்ன மருத்துவமனைக்கு, அவள் கிளம்பி வந்தாள். அவர்கள் குடும்பத்துக்குப் பழக்கமான அந்த மருத்துவமனையில், அண்ணன் யாரையோ சேர்த்துவிட்டு, மெய்யாகவே, அங்கேயேதான் காத்துக் கொண்டுதான் கிடக்கிறானா? அவளுக்குத் தெரிந்தாக வேண்டும்!


அண்ணன் அங்கேதான் இருந்தான். ஆனால், தனி யாக அல்ல.

அங்கே ஒரு பெண்ணுடன் அவன் தனித்து நின்று பேசிக் கொண்டிருந்தது, அவளுக்குத் தாங்க முடியாத அதிர்ச்சியாக இருந்தது.

இன்றைய கூத்துக்கு இவள்தான் காரணமா என்று திடுமெனத் தோன்ற, அந்த அதிர்ச்சியில்தான், எங்கே இருக்கிறோம் என்பதை மறந்து, கத்திவிட்டாள்.

ஆனால், அதற்குச் சைதன்யன் கொடுத்த தண்டனை, அவளுக்கு இந்தப் பிறவி முழுமைக்கும் மறக்காது!

அந்தப் பெண்ணின் முன்னிலையில் ''வாயை மூடு, முட்டாள்!'' என்று பாம்பாகச் சீறி, அவளைக் கேவலப் படுத்தி விட்டானே!



# 4

தங்கையிடம், சைதன்யனும் இதை எதிர்பார்க்க வில்லை.

வீட்டில் எல்லோருக்கும் செல்லம் என்பதால், சட் டென்று யோசியாமல் நினைத்ததைப் பேசுகிற பெண் தான் என்றாலும், இடம் பொருள் என்பனவும் இருக் கின்றன அல்லவா? ஒரு மருத்துவமனையில், அது வும் ஐசியு பகுதியில் நின்று கொண்டா, இப்படிக் கத்துவது?

'ஸ்டாஃப்' அறையிலிருந்து யாரோ எட்டிப் பார்க் கவும், அவனுக்கு இன்னும் அவமானமாகிப் போயிற்று!

அங்கிருந்து யாராவது வந்து, இங்கே சத்தம் போடக் கூடாது என்று சொல்ல நேர்ந்தால், எவ்வளவு கேவல மாக இருக்கும்?

அந்த அளவுக்குப் பண்பாடு தெரியாதவளா, அவ னுடைய தங்கை?

அதிலும், முகமறியாத அந்த அன்னியப் பெண் ணையும் தரக்குறைவாகப் பேசி, அவள் முன் அவனைத் தலை குனிய வைத்துவிட்டாளே!

இருந்திருந்து, அவள் முன்! சும்மாவே, ஏதாவது ஒன்றைச் சொல்லி, எதிர்பாராமல், அவனை இடித்துக் கொண்டிருப்பவள்.

ஆனால், கடுமையாகப் பேசியறியாத அண்ணன் சீறவும், மைத்திரேயி திகைத்து, மிரண்டு, வாயடைத்து நின்றாள்.

''அண்ணா...'' என்றவளுக்கு, அச்சத்தில் மேலே பேச வாய் வராமல், நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

ஆனால், அவள் அண்ணன், அவளைப் பேச விடுவ தாகவும் இல்லை. ''போதும். இப்போது பேசாதே. மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமுன், வாயைத் திறக்கவே திறக்காதே! எங்கே வந்து, என்ன பேசுவது என்று இல்லையா? மருத்துவமனை! ஐசியு எதிரில்! இரவு நேரம் என்று கூடப் பாராமல், இந்தக் கத்தலா? இன்னும் அறியாதவர்களைப் பற்றி இளப்பம் வேறு! அம்மா கற்றுத் தந்த நாகரிகம் ஒன்று கூடவா மனதில் இல்லை? உன்னால் இப்படி ஒரு தலை குனிவை நான் ஒரு போதும் எதிர்பார்த்ததே இல்லை, மைத்தி!'' என்று தணிந்த குரலிலேயே தொடர்ந்து கண்டித்தான்.

அண்ணனின் தணிந்த குரலே, தான் செய்த தவறைத் தங்கைக்குப் பாதி உணர்த்திவிட்டது. அந்தக் கோபத் திலும், அவன் குரலை உயர்த்தவில்லையே!

கத்திக் கித்திக் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்வ தெல்லாம் அவள் வீட்டில் கிடையாது. கோபம், வருத்தம் போன்ற எதிர்மறை உணர்வுகளைக் கூட, நாசூக்காக

எப்படி உணர்த்துவது என்று அவர்களுடைய தாயார் கற்றுத் தந்திருக்கிறாள்.

இரண்டு நாட்கள் பேச்சைக் குறைத்துக் கொண்டாலே, கோபமும் தாபமும் தெளிவாகத் தெரிந்துவிடாதா? கண்ட வார்த்தை சொல்லி, ஆறாத காயங்களை மனதில் ஏற்படுத்தி, வாழ்வையே கெடுத்துக் கொள்வானேன், என்பாள்.

அதேபோல, உரக்கப் பேசுவதற்கும் ஒரு விளக்கம் சொல்லுவாள். ஓஷோ சொன்ன விளக்கமாம். ஒருவர் தூரத்தில் இருக்கும்போதுதான், அவரிடம் நாம் சத்தம் போட்டுப் பேசுவோம். அதேபோல, மனதளவில் வெகு தூரம் விலகிப் போய்விடும் போதுதான், உரக்கப் பேசித் திட்டத் தோன்றுமாம்!

இதைக் கேட்ட பிறகு, கோபமாகக் கத்திப் பேச யாருக்கு மனம் வரும்?

அந்தத் தாயின் வளர்ப்பு கிடைத்தும், மைத்திரேயி பேசியதும் கத்தியதும் ரொம்பவே அதிகப்படிதான்.

ஆனால், அண்ணன் மட்டும் யாரோ ஒருத்தி முன்னிலையில், அவளை அதட்டலாமா? சத்தத்தை உயர்த்தவில்லையே தவிர, சீறல் சீறலேதானே?

எல்லாம் அருகில் நின்று, ஒன்றும் புரியாத அப்பாவி மாதிரி விழித்துக் கொண்டிருக்கிறாளே, இவளால் வந்தது. அந்தக் கூலிக்காரருக்கு மகள் போல! இந்தச் சாக்கில், அண்ணனை வளைக்கத் திட்டமாயிருக்கும்!

இந்த ஒல்லிக் குச்சி என்னதான் திட்டமிட்டாலும், இந்த மைத்திரேயியுடைய அண்ணியாக, மேனகை

தவிர, வேறு யாரும் வரவே முடியாது என்று, சீக்கிரமே இவள் தெரிந்து கொள்வாள்!

ஆனால், இவள் காது கேட்க, அண்ணன் திட்டிவிட்டானே! இப்போது இவள் தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்ள மாட்டாளா?

சற்று யோசித்து, ''சாரிண்ணா!'' என்று மன்னிப்புக் கேட்டாள் தங்கை. ''எந்த வித உறவும் இல்லாத ஒருவரிடம் பரிதாபப்பட்டு, வரப்போகும் அண்ணி வீட்டாரை முழு நேரமும் காத்திருக்க வைத்து, அவமதித்து விட்டீர்களா? நீங்கள் வராமல், அண்ணி மேனகை முகம் அப்படியே வாடிப் போய்விட்டது. அண்ணியுடைய தாத்தா வேறு உம்மென்று.. அந்த வருத்தத்தில் சட்டென்று வாயில் வந்ததைப் பேசிவிட்டேன். திரும்பவும், சாரிண்ணா. இப்போது நான் போகிறேன். முடிந்தவரை, கொஞ்சம் சீக்கிரமாக வந்து விடுங்கள். அம்மா சொல்லச் சொன்னார்கள்,'' என்றவள், அதற்கு மேல் நில்லாமல், வந்த வழியே விரைந்து சென்றுவிட்டாள்.

வரப்போகும் அண்ணி! இருவருக்குமே நன்றாக உறைக்கும்படி, இரண்டு தடவை சொல்லியாயிற்று. இத்தோடு புத்தி வந்தால், அவளுக்கு நல்லது! இல்லா விட்டால், ரொம்ப கஷ்டப்பட்டுப் போவாள்!

கஷ்டப்படுவது அவளது விதி என்றால், நன்...றாகப் படட்டும்!

மேனகை மாதிரி ஒருத்திக்குப் போட்டியாக வர வேண்டும் என்று எண்ணினால் பட வேண்டியது தானே?

என்னதான் முயன்றும், எதிர்காலத்தையே உறுதிப் படுத்தும் விருந்துக்கு வராமல், சைதன்யன், தன் ஊழியர் ஒருவருக்கு உதவப் போனான் என்பதை, அவனுடைய தங்கை மைத்தியினால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

அந்த சந்தானமூர்த்தி, சைதன்யனிடம் பணி புரிகிற எத்தனையோ பேரில் ஒருவர். ஆனால், ஆனால் அவரை விட, வாழ்நாள் முழுவதும் மேனகை முக்கியம் அல் லவா? அதுவும் பேரழகி! அவள் எவ்வளவு அவமான மாக உணர்வாள்?

தேவை முடிந்ததும், விழுந்தடித்துக் கொண்டு வந்து, மணக்கப் போகிறவளிடம் மன்னிப்புக் கேட்காமல், இன்னொருத்தியோடு பேசிக் கொண்டு வேறு நின் றானே! இது இன்னும் மன்னிக்க முடியாத குற்றமாக, அந்தச் சின்னப் பெண்ணுக்குத் தோன்றியது.

இதையெல்லாம் அண்ணனுக்குப் புரிய வைத்து விடும் வேகத்தில், சைதன்யனிடம் திரும்பத் திரும்ப அதைப் பற்றியே பேசினாள்.

''பாவம், அண்ணா. மேனகையின் முகம் அப்படியே வாடிப் போயிற்று. அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும்?'' என்றாள் பத்தாவது தடவையாக.

அவள் எவ்வளவு அவமானமாக உணர்வாள்?

குடும்பத்தில் ஒரு நல்ல நிகழ்வை எதிர்பார்த்து இருந்தவள்., அது நடக்காமல் தள்ளிப் போன ஏமாற்றம், வருத்தத்தில் பேசுகிறாள் என்று உணர்ந்து, ''என்னம்மா செய்வது, எவ்வளவு திட்டம் போட்டுச் செய்வதிலும், சில சமயம், இப்படித்தான் ஆகிவிடுகிறது! இதைப்

பெரிதாக எடுத்துக் கொள்ளாதேடா!'' என்று முதலில் சமாதானமாகவே பேசிய சைதன்யனுக்குக் கடைசியில் எரிச்சல் வந்தது.

''சும்மா சும்மா, இதையே சொல்லி அறுக்காதே மைத்தி! கொஞ்சம் புரிந்து பேசு. நம் தொழிற்சாலை களிலும், அலுவலகத்திலுமாகச் சுமார் நூற்றைம்பது பேர் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் வேலைக்குச் சம்பளம் கொடுக்கிறோம் என்றாலும், அவர் களது நன்மை தீமையில் நமக்கு ஒரு பொறுப்பு இருக் கத்தான் செய்கிறது. ஓர் ஆத்திரம், அவசரம் என்று வரும் போது, நாம் பார்த்துத் தான் ஆக வேண்டும். இதற் கெல்லாம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறவள் என்றால், நம் குடும்பத்துக்கு ஒத்துவராது. கடவுளாகப் பார்த்துத் தடுத்ததாக நினைத்து, இந்தப் பேச்சை இத்தோடு விட்டுவிடலாம்,'' என்றான் சற்றுக் கடுமையான குரலில்.

விட்டுவிடுவதா? அதிர்ந்து போனாள் மைத்திரேயி.

''என்னண்ணா, இப்படிச் சொல்லிவிட்டாய்? இந்தப் பக்கத்திலேயே அழகான பெண் என் அண்ணி ஆகப் போகிறாள் என்று, நான் எவ்வளவு ஆவலாக இருக் கிறேன்! அழகு அழகாகக் குட்டிப் பிள்ளைகள், அத்தை அத்தை என்று என்னைச் சுற்றும் என்று, எனக்கு அவ்வளவு அழகான எத்தனையெத்தனை கற்பனைகள், தெரியுமா?'' என்று குறைப்பட்டாள் தங்கை.

அண்ணன் பேசாமல் இருக்கவும், இன்னமும் எடுத்துச் சொல்கிறவளாகி, ''நான் பெருமையும் மகிழ்ச்சியுமாக, நம் குடும்பத்தைப் பற்றி இத்தனை அழகான கற்பனை செய்து கொண்டிருக்கிறேன்! நீயானால், எவளோ ஒரு

சாதாரணப் பெண்ணுக்காக, எல்லாவற்றையும் நாச மாக்கப் பார்க்கிறாயே!'' என்று தொடர்ந்து குறை கூறி னாள்.

''யார்? எவள்?'' என்று புரியாமல் கேட்டான் அண் ணன்.

''அவள்தான், கூந்தலை இறுக்கிப் பிடித்து, நீளமாகப் பின்னிய ஜடையோடு, மருத்துவமனையில் ஒரு பட்டிக்காடு உன்னிடம் ஜொள்ளு விட்டுக் கொண் டிருந்தாளே.. அப்படியே தகப்பனின் வைத்தியச் செலவை, உன் தலையில் கட்டிவிடலாம் என்று நினைத் திருப்பாள்!''

தங்கையின் பேச்சினால், விளைந்த கற்பனையில் மலர்ந்த முறுவல் மறைய, அண்ணனின் புருவங்கள் நெரிந்தன. ''உண்மையான விவரம் தெரியாமல், யாரையும் இப்படிப் பேசக்கூடாது, மைத்தி! சந்தான மூர்த்தி, அந்தப் பெண்ணுடைய தந்தை அல்ல. மாமா முறை. நமக்குப் பழக்கமான 'சுடர்' மருத்துவமனையில் பெரியவரைச் சேர்த்த போது, அதுபற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. தெரிந்ததும் வந்து, திருப்பித் தருவதாகப் பணம் கட்டிய ரசீதைத்தான் அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். அதுவும் பணம் தரத் தேவையில்லை என்று நான் சொன்ன பிறகும்! என்ன மாதிரிப் பெண்ணை, என்ன சொல்கிறாய், பார்!''

என்ன மாதிரிப் பெண்ணா?

மூளைக்குள் அபாய மணி அடிப்பது போல இருந்தது, மைத்திரேயிக்கு.

இப்படியெல்லாம் கூட, ஆண்களை மயக்குவார்கள் போலிருக்கிறதே! இந்த அண்ணன் ஒன்றும் தெரியாமல்... தொழில், தொழில் என்று, உலகமே தெரியாமல் இருக்கிறானே!

ஆனால், அண்ணன் அசட்டுத்தனமாக ஏமாற, அன்புத் தங்கை விட்டுவிடுவாளா என்ன? அந்தப் பெண் பணம் பற்றி ஏன் கேட்டாள் என்று எடுத்துச் சொன்னாள்.

''ஓ! அப்படிக் கேட்டுத் தன்னை உத்தமி மாதிரிக் காட்டிக்கொண்டிருந்தாளாக்கும்! ரொம்பக் கெட்டிக்காரியாக இருக்கிறாளே!'' என்றாள், ஆத்திரத்தை மறைக்க முயன்றபடி.

வியப்புடன் தங்கையை உற்றுப் பார்த்தான், சைதன்யன்.

லேசாகத் தலையசைத்து, ''ஊகூம்! உனக்கு இப்போது 'மூடு' சரியில்லை. ஒருமையில் அழைத்துப் பேசிய போதே, நான் யோசித்திருக்க வேண்டும். இப்போது யாரைப் பற்றி, என்ன சொன்னாலும் அதில் ஒரு தப்பைக் கண்டுபிடித்து, எல்லோரையும் போரடிக்கப் போகிறாய். முக்கியமாக அருகில் இருப்பதால், உன்னிடம் மாட்டிக் கொண்டிருக்கும் என்னை! இப்படி என்னை வறுத்தெடுப்பதை விட... 'திருப்தி'யில், ஏதோ வாங்க வேண்டும் என்றாயே, பாக்கெட் மணி முடிந்துவிட்டது என்றும் சொன்னாயில்லையா? போகட்டும். நான் பணம் தருகிறேன். போய், ஆசை தீரச் சுற்றிவிட்டு, விரும்பியதை வாங்கிக் கொண்டு வா. மூடும் மாறி விடும். ஐயாயிரம் போதுமா? கூடுதலாக வேண்டுமா?''என்று கேட்டான்.

யோசனையாக அண்ணனைப் பார்த்தாள் மைத்திரேயி.

இவன் என்ன, அந்தப் பெண்ணைத் திட்டாமல் இருப்பதற்காக லஞ்சம் கொடுக்கிறானா?

அல்லது, மெய்யாகவே தங்கைக்கு மனது சரியில்லை என்று கண்டு, அவளை உற்சாகப்படுத்துவதற்காக முயற்சி எடுக்கிறானா?

இரண்டாவது காரணம் என்றால், தங்கைக்காகப் பார்க்கிறான் என்று ஏற்றுக் கொள்ளலாம்!

மற்றது என்றால்.. ஊகூம்! பைசா வாங்கக்கூடாது!

எப்படிக் கண்டுபிடிப்பது?

ஆண்களை ஒரு பார்வையில் கண்டுவிடலாம் என்பாள், மேனகை.

அண்ணனை, மீண்டும் மீண்டும் பார்த்தாலும், அவனது மனதைக் கண்டுபிடிக்க, மைத்தியால் முடியவில்லை!

வேறு என்ன செய்வது என்று, மைத்தி யோசிக்க, சட்டென்று ஓர் ஐடியா தோன்றியது.

''உங்களால், இப்போது எவ்வளவு தர முடியும், அண்ணா?''

''ஏய், என்னதிது? உனக்கு எவ்வளவு வேண்டும் என்று கேட்டால், என்னவோ, நான் கஷ்ட தசையில் இருப்பது போல, எவ்வளவு தர முடியும், என்று கேட்கிறாயே! உனக்கு எவ்வளவு வேண்டும் என்று, அதைச் சொல்லுடா!'' என்று உருகினான் அண்ணன்காரன்!

"அதுவா அண்ணா? ஐந்து தருவதாகச் சொன்னீர்கள், அல்லவா? கொஞ்சம் கூடுதலாகத் தர முடியுமானால், மேனகையையும் கூட்டிப்போய், அவளுக்கும் ஏதாவது வாங்கிக் கொடுக்கலாமே என்று நினைத்தேன், பாவம்! ரொம்பப் பாதிக்கப்பட்டிருப்பவள் அவள் தானே, அண்ணா? மேலே, ஓர் இரண்டு... இரண்டு... மூன்று..."

உடனே தலையாட்டாமல், சைதன்யன் சற்று யோசிக்கவும் அவளுக்குச் சொத்தென்று ஆகிவிட்டது!

எவளோ ஒருத்தியுடைய மாமாவுக்கு எத்தனை ஆயிரங்களோ கட்டுகிறான்! அதையும் திருப்பித் தர வேண்டாம் என்றானாம்!

இங்கே திருமணம் செய்யப் போகிற பெண்ணைக் காக்க வைத்து, ஈரெட்டில் விட்டு வருந்த வேறு வைத்து விட்டு, அதை ஈடுகட்ட வழி சொன்னால், இப்படித் தயங்குகிறானே!

இதற்கு என்ன அர்த்தம்? அந்தப் பெண்ணிடம் அவனுக்கு மயக்கமா? எப்படி முடியும்? கிளி போல மேனகையை விட்டு குரங்கு போன்ற அந்தப் பெண்ணைப் போய்.. ஊகூம். இதை நடக்க விட முடியா...?

ராக்கெட் வேகத்தில் மைத்திரேயியின் கற்பனை பறக்க, சைதன்யன் யோசனையோடு பேசினான்.

"மேனகைக்கு அப்படி எதையாவது வாங்கிக் கொடுத்தால் அவளுடைய தாத்தா தப்பாக எண்ண மாட்டாரே, மைத்தி? அதிகப்படி உரிமை எடுப்பது போல... ஏனெனில், அன்று வர முடியாமல் போனதால், இன்னமும் திருமணத்தை உறுதி செய்யவில்லை, பார்!"

இறுக்கம் வடிந்த வேகத்தில், மைத்திக்குக் கைகால்கள் வெலவெலத்துப் போயின. நல்லவேளை! சோபாவில் உட்கார்ந்திருந்தாள். அல்லது, கால் மடிந்து, கீழே கூட விழுந்திருப்பாள்!

ஆனாலும், சில வினாடிக்குள், அவள் என்னவெல்லாம் எண்ணிவிட்டாள். இரவு வெளிச்சத்தில் அரை குறையாகப் பார்த்த பெண்ணை - அவள் முகம் அப்படி ஒன்றும் அசிங்கமாகக் கூட இல்லை, அவளைப் போய்க் குரங்கோடு ஒப்பிட்டு...

அம்மா சொல்வது போல, அவசரம்தான் அவளது பலவீனம் போல!

''என்னம்மா, உனக்கு என்ன தோன்றுகிறது?'' என்று அண்ணன் மறுபடி கேட்டான்.

சலுகையாக நோக்கி, ''போங்கண்ணா, உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை!'' என்று சந்தோஷமாகச் சிரித்தாள் தங்கை. ''நீங்கள் என்ன, மேனகா அண்ணிக்கு மோதிரமா வாங்கிப் போடப் போகிறீர்கள்? அண்ணி எனக்குப் பரிசுகள் கொடுக்கவில்லையா? தந்த விசிறி, ஹைதராபாத் வளையல் என்று. அதுபோல, நானும் அவளுக்கு வாங்கிக் கொடுக்கப் போகிறேன். அவ்வளவு தான். பேச்சு வாக்கில் பணம் கொடுப்பது அண்ணன் என்பதை மட்டும் மேனகா காதுக்குக் கசிய விட்டு விடுவேன். அப்புறம், அவள் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரியத் தொடங்கிவிடும். அப்புறம், அங்கே வாட்டமாவது, மண்ணாங்கட்டியாவது!'' என்று உற்சாகத்தோடு உரைத்தாள்.

தங்கையின் குறும்புத்தனமும், உற்சாகமும் மகிழ் வூட்ட, பிரச்சனை தீர்ந்த நிம்மதியோடு, சைதன்யனும் அவளோடு சேர்ந்து புன்னகை செய்தான்.

ஆனால், இதனாலேயே பிரச்சனை மேலும் பெரிதாகி, வேறு விதமாக மாறப் போகிறது என்று, அவர்கள் இருவருக்கும் அப்போது தெரியாது!

இருவருமாகத் 'திருப்தி'க்குப் போகலாம் என்றதும், மேனகா சந்தோஷமாகச் சரி சொன்னாள்.

அவள் தயாராவதற்கான அரை மணி நேரம் பொறுத்து, காரை எடுத்துக் கொண்டு, அவள் வீட்டுக் குச் சென்ற மைத்திரேயி, முன்போல உரிமையோடு வீட்டினுள் செல்லத் துணிவற்று, காரிலேயே காத்திருந் தாள்.

அவளது பிழை என்று எதுவும் இல்லைதான். ஆனால், அன்று சைதன்யன் வராதது பற்றிப் பரசுராமன் கடுமை யாக ஏதாவது சொல்லிவிட்டால்? அவளுடைய அண் ணனை அவள் எவ்வளவோ திட்டலாம். ஆனால், இன் னொருவர் ஒரு வார்த்தை சொல்ல எப்படிப் பொறுப் பாள்?

எனவே, மைத்திரேயி காரிலேயே காத்திருக்க, இன் னொரு பத்தே நிமிஷங்களில், ஆரஞ்சு வண்ணச் சேலையில், செம்பவளப் பாவையாக, மேனகை வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

இப்படி ஓர் அழகுப் பதுமையைப் பார்க்கச் சற்று நேரம் காத்திருப்பதில் தப்பே இல்லை என்று, மனதில் நினைத்ததை, மைத்திரேயி அப்படியே வாய்விட்டுச் சொன்னாள்.

எழிலாக அலுப்புக் காட்டி, ''போ மைத்தி. நீ எப்போதும் இப்படித்தான், அழகு அழகு என்று சொல்லிச் சொல்லி, என்னைப் போரடிக்கிறாய்! எனக்கு அது பிடிப்பதே இல்லை என்று, உனக்கு எத்த்...தனை முறை சொல்லிவிட்டேன்!'' என்றாள் மேனகை கொஞ்சலாக.

''எங்கள் பாப்பாவுக்கு வெள்ளை மனதும்மா. மனதில் நினைத்ததை அப்படியே சொல்லிவிடும். சில பேர் மாதிரி, உள்ளே ஒன்று வைத்து, வெளியே வேஷம் போடாது!'' என்றார் பல ஆண்டு காலமாக மைத்திரேயி வீட்டில் பணியாற்றும் வயதான காரோட்டி, தாமஸ் தாத்தா.

மேனகைக்கு என்னவோ மனதில் ஒப்பவில்லை. இவர் பேச்சு சரியில்லை.

மைத்திரேயிக்கு வெள்ளை மனது என்றால், யாருக்குக் கறுப்பு எண்ணம்?

இந்தாளைப் பேச விடுவதே தப்பு! விட்டால், எந்த நேரம், எப்படிக் கழுத்தை அறுப்பானோ?

''மைத்தி, வேலையாட்களை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். உன் வீட்டில் அது யாருக்குமே தெரியக் காணோம். உன் அண்ணன் என்னடா என்றால், வாழ்க்கையையே நிர்ணயிக்கிற நிகழ்ச்சியை விட்டுவிட்டு, அவரிடம் ஊழியம் பார்க்கிறவருக்கு மருத்துவமனையில் உட்கார்ந்து, ஆயா வேலை செய்கிறார். அவருக்குச் சரியான தங்கையாக நீயும், நம் பேச்சில் குறுக்கிடும் இந்த ஆளை, வெறும் ஒரு காரோட்டியை ஒரு தட்டுத் தட்டி அடக்காமல், சும்மா

உட்கார்ந்திருக்கிறாய்! ஊகூம்! ஒன்றும் சரியில்லை. அங்கே நிறைய மாற்றம் தேவைப்படுகிறது!'' என்று மைத்தியிடம் மேனகை ஆங்கிலத்தில் பொரிந்தாள்.

மைத்திரேயி சற்றுச் சங்கடத்துடன் நெளிந்தாள். ''தாத்தா ரொம்பக் காலமாக எங்களோடு இருக்கிறார், மேனகா. ரொம்பவும் நம்பிக்கைக்கு உரியவர். உரிமை யோடு பேசுவார். கிட்டத்தட்ட குடும்பத்தில் ஒருவர் போல,'' என்றாள், சின்னக் குரலில்.

''கிட்டத்தட்டதானே? வெளியே நடுத்தெருவில் நிற்பதை விட, கேட்டுக்குள் நிற்கிறவர். அதற்காக, வீட்டுக்குள்ளேயே சேர்த்துக் கொள்ள முடியுமா? எங்கள் தாத்தாவிடம் கேட்டுப்பார். சம நிலையில் உள்ளவர் களைத் தவிர, கீழே உள்ளவர்களை உட்காரக் கூட விட மாட்டார்! நம் மரியாதையை நாம்தானே காத்துக் கொள்ள வேண்டும்,'' என்று வாதாடினாள் மேனகை.

தாமஸ் தாத்தாவைப் பொறுத்தவரையில், மைத்தி ரேயிக்கு இதில் ஒப்புதல் இல்லை. ஆனால், அண்ணன் செய்ததன் விளைவை நினைத்துப் பார்க்கும்போது, மேனகையின் பேச்சு மறுக்கவும் முடியவில்லை. அவ மானமும், வேதனையும் அவளல்லவா பட்டிருக்கிறாள்!

ஆனால், தாமஸ் தாத்தா விஷயம் வேறு என்பதைப் போகப் போக மேனகை புரிந்து கொள்வாள்.

நல்லவேளையாக, மைத்தி அன்று அஞ்சியது போல, இந்தத் திருமணம் கலைந்து விடவில்லை! பேத்தியின் விருப்பத்துக்காக, மேஜர் மறுப்பை வலியுறுத்தாமல் விட்டுவிட்டார்! அண்ணனும் விருப்பத்தையே காட்டி யிருக்கிறான்.

எனவே, சந்தோஷமாக இருக்கலாம்!

பேச்சை மைத்திரேயி அந்த விதமாகத் திருப்ப, மேனகையும் அதில் மகிழ்ச்சியுடனேயே கலந்து கொண்டாள். ''திருப்தியில் ஏதோ புது விதமான வளையல்கள் வந்திருக்கிறதாம், மைத்தி. முதலில் அதைப் பார்க்கப் போகலாம். இரண்டு பேரும் ஒரே மாதிரி வாங்கலாம்...''

எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

வளையல் போன்ற பெண்களின் அலங்காரப் பொருட்கள், ஐந்தாவது தளத்தில் இருந்தன.

'லிஃப்ட்டி'ல் அங்கே செல்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு தளத்திலும் உள்ள பொருட்களை ஒரு நோட்டம் விட்டவாறு, மெல்லவே அசைந்தாடிச் சென்றனர்.

கண்ணாடிப் பொருட்கள் மட்டுமாக அடுக்கப்பட்டிருந்த தளம், இருவரின் கவனத்தையும் வெகுவாகக் கவர்ந்தது.

வண்ணப் பூக்கள் வரையப்பட்டும் 'கட் வொர்க்' செய்யப்பட்டும், கப்கள், கிண்ணங்கள், டம்ளர், தட்டுகள், பூ ஜாடிகள் அழகழகாக அடுக்கப்பட்டிருந்தன.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருந்தவைகளை மெல்லப் பார்த்து ரசித்தபடி சென்றால், கடைசியில் பல்வேறு வடிவங்களில் கிறிஸ்டல் பொருட்கள், மனதை மயக்கின.

''இதெல்லாம் ஷோகேசில் வைப்பதற்கு மிக நன்றாக இருக்கும். அம்மாவைக் கூட்டி வந்து வாங்க வேண்டும்,'' என்றாள் மைத்திரேயி.

உடனேயே, ''அல்லது மேனகா, அண்ணன் தந்த பணத்தில், முதலில் இங்கே ஏதாவது வாங்கலாமா? இந்த அன்னாசியை வைத்து விட்டுப் போக, எனக்கு மனம் வரவே மாட்டேன் என்கிறதே! இதுபோல, எங் கேயும் பார்த்தது இல்லை!'' என்று கூட வந்தவளிடம் அபிப்பிராயம் கேட்டாள்.

''அது... அது...'' என்று அந்த கிறிஸ்டல் அன்னா சியை வாங்கிப் பார்த்தாள் மேனகை. ''அப்ப்...பாடியோ! இதன் விலையைப் பார்த்தாயா? ஏழாயிரம் ரூபாய்! இவ்வளவு கொடுத்து, வாங்கிப் போய், உன் அம்மா வுக்கு அது பிடிக்கவில்லை என்றால்? எதற்கு விஷப் பரிட்சை? அப்புறமாக ஒருநாள், ஆன்ட்டியையே அழைத்து வந்து, அவர்களோடு கலந்து ஆலோசித்தே வாங்கு. இப்போது நாம் வளையலைப் பார்க்கக் கிளம்பலாம். வா,'' என்று அவசரமாக அன்னாசியை உரிய இடத்தில் வைத்தாள் மேனகை.

அவசரத்திலும், மேனகா அதைச் சரியாகத்தான் வைத் தாள்.

''சரி...'' என்று மனமற்று இழுத்தாள் மைத்திரேயி.

விட்டால், மைத்திரேயி அதை வாங்கிக் கொண்டு தான் வருவாள் போல, மேனகைக்குத் தோன்றியது.

எனவே, மைத்தியின் கையைப் பற்றி இழுத்தவாறு வேகமாக நடந்தவள், சரிந்து விழுந்த முந்தானையை எழிலாக, உயரத் தூக்கிப் போட்டாள்.

அடுத்த வினாடி, ஏதோ விழுந்து நொறுங்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், சில வினாடிகளுக்கு முன்

ஒளி வீசி மிளிர்ந்து கொண்டிருந்த கிறிஸ்டல் அன்னாசி, தரையில் நொறுங்கிக் கிடந்தது. சிப்பிக்குள் முத்தாக ஒளிர்ந்த இன்னொன்றும்!

''ஐயோ! நம்மால் உடைந்தது என்றால், இங்கே பணம் கொடுக்க வேண்டுமே. இரண்டும் எவ் வளவோ தெரியவில்லையே!'' என்று உடைந்த பொருட் களின் விலைச் சீட்டுக்களைப் பார்க்க முயன்றாள் மைத் திரேயி.

''என்னது? நாம் பணம் கொடுப்பதா? இதென்ன, நாம் வாங்கிய பொருட்களா? பார்த்துவிட்டு, வைத்தும் விட்டோம்! காற்றில் கூட விழுந்திருக்கும்! எப்படியும், நமக்கு ஒரு பைசா லாபம் இல்லாததற்கு, நாம் ஏன் தண்டம் அழ வேண்டும்? ஒன்றும் வேண்டாம். வா, சத்தமில்லா மல் போய்விடலாம்!'' என்றாள் மேனகா.

மைத்திரேயிக்குக் கலக்கமாக இருந்தது.

மேனகையின் முந்தானை தட்டித்தான், கிறிஸ்டல்கள் விழுந்தன என்பது, அவளுக்கு நிச்சயம். ஏனெனில், பெரியவள் முந்தானையைத் தூக்கித் தோளில் போட்ட போது, அவளது இடையின் வளைவு எவ்வளவு அழ காகத் தெரிகிறது என்று பார்த்து ரசித்துக் கொண்டு இருந் தாளே!

கர்ண கொடூரமாகக் கண்ணாடி நொறுங்கும் ஓசை யில்தானே, அவளது ரசனை கலைந்ததே? போட்டு உடைத்துவிட்டு, எப்படிச் சும்மா போவது, அது திருட் டுத்தனம் அல்லவா?

குழப்பத்துடன் அவள் தயங்கி நிற்க, அவளைப் பற்றி இழுத்து, ''ஷ், வா!'' என்று மேனகை ஓர் எட்டு எடுத்து

வைக்கும்போது, எதிரே ஒரு விற்பனைப் பெண் வந்தாள்.

"இங்கே என்ன சத்தம்.." என்று கேட்டபடி வந்தவள், தரையில் கிடந்து அப்போதும் ஒளிவீசிய துகள்களைப் பார்த்ததும், "ஐயோ உடைத்து விட்டீர்களா? இந்தச் சத் தம்தான் கேட்டதா? மேடம், இதற்கு நீங்கள் பணம் கட்ட வேண்டுமே?" என்றாள்.

என்னவோ அவள்தான் உடைத்த மாதிரித் தடுமாற் றத்துடன் நின்ற மைத்தியின் கையைக் குறிப்புக்காட்டி அழுத்திவிட்டு, "என்னது? நாங்கள் உடைத்தோமா? நல்ல கதை, இது! அடுக்கும்போது நீ போட்டு உடைத்து விட்டுப் பணக்காரப் பெண்களைப் பார்த்ததும், எங்கள் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்று பார்க்கிறாயா? இதற்கெல்லாம் பயந்து, பணத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல!" என்று அதட்ட லாகப் பேசினாள் மேனகை.

"ஐயய்யோ! என்னா பொய்! நான் ஒன்றும் உடைக்க வில்லை. நீங்கள்தான்.." என்று விற்பனைப் பெண் சொல்லிக் கொண்டிருக்கும்போபேத, இன்னொருத்தி எட்டிப் பார்க்க, அவளை அழைத்து, "சாரு! நீ போய், அக்காவைக் கூட்டி வா. இவர்கள் இரண்டு கிறிஸ் டலை உடைத்துவிட்டுப் பொய் சொல்லிப் பணம் கொடுக்காமல் ஓடப் பார்க்கிறார்கள்!" என்று அனுப்பி னாள்.

அவமானமாக உணர்ந்து, "அசிங்கமாக இருக்கிறது, மேனகா. பேசாமல், பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடலாம்," என்று பெரியவளின் காதோடு சொல் லிப் பார்த்தாள் மைத்திரேயி.

ஆனால், "அனாவசியமாக, எதற்குப் பணத்தை வீணாக்குவது? அப்புறம் வளையல் வாங்கவே முடியாதே! ஜோடி நானூறு ரூபாய். இரண்டு டிசைனில், ஆளுக்கு ஆறு ஜோடி வாங்கினால், அதற்கே பணம் முழுதும் தேவைப்படும்! நீ சும்மா வாயை மூடிக் கொண்டு இரு! எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று அடிக்குரலில் மற்றவள் உத்தரவிட்டாள்.

தலைமை விற்பனைப் பெண்ணால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

புதியவளான விற்பனைப் பெண் நல்லவளே. ஆனால் முதலாளியுடைய மகளுடன் சில முறை கடைக்கு வந்தவளான மைத்திரேயியைக் குற்றம் சொல்லவும், அவளுக்குத் தைரியம் வரவில்லை. எனவே 'சூப்பர் வைசரி'டம் அழைத்துச் செல்லுமாறு செக்யூரிடியிடம் சொல்லி, அனுப்பிவிட்டு, அவள் ஒதுங்கிக் கொண்டாள்.

பிடிவாதமே உருவாகிவிட்டவள் போன்று தோன்றிய மேனகையுடன், விதியே என்று சென்ற மைத்திரேயிக்கு, அந்த சூப்பர்வைசரைக் கண்டதும் பேரதிர்ச்சி!

ஏனெனில், அவள், அந்த சந்தானமூர்த்தியுடைய உறவுப் பெண்!

பெயர் சுமனசா என்று மேஜை மீதிருந்த பெயர்ப் பலகை சொன்னது!

அவள் குரங்கு போலவோ, ஒல்லிக் குச்சியாகவோ இல்லை என்பதோடு, உள்ளே ஊடுருவுகிறவள் போல, அவள் பார்த்த பார்வையில், மைத்தி கதி கலங்கிப் போனாள்!

# 5

சுமனசா! பேச்சுவாக்கில், 'அவளைச் சுமி என்று சந்தானமூர்த்தியுடைய மனைவி அழைத்தார்கள். முழுப் பெயர் என்னவோ சுமித்ரா, சுமதி... எதுவோ தெரிய வில்லை,' என்று சைதன்யன் சொல்லியிருந்தான்.

இரண்டும் இல்லை. சுமனசா என்று அண்ணனிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்துவிட்டு, உட னேயே கூடாது என்றும் முடிவு செய்தாள், மைத்திரேயி.

சும்மாவே, ''அந்தக் குடும்பமே அவளைத்தான் சார்ந்து இருப்பது போலத் தெரிகிறது. கணக்கருடைய மனை வியும், அவள் தோளில்தான் சாய்ந்து கொள்கிறார்கள், மகளும் அவள் மடியில்தான் கிடக்கிறாள். என்ன கொஞ்சம் கர்வம்... தன்மானம் என்றும் சொல்லலாம். அதிகமாக இருக்கிறது. அவளால் கட்ட முடியுமா என்பதே இல்லாமல், எவ்வளவு, எவ்வளவு என்று தொணதொணக் கிறாள்...'' என்று, தந்தை தாயிடம் அவன் சொல்வதை மைத்தி கேட்டிருக்கிறாள்.

''பொதுவாகப் பணம் பிடுங்கிகளையே பார்த்து விட்டு, இது கொஞ்சம்... கொஞ்சம் இதமாகக் கூட இருக்கிறதும்மா!'' என்றும்.

அப்போது அவன் குரலில் மதிப்பும், மரியாதையும் நிச்சயமாக இருந்தன.

சும்மாவே, அவளைப் பற்றி உயர்வாகப் பேசுகிறவனிடம், மறுபடியும் நினைவுபடுத்துவதா? மேனகையோடு, அவனது திருமணம் இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், இன்னொரு பெண்ணைப் பற்றி, அவனிடம் சொல்லவே கூடாது...

''ஷ், மகிமா. இங்கே வந்து அழக்கூடாது. என்ன நடந்தது என்று, அதை மட்டும் சொல்லு. என்ன, சாருமதி, என்ன ஆயிற்று?'' என்று தெளிவான உச்சரிப்புடன், சற்று அழுத்தமான குரலில், சுமனசா, மைத்தியின் எண்ண ஓட்டத்தில் குறுக்கிட்டாள்.

விசாரணை தொடங்கிவிட்டது. மைத்தியைத் தெரிந்த மாதிரியே, சுமனசா காட்டிக் கொள்ளவில்லை!

உட்காரச் சொன்னதற்கு மேல், அவர்கள் பக்கம் அவள் திரும்பவும் இல்லை!

அன்று மருத்துவமனையில் அவசரப்பட்டுக் கொட்டிய வார்த்தைகள் நினைவு வர, இந்த விசாரணையின் முடிவு எப்படி இருக்கும் என்று, அப்போதே மைத்திரேயிக்குப் புரிந்து போயிற்று.

நியாயமும் அதுவே எனும்போது, அங்கே அமர்ந்திருக்கவே, அவளுக்கு அவமானமாக இருந்தது.

தவிப்புடன் மேனகையைப் பார்த்தால், இனிமைத் திருஉரு, இப்போது பிடிவாதமே வடிவமாக மாறியிருந்தது.

அழுகையை அடக்க முயன்றபடி, அந்த மகிமாவும், அவளுக்கு உதவியாக, அவளோடு கூட வேலை செய்யும் சாருமதியும், நடந்ததை எடுத்துரைத்தனர்.

குறுக்கிட்டு, ''ஏன்? உங்கள் வேலைக்காரிகளை மட்டும்தான் விசாரிப்பீர்களா? எங்களிடம் கேட்கவே தேவையில்லையா? அதுசரி, எங்களிடம் கேட்டால், பணம் பெயராதே! இப்போது, அதைப் பிடுங்குவது தானே முக்கியம்!'' என்று குரலை உயர்த்திக் கத்திப் பேசினாள் மேனகா.

சற்றும் மாறுதலே இல்லாத குரலில், ''சற்றுப் பொறுங்கள் மேடம். அடுத்தது, உங்கள் முறைதான்,'' என்றுவிட்டு, மறுபடியும் அந்தப் பெண்களிடம் சுமனசா திரும்பினாள்.

இருவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான் சொன்னார்கள்.

சுமனசா, இவர்கள் பக்கம் திரும்பவும், ''எல்லாம் பொய்!'' என்றாள் மேனகா.

''முழுக்க முழுக்கப் பச்சைப் பொய்! இந்த வேலைக்காரிகள் இருவருமாகச் சேர்ந்தோ, தனித்தனியாகவோ உடைத்துவிட்டுப் பணக்காரப் பெண்களான எங்களைப் பார்த்ததும், விலையை எங்களிடம் பிடுங்க முயற்சிக்கிறார்கள். இதுதான் நடந்தது!'' என்று பிசிரற்ற குரலில், தங்கு தடையற்றுச் சொன்னாள் மேனகா.

''ஐயோ! ஐயோ! பொய் மேடம்!'' என்று பதறினர். அந்த இருவரும்.

அவர்களை அலட்சியமாகப் பார்த்து, ''பாருங்கள்... என்ன பெயர்? ம்ம்... சுமனசா, நான் மேஜர் பரசுராமனுடைய பேத்தி. இவள், தொழிலதிபர் நந்தகுமாருடைய மகள். என் வருங்கால நாத்தனார் என்ன, மிஞ்சி மிஞ்சிப்

பத்தாயிரம் ரூபாய் இருக்கப் போகிறது! இந்தச் சின்ன விஷயத்துக்காக, நாங்கள் பொய் சொல்வோமா? அதனால், முதலில் தப்பு செய்த இவர்கள் இருவரையும் வேலையை விட்டு விரட்டுங்கள். கணக்கு முடிக்கும் போது, பணத்தைப் பிடித்துக் கொண்டு, மிச்சத்தைக் கொடுங்கள். அவ்வளவுதான். விஷயம் முடிந்தது. நாங்கள் கிளம்புகிறோம்,'' என்று எழுந்தாள் மேனகா.

தப்பித்தோம், பிழைத்தோம் என்று, மைத்தியும் அவசரமாக எழுந்தாள்.

''ஒரு நிமிஷம்!'' என்று அவர்களைத் தடுத்து நிறுத்தினாள் சுமனசா.

மைத்தியைப் பார்த்து, ''அவர்கள் சொன்னது மெய்தானா?'' என்று கேட்டாள்.

''அ.. அது... ஆ...மாம்!'' என்று மைத்தி தடுமாறும்போதே, ''அதென்ன, என் வார்த்தையை நம்பாதது போல, அது மெய்யா பொய்யா என்று சந்தேகப் படுவது? நான் சொன்னால், அது நிஜமேதான்!'' என்று அடித்துச் சொன்னாள் மேனகா.

''இ... இல்லை மேடம்!'' என்று பதறிய பணியாளர்களைக் கை தூக்கி அடக்கி, ''எது உண்மை என்று இலகுவாகக் கண்டுபிடித்துவிடலாம். நடந்தது எல்லாம் சிசி காமிராவில் பதிவாகி இருக்கும். அதைப் போட்டுப் பார்த்தால் தெரியும்,'' என்றாள் சுமனசா.

ஏதோ சொல்ல முயன்ற சாருமதியிடம் தலையசைத்து நிறுத்தி, ''நீ போய், செக்யூரிட்டியை அழைத்து வா,'' என்று உத்தரவிட்டாள்.

''எதற்கு?'' என்று கீறிச்சிட்டாள் மேனகா. ''மேஜருடைய பேத்தி! நான் சொல்வதை நம்பால், மேலே ஒரு நடவடிக்கையா? தேவையில்லை. என்ன ஒரு பத்தாயிரம்! இதற்குப் போய், என்னை இப்படி அவமானப் படுத்தும் இந்த இடத்தில் நிற்பது கூட, எனக்குக் கேவலம்! மைத்தி, அந்தப் பணத்தைக் கொடு!'' என்று மைத்திரேயி தரும்வரை கூடப் பொறுக்காமல், அவளது கைப்பையைப் பிடுங்கிப் பணக்கட்டை எடுத்து, மேஜை மீது வீசியடித்தாள்.

''இரண்டு சாதாரண வேலைக்காரிகளுக்குச் சமமாக என்னை நடத்திய, இந்த இடத்துக்குள் இந்தப் பிறவியில், இனிக் காலடி எடுத்து வைக்க மாட்டேன். வா, மைத்தி!'' என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து வெளியேறினாள்.

''உடைந்த பொருட்களின் விலை போக, மீதிப் பணத்தை வந்து வாங்கிக் கொள்ளுங்கள்,'' என்ற சுமனசாவின் குரல் காற்றோடு மெல்லத் தேய்ந்தது.

மைத்திரேயிக்கு மனது சற்றுக் குழம்பிப் போயிற்று.

அவள் வீட்டில் பொய் பேசுவது கூடாது.

தொழிலில் லாபக் கணக்கைக் கருதிக் கொஞ்சம் இப்படி அப்படிக் கணக்கு எழுதுவதுதான். ஆனால் வீட்டுக்குள், ஒருவருக்கொருவர் முழு நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்பது, தாயின் கருத்து. அதாவது உண்மைக்குப் புறம்பாகப் பேசக்கூடாது!

தாயாரின் இந்தச் சட்டதிட்டத்துக்குள் வளர்ந்த மைத்திக்குத் 'திருப்தி'யில் நடந்த எதுவும் பிடிக்கவில்லை. மேனகை நடந்து கொண்ட விதம் உட்பட!

முதலிலேயே உடைத்ததை ஒப்புக் கொண்டிருந் தால், எவ்வளவோ கௌரவமாகப் போயிருக்கும். இப்போது....

அந்த சுமனசா மட்டும், வீடியோ பதிவைப் போட்டுப் பார்த்திருந்தால், எவ்வளவு கேவலமாகிப் போயிருக் கும்?

நல்லவேளை! மேனகையின் சமயோசிதமும், வேக மும் அதைத் தடுத்து விட்டது.

ஆனால், முதலிலேயே ஏமாற்ற முனைந்திரா விட்டால், இந்தப் பிரச்சனையே நேர்ந்திராதே!

அந்தப் புதுமாதிரி வளையலை வாங்க முடியாமல், அதுவும் சைதன்யன் கொடுத்த பணத்தில் வாங்க முடியாமல் போயிற்றே என்று, மேனகைக்கு வருத்தமாக இருந்தது. அந்த சூப்பர்வைசர் பெண் இப்படிப் பண்ணி விட்டாளே என்று எரிச்சலோடு மைத்திரேயியைப் பார்த் தால், அவளது முகம் மேனகையை யோசிக்க வைத்தது!

முகத்தைச் சற்றுத் திருப்பிக் கொண்டு அமர்ந்திருப் பதைப் பார்த்தால்... கோபம், அவள் மீதுதானா? இருக் கக் கூடாதே!

மைத்தியின் கையைத் தூக்கித் தன் கை மீது வைத்து, ''அழகான புது மோஸ்தர் வளையல்! உன் பட்டுக் கையில் போட்டுப் பார்க்க, மிகவும் ஆசைப்பட்டேன்! என்ன அகடவிகடம் செய்தும், அது நடக்கவில்லையே!'' என்று வருத்தமாகக் கூறினாள்.

''காட்!'' என்று திகைத்தாள் மைத்திரேயி.

மேனகை பித்தலாட்டம் செய்தது, சுய லாபத்துக்காக அல்ல, மைத்திரேயிக்காக!

மைத்தி மீது அவளுக்கு எவ்வளவு அன்பு இருந்தால், இப்படிப் பொய் சொல்லுகிற அளவுக்கு இறங்கியிருப்பாள்! இவ்வளவு பிரியம் உள்ள இவள்தான், அவளுக்கு அண்ணியாக வர வேண்டும். அண்ணனுடைய மனைவி என்று ஆகிவிட்டால், அவர்கள் வீட்டுப் பழக்கம் வந்துவிடும்! அப்புறம், சொக்கத் தங்கம் தானே!

மேனகையின் வழுவழு கையை வருடியவாறு, ''போகிறது, விடுங்கள் அண்ணி!'' என்றாள் சின்னவள்.

வீட்டில் பார்த்தபோது, ''ஏதேனும் வாங்கினாயா, மைத்தி?'' என்ற அண்ணனிடம் பதில் சொல்ல முடியாமல் சற்றுத் தயங்கிவிட்டு, ''அங்கே உடை தட்டிச் சிலது உடைந்து போயின, அண்ணா. அதற்குப் பணம் கட்டிய பிறகு, அதிகம் மிச்சமில்லை,'' என்று கிட்டத்தட்ட உண்மையே சொன்னாள்.

ஜாக்கிரதையாக இருக்கக்கூடாதா என்று கேளாமல், ''அடடா! ஆசையாக ஷாப்பிங் போய்விட்டு, ஒன்றும் வாங்காமல் வருமாறு ஆகிவிட்டதே! வேறு பணம் தருகிறேன், போய் வாங்கிக் கொள்,'' என்றான் அருமை அண்ணன்.

மனம் நெகிழும்போதே 'திருப்தி'க்குள் இனிக் காலடி எடுத்து வைக்க மாட்டேன் என்று, மேனகை சபதம் செய்தது, அவளுக்கு நினைவு வந்தது.

தனியே போகவும் மனமற்று, ''இருக்கட்டும் அண்ணா. வேண்டியபோது வாங்கிக் கொள்கிறேன். இப்போது 'ஷாப்பிங்' போக மூடு இல்லை,'' என்றாள் தங்கை.

''ஓஹோ! மேடத்துக்கு 'ஷாப்பிங்' போக மூடு இல்லையாக்கும்! சரிங்கம்மா! ஒரு மாறுதலுக்குப் பாடம் எதையாவது எடுத்துப் படிங்களேன்!'' என்றான் அண்ணன். ''ஆனால், அதற்கு மூடு கொஞ்சமும் இராதே!'' என்று கிண்டலடித்தான்.

''தேவை இருந்தால், எப்படியும் படித்து விடுவேன். ஆனால், இப்போது அப்படிப் படிக்க அவசியம் இல்லையே!''என்று தங்கை, விளையாட்டாய்க் கைகளை விரிக்க, ''பார்த்தும்மா! அப்புறம், உன் தேர்வுத் தாள்களைத் திருத்துகிறவர்களும், இப்படிக் கையை விரித்து விடப் போகிறார்கள்!'' என்று மேலும் கேலி செய்தான் சைதன்யன்.

''அதெல்லாம் ஒரு போதும் செய்ய மாட்டார்கள்! நான் எப்போதும் வகுப்பில் முதலில் வருகிறவளாக்கும்! யாரும் என்னை முந்தவே முடியாது! அப்புறம் என்ன?'' என்று சிறு கர்வத்துடன் பதிலிறுத்தாள் தங்கை.

''ம்ம்ம்..'' என்று, யோசனையோடு தலையைத் தட்டிக் கொண்டான், முன்னே பிறந்தவன். ''எங்கேயோ.. எப்போதோ படித்த வார்த்தைகள்! ம்! நினைவு வந்து விட்டது. ஏதோ ஒரு முயல், இப்படிச் சவால் விட்டு, இருந்திருந்து ஓர் ஆமையிடம் தோற்றதாக...'' என்று கண்ணில் சிரிப்புடன் இழுத்தான்.

''போண்ணா! இடையிலே விடுவதற்கு, நான் ஒன்றும் அந்த முயல் போல முட்டாள் இல்லை! முதலில், நீ அதைத் தெரிந்து கொள்!'' என்று அவள் ரோஷமாகக் கூறவும், சைதன்யன் வாய்விட்டு நகைத்தான்.

ஒருகணம் திகைத்துவிட்டு, ''ஹலோ, சிரிக்கும் போது, காரணத்தைச் சொல்லிவிட்டுச் சிரிக்க வேண்டும். அதில்லாமல், இப்படிச் சும்மா சிரிக்கிறவர்களை, வேறே ஒரு பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள்! தெரியும் தானே?'' என்று அவனை மடக்க முயன்றாள் மைத்தி ரேயி.

அப்போதும் கண்ணோரம் சுருங்க, ''சிரிக்கக் கார ணமா? பெரிதாக ஒன்றும் இல்லையம்மா, சும்மா கொஞ்சம் சிரிக்க ஆசைப்பட்டேன்! நீயும் ஏமாற்ற வில்லை!'' என்று மறுபடியும் நகைத்தான் சகோதரன்.

''நானா? நான் என்ன... ஊகூம். இன்னும் புரிய வில்லை!''

''சரிப்பா. விம் பார் போட்டே, நன்றாக விளக்கி விடு வோம். காலையில், என்னிடம் எப்படிப் பேசினாய்? மரியாதையாக வாங்கள், போங்கள் என்றுதானே? இதுவே கொஞ்சம் எரிச்சலில் இருக்கும்போது, வாண்ணா, போண்ணா என்று ஒருமைக்கு மாறிவிடு கிறது. இன்னும் கோபம் வந்தால், அடுத்த நிலை அடா, புடாதானே? அப்படிக் கற்பனை செய்து பார்த்தேனா? சிரிப்பு வந்துவிட்டது! அடேய் சைதன்யா, இன்னாடா...'' என்று அவள் குரலில் சொல்லிக் காட்டி, மீண்டும் சிரித்தான் சைதன்யன்.

கூடச் சேர்ந்து சிரித்தபோதும், தங்கை முகம் வாடிவிட்டது ''நிஜமாக அப்படியாண்ணா செய்கிறேன்? சாரிண்ணா. இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கிறேன். ஆனால், நான் வேண்டும் என்றே, அப்படியெல்லாம் பேசுவதில்லை, அண்ணா. எனக்கு எப்போதும் என்

அண்ணன் என்றால், பிரியம் மட்டும்தான் அண்ணா, இது சத்தியம்! நூற்றுக்கு நூறு முழு உண்மை, அண்ணா!'' என்று அண்ணனுக்குப் புரிய வைத்துவிடும் வேகத்தோடு குரல் நடுங்கக் கூறினாள்.

தங்கையின் கண்களில், ஒரு சொட்டு நீர் எட்டிப் பார்ப்பதைக் கண்டதும், சைதன்யனுக்கு ஒரு மாதிரி யாகிவிட்டது. ''அடடா, என்னம்மா நீ? விளையாட்டுக்கு ஒரு வார்த்தை சொன்னால், இப்படியா மனதை அலட்டிக் கொள்வது? உனக்கு என் மீது எவ்வளவு பிரியம் என்று எனக்குத் தெரியாதா? இவ்வளவு கஷ்டப்பட்டு, குண மும், அழகுமே உருவான ஒருத்தியை, எனக்காகக் கண்டுபிடித்திருக்கிறாயே! இதற்கு மேல் அண்ண னிடம் உன் பாசத்துக்கு வேறு என்ன சான்று வேண்டும்? ஆனால் அதே போலத்தான் அண்ணனும் என்று புரியாமல், சின்னக் கேலிக்கெல்லாம் ஓட்டைப் பானை மாதிரிக் கண்ணீர் வடிக்கக்கூடாது! தெரிகிறதா?'' என்று சற்று அதட்டலான கேள்வியோடு முடித்தான்.

அருகில் ஓடி வந்து, அவன் கையைப் பிடித்துக் கொண்டு, ''ஐயோ, இல்லைண்ணா! இன்றைக்குத் 'திருப்தி'யில், அந்த கிறிஸ்டல் உடைந்தது கொஞ்சம் ஒரு மாதிரி...'' என்றவள், பேச்சை நிறுத்தி அவனை வாசம் பிடித்தாள். ''ம்ம்ம்... ஆஃப்டர் ஷேவ் லோஷன்! பர்ஃப்யூம்! எங்கேயும் வெளியே போகிறீர்களா?'' என்று அவள் வினவ, சைதன்யன் சிறு முறுவல் செய்தான்.

''சுடர் மருத்துவமனைக்கும்மா. அங்கே சந்தான மூர்த்தி சார் சீக்கிரமே 'டிஸ்சார்ஜ்' ஆகப் போகிறார் அல்லவா? தலைமை மருத்துவரைப் பார்த்து, அவர்

பற்றித் தெளிவாகப் பேச வேண்டும். இப்போதுதான் அவகாசம் இருப்பதாக டாக்டர் சொன்னார். அங்கேதான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்,'' என்று விவரம் தெரிவித்தான்.

மைத்தியின் மூளைக்குள் எச்சரிக்கை மணி அடித்தது!

சந்தானமூர்த்தி சார் என்றால், அங்கே சுமனசா இருப்பாள்! அவளுக்காகவா அண்ணனின் இந்தக் கச்சிதமான தோற்றம்?

கிளி குரங்கு உவமையை அவளாலேயே ஒத்துக் கொள்ள முடியவில்லை. சுமனசா ஒன்றும் குரங்கு போல இல்லை!

ஆனால், மேனகையிடம், வெறும் மின்மினிப் பூச்சி தானே?

அத்தோடு, வீணாகப் பணம் கட்ட வைத்த வில்லி! நடந்ததை அவள் அண்ணனிடம் சொல்லிவிட்டால்?

அவளோடு அண்ணனைத் தனியே பேச விடுவது, தப்பாக முடியக் கூடும்!

மேனகை சொல்வது போலத் திருமணம் நிச்சயம் ஆகிற வரைக்கும். அண்ணனின் வளமைக்காக, எல்லாப் பெண்களும் முயற்சித்துப் பார்க்கத்தான் செய்வார்கள். அதைத் தடுத்து, அண்ணனைக் காப்பதும், அவனை மேனகையிடம் ஒப்படைப்பதும், தங்கையான அவள் கையில்தான் இருக்கிறது!

அண்ணனோடு ஒட்டிக் கொண்டு, அவளும் கிளம்பி விட்டாள்!

தெரிந்த மருத்துவமனைதானே! அவளும் சந்தான மூர்த்தியைப் பார்க்க வந்தால், அன்றைய கடுமையான பேச்சுக்கு மன்னிப்புக் கேட்ட மாதிரி இருக்கும்!

தங்கையின் காரணத்தை அப்படியே ஏற்று, அவளை மருத்துவமனைக்குச் சைதன்யன் அழைத்துச் சென்றான்.

அங்கே அவளைச் சந்தானமூர்த்தியுடைய குடும்பத் தாரோடு பேசிக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு, சைதன்யன் தலைமை மருத்துவரைப் பார்க்கச் சென் றான்.

அவன் திரும்பி வருமுன், அந்த சுமனசாவும் வந்து சேர்ந்தாள்.

ஆஹா! இந்த இடத்தில் வைத்து, அவளைக் கேவ லப்படுத்தப் போகிறாளா?

ஆனால், அப்படி எதுவும் செய்யாமல், ஒரு வெற்றுப் பார்வையோடு மைத்தியிடம் தலையசைத்துவிட்டு, சந்தானமூர்த்தியுடைய மனைவியிடம் சென்றாள் சுமனசா.

அவளது கையைப் பிடித்துக் கொண்டு, மெல்லிய குரலில் அத்தையம்மா ஏதோ புலம்ப, இவள் ஆறுதலாக, அவளை வருடியவாறு, ஏதோ கூறுவது தெரிந்தது.

குடும்பத்தின் ஆணிவேரே அவள்தான் போல!

குடும்பத்துக்கு ஒருத்தி இப்படிக் கிடைத்தால் நன் றாகத்தான் இருக்கும்!

தோளைக் குலுக்கி, யோசித்தவாறு, மெதுவே நகர்ந்து, வெளியே போய், வாய் பார்த்துக் கொண்டு நின்றாள் மைத்திரேயி.

சற்றுப் பொறுத்து, அண்ணன் குரல் கேட்கவும், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். இவள் ஏதோ யோசனையாக நின்றபோது, அண்ணன் திரும்பி வந்திருக்க வேண்டும்.

வந்தவன், உள்ளே செல்லும்போது, அவளையும் கூப்பிட்டிருக்கலாமே!

எட்டிப் பார்த்த சிறு தயக்கத்தை உதறிவிட்டு, அறையை நோக்கி, மைத்தி மெல்ல நடக்கலானாள்.

அறை வாயிலில் காலை வைக்கும்போது, சைதன்யன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''...... மொத்தம் எத்தனை 'க்ளோஸ் சர்க்யூட்' கேமராக்கள் வைக்க வேண்டியிருக்கும்? ஒவ்வொரு தளத்துக்கும் எத்தனை தேவைப்படும்? எல்லாம் சொன்னால், எனக்கு மொத்தக் கணக்கு மதிப்பிட வசதியாக இருக்கும்...?'' என்று அந்த ராட்சசியிடம்தான் அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

கேள்வியின் பொருள் புரியவும், மைத்திரேயி, அப்படியே வெலவெலத்துப் போனாள்!

இந்த சுமனசா என்ன, அவர்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? சர்க்கஸ் கோமாளி என்றா? இல்லாத சிசி காமிராவை இருப்பதாகச் சொல்லி, மிரட்டி, அவர்களாகவே பணத்தைக் கொடுக்கும்படி செய்தாளே! என்ன பொய்!

அவளிடம் காட்டுக் கத்தலாகக் கத்த வேண்டும் என்று, ஆத்திரத்துடன் இரண்டு எட்டு வேகமாக எடுத்து வைத்தவள், சட்டெனத் தயங்கினாள்.

சுமனசா சொன்னது பொய்யே என்றாலும், அவர்களது பொய்யை உடைத்து, நிறுவனத்தின் பணத்தைப் பெறுவதற்காகத்தானே? அவளது வேலையைத் திற மையாகச் செய்தாள்! இதில் குறை கூறவோ, கோபப் படவோ என்ன இருக்கிறது? அதுவும் அண்ணன் முன் னிலையில்!

மைத்திரேயி எதிர்பார்த்த வாய்ப்பு விரைவிலேயே கிடைத்தது.

காபி வாங்கி வருவதாகச் சொல்லி, சுமனசா ஃப்ளாஸ்க் கோடு கிளம்பவும், தானும் வருவதாகச் சொல்லி, மைத்தியும் கூடப் போனாள்.

சற்று தூரம் சென்றதும், "என்ன பேச வேண்டும்?" என்று சுமனசா வினவினாள்.

அதென்ன முந்திக் கொண்டு கேட்பது? இவளது மூக்கை உடைப்பதற்காகவேனும் சும்மாதான் கூட வந்தேன் என்று சொல்லலாமா என்ற உந்துதலைச் சிறு சிரமத்துடன் மைத்தி அடக்கிக் கொண்டாள். கேட்க நினைத்ததைக் கேட்பதுதான், இப்போதைக்கு முக்கியம்.

ஆனாலும் அடக்க மாட்டாமல், "கேட்க வந்திருப் பதை ஊகித்தவளுக்கு, என்ன கேட்க வந்தேன் என் பதும் தெரிந்திருக்கும்தானே?" என்று பதில் கொடுத் தாள்.

அவளும் தயங்கவில்லை "ஊகங்கள் நிறைய இருக் கின்றன. அவைகளில், இப்போது எது தேவை என்று தெரிந்தெடுப்பது கடினம்," என்றாள்.

நிறைய ஊகங்களா என்று ஒரு கணம் கலங்கிவிட்டு, அதை விடுத்து, மைத்தி விஷயத்துக்கு வந்தாள் "சிசி கேமிரா இருப்பதாகச் சொன்னது, பொய்!"

''பொய்மையும் வாய்மை இடத்த, புரை தீர்த்த நன்மை பயக்குமெனில்!'' என்று ஒரு குறள் பதிலாக வந்தது.

இவளுக்குப் பயன்படுத்துவதற்காக என்று, வள்ளுவர் இப்படி ஒரு குறளையும் எழுதியிருக்க வேண்டுமா என்று உள்ளூர எரிச்சல்பட்டு விட்டு, ''ஒருவேளை, நாங்கள் சொன்னது மெய்யாக இருந்திருந்தால்?'' என்று மீண்டும் கேட்டாள் மைத்தி.

அதற்குள் 'காண்டீன்' வந்துவிட, ''மூன்று காபி'' என்று ஃப்ளாஸ்க்கைக் கொடுத்துவிட்டு, மைத்தியிடம் திரும்பினாள் மற்றவள். ''அப்படி இருக்காது என்று எனக் குத் தெரியும். அந்த சேல்ஸ் பெண்ணைப் பற்றி எனக்குத் தெரியும். அத்தோடு, உன் முகமும் எனக்குக் காட்டிக் கொடுத்தது. அவளைப் போலப் பொய்யை இயல்பாகச் சொல்ல, உன்னால் முடியவில்லை.''

இது பாராட்டா? பரிகாசமா? ஆனால், மேனகை முதலி லேயே பணத்தைக் கொடுக்க விட்டிருந்தால், இந்தப் புரியாத நிலை ஏற்பட்டே இருக்காது!

எதற்கு அந்த மாதிரி அசிங்கமாக ஒரு பொய்யைச் சொல்ல வேண்டும்? சுத்த மோசம் என்று நினைத்து விட்டுச் சட்டென விதிர்விதிர்த்தாள் மைத்திரேயி!

சேச்சே! வருங்கால அண்ணியைப் பற்றி, என்ன தவ றான எண்ணப் போக்கு, இது? அதுவும் அந்தப் பொய்யே மைத்திக்காகச் சொல்லப்பட்டது!

எல்லாம் இந்த சுமனசாவால் வந்தது! இவள் பாராட்டி னாலும் சரி, பரிகசித்தாலும் சரி! குறுக்கே வராமல் இருந்தால் போதும்!

பேச்சை மாற்றுவதற்கு என்ன செய்வது என்று வேக மாக யோசித்து, ''எதற்கு மூன்று காபி மட்டும்? நாம் நிறையப் பேர் இருக்கிறோமே!'' என்று கேட்டாள்.

ஒரு கணம் தயங்கிவிட்டு, சுமனசா லேசாகப் புன்னகை செய்தாள்.



# 6

திசை திருப்பும் முயற்சியை உணர்ந்துவிட்டதை வெளிப்படுத்திய சுமனசாவின் சிறு முறுவலில் மைத்தி ரேயி குன்றிப் போனாள்.

இது பற்றித் தொடர்ந்து ஏதாவது கேட்டுவிடுவாளோ என்று அவள் உள்ளூரத் தவிக்கும்போதே, மைத்தியின் கேள்வியை இயல்பு போலவும் காட்டி, ''எனக்குக் காபி வேண்டாம். மாமாவுக்குக் கூடாது. படிப்பதற்கு நிறைய இருப்பதால் இன்று பவித்ரா வரவில்லை. எனவே, உங்கள் இருவருக்கும், அத்தைக்கும் மட்டும் வாங்கி னேன்,'' என்று சகஜமான குரலில், சாதாரணமாகப் பதி லிறுத்துவிட்டு, தயாராகிவிட்ட காபியை வாங்கப் போனாள்.

சுமனசா காபி வேண்டாம் என்றதன் காரணம், சிக் கனமோ என்று தோன்றவும், மைத்திக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

"இது, எங்களுக்கு மிகவும் பழக்கமான இடம். காபிக்கு நான் கொடுக்கிறேன்!" என்று தன் கைப்பையைத் திறந்து பணத்தை எடுத்தாள்.

"வேண்டாம்!" என்றாள் மற்றவள். "குறைந்த பட்ச மாக, இந்தக் காபிக்குக் கொடுக்கும் அளவுக்கு, எங் களிடம் பணம் இருக்கத்தான் செய்கிறது!" என்றாள், கடுப்பும், கசப்பும் கலந்த குரலில்.

மைத்திரேயி திகைத்துப் பார்க்கும்போதே, பணத்தைக் கொடுத்து ரசீதை வாங்கி, வாயிலில் சரி பார்க்கிற ஆளிடம் காட்டிவிட்டுப் "போகலாம்" என்று கிளம்பி விட்டாள்.

திரும்பிச் செல்லும்போது, "அவளுக்கு ஏதும் கோபம் போல இருந்தது, அண்ணா!" என்று சுமனசாவின் கடுப்பு பற்றிக் கூறினாள் தங்கை.

"ச்சு!" என்றான் அண்ணன். "அந்த நேரத்து அவ சரத்தில், சந்தானமூர்த்தியை, நான் இங்கே கொணர்ந்து சேர்த்துவிட்டேன். பில்லைக் கொடு, பணத்தைத் தருகிறேன் என்று ஒரே ரோதனை செய்கிறாள்! பாதிக்குப் பாதி அதிகமாக இருக்கும் என்று தெரிந்தும், அவளிடம் எப்படி வாங்கிக் கொள்வது? அவளே, எங்கோ வேலை செய்து, பணம் சேர்க்கிறாள் போல..."

"'திருப்தி'யில்தான்!" என்று தன்னையறியாமல் தெரிவித்தாள் தங்கை.

"ஓஹோ! ஆனால், அது உனக்கு எப்படித் தெரியும்?"

"அ... அது... கா... ஊலையில் பார்த்தோம்."

''அப்படியா? ஆனால், இவள் வயதுக்கு, அங்கே ஒன்றும் அதிக ஊதியம் இராது. ஆர்டியை உடைத்துக் கொடுப்பாளாம். திருமணத்துக்குச் சேர்க்கிறாளோ, என்னவோ? இப்படி இவள் கஷ்டப்பட்டுச் சேர்ப்பதை, நான் எப்படிப் பிடுங்கிக் கொள்வது? நியாயமாகவே தெரிய வில்லை. வேண்டாம் என்றாலோ, அத்தோடு விடாமல், 'ஞைஞை' என்று தொல்லை செய்கிறாள்.''

கசப்பும் கடுப்புமான குரலும் வார்த்தைகளும் நினைவு வர, ''ரொம்ப ரோஷக்காரி போல!'' என்றாள் தங்கை.

''ரோஷம் மட்டுமில்லை. குடும்பமே அவளைத்தான் சார்ந்து நிற்பதைப் பார்க்கும்போது, கெட்டிக்காரியாகவும் தோன்றுகிறது!'' என்றான் சைதன்யன்.

''அது நிஜம்! அவள் ரொம்பவே கெட்டிக்காரிதான்!'' என்று சிறு கோபத்துடன் கூறினாள் தங்கை!

வியப்புடன் திரும்பிப் பார்த்துவிட்டு, ''என்ன விஷ யம், மைத்திம்மா? நீ எதிலே அவளிடம் மாட்டினாய்?'' என்று வினவினான் பெரியவன்.

இதற்குத்தான் வாயையே திறக்கக்கூடாது என்பது! இனிச் சொல்லாமல் இருக்கவும் முடியாது. அண்ண னிடம் பொய் சொல்லவும் முடியாது. கண்டுபிடித்து விடுவான்!

''வந்து... அண்ணா, நீ மேனகாவைத் தப்பாக நினைக் கக் கூடாது. அண்ணி எனக்காகத்தான் சொன்னாள். ஆனால்...'' என்ற பீடிகையுடன் நடந்த கதை மெல்ல வெளியே வந்தது.

முழுதும் கேட்ட பின், வாய்விட்டு நகைத்தான், சைதன்யன். ''பரவாயில்லையே! ஆனாலும், இவ்வளவு சாமர்த்தியம், நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்று வியந்து பாராட்டினான். ''அதுவும், சிசி காமிரா வைக்க வேண்டும் என்று, ரொம்ப நாளாகக் கேட்டிருப்பாள் போல! இப்போது பிரச்சனையைக் காட்டிக் கேட்டதும், நிர்வாகம் சம்மதித்துவிட்டது. இப்படிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியமும் இருக்கிறது பார்! நிறையச் சாதிப்பாள் என்று நினைக்கிறேன்.''

ஓரக் கண்ணால் அண்ணனைப் பார்த்துவிட்டு, ''ஒரேயடியாகப் புகழாதே, அண்ணா! சுமனசாவுக்குச் சளி பிடித்து விடப் போகிறது!'' என்று எச்சரித்தாள் மைத்திரேயி.

''சுமனசாவா? யார் அது? ஓ, சுமியின் விரிவாக்கம் சுமனசாவா? நல்ல பெயர்! அவளது குணத்துக்கு ஏற்ற பெயர்! இடையில் 'ஞைஞை' பண்ணாவிட்டால், பெயருக்குப் பொருத்தமாகவே இருப்பாள்! நேர்மை, அழகு, சாமர்த்தியம்...''

''அண்ணா!'' என்று அதிர்ச்சியுடன் குறுக்கிட்டாள் மைத்திரேயி. ''என்னண்ணா, சுமனசாவை இவ்வளவு புகழ்கிறாயே. மேனகாவை வெறுத்து விடுவாயா?'' என்று கவலையாகக் கேட்டாள்.

காரை வீட்டுக்குள் கொணர்ந்து நிறுத்திய, சைதன்யன் ஆச்சரியத்துடன், தங்கையை நோக்கினான் ''என்ன மைத்தி, இப்படிப் பேசுகிறாய்? ஒருவரை உயர்வாக மதிப்பிட்டால் , இன்னொருவரின் தட்டு தாழ்ந்துதான் ஆக வேண்டும் என்று என்ன கட்டாயம்? யோசி. நேற்று

அம்மா சிவப்புச் சேலை கட்டினார்கள். இன்று பச்சை. இரண்டுமே அழகாக இல்லையா? இரண்டுமே உயர்வு தான், இல்லையா?'' என்று கேட்டான்.

மைத்திரேயி இன்னமும் குழம்பிப் போனாள்.

இருவருமே உயர்வுதான் என்றால், இருவரில் யாரை மணக்கவும் தயார் என்கிறானா? அவனிடமே கேட்டாள்.

''எ... என்னண்ணா குழப்புகிறாய்? இப்போது நீ மேனகாவை மணப்பதாக இருக்கிறாயா? இல்லையா?''என்று நேரடியாகக் கேட்டாள்.

தங்கையை ஆழப் பார்த்து, ''என் திருமணப் பொறுப்பைத்தான் உன்னிடம் எப்போதோ கொடுத்து விட்டேனேம்மா? அப்புறம், என்னிடம் என்ன கேள்வி? தெளிவு இருக்க வேண்டியது உனக்குத்தான்!'' என்றவாறு, காரை விட்டு இறங்கினான் சைதன்யன்.

பொறுப்பு அவளதுதான். அண்ணன் அவளுக்குத் தலையாட்டினால், அம்மா அப்பா கூட, எதிர்மறையாக எதுவும் சொல்ல மாட்டார்கள்.

ஆனால், தெளிவு என்று ஒரு வார்த்தையை அண்ணன் ஏன் சொன்னான்? தெளிந்த பிறகுதானே, மேனகையை அண்ணியாக்கும் பேச்சை அவள் எடுத்ததே!

அன்றைய விருந்து நிகழ்ச்சி கலைந்து போனதில், திருமணம் பற்றிய பேச்சில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருந்தது. அன்று சைதன்யன் வராதது தப்பு என்பது போல எண்ணம் மேனகா வீட்டுப் பெரியவர்களுக்கு இருந்தது. சரியான காரணம் இருப்பதால், அதில் தப்பே கிடையாது என்பது, நந்தகுமார் தம்பதியின் கருத்து.

ஒன்றுக்கொன்று மாறான இந்தக் கருத்துக்களால், மணப் பேச்சு அடியோடு முறிந்து போகாவிட்டாலும், மறுபடி இதைத் தொடங்குவது யார் என்பது, ஒரு சிறு கௌரவப் பிரச்சனையாகி, இரு தரப்பும் தயக்கம் காட்டினர்.

வயதில் மிகவும் சின்னவளே என்றாலும், அந்த வயதுக்கே உரிய துடிப்புடன் மேனகா - சைதன்யன் திரு மணத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டவள், மைத்தி ரேயிதான். இப்போதும், அதே துடிப்புடன் அவளே உந்துதலைத் தொடங்கலாம். ஆனால், மேனகாதான் அண்ணியாக வர வேண்டும் என்பதில், அவள் மனதில் எந்த மாற்றமும் இல்லாதபோதும், பழைய வேகம் அவளுள்ளும் உருவாக மறுத்தது.

போனால் போகிறது, மன்னித்து விடுகிறோம் என்பது போலப் பரசுராமன் குடும்பம் அண்ணனை ஏற்பதை அவளால் அணுவளவும் ஒத்துக் கொள்ள முடிய வில்லை!

பரசுராமன் பெரிய ராணுவ மேஜராக இருக்கலாம். ஆனால் அங்கேயும் இடம் பொருள் ஏவல் அறிந்து நடப்பது உண்டுதானே?

அத்தோடு, அவளுடைய அண்ணன் எப்பேர்ப்பட் டவன்! அவனைப் போல ஒருவன் கணவனாகக் கிடைப்பது, மேனகாவுக்கும் பெரும் பேறுதானே! அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு அது நன்கு புரியட்டுமே என்று தோன்றிவிட, அவளும் அதிகப்படி முனைப்புக் காட்டவில்லை.

ஆனால், மேனகாவை விட்டுவிடவும், அவளுக்கு மனம் கிடையாது. இந்த மாதிரி அழகோடு, நாத்தனார் உறவான தன்னிடம் அன்பும் கொண்ட இன்னொருத்தி எங்கே கிடைப்பாள்? இவளை அண்ணன் மணந்தால், அண்ணன் உறவும், பிறந்த வீடும் மைத்திக்கு என்றும் நிலைக்குமே!

அதனால், இவள்தான் அண்ணி என்பதில், மைத்தி ரேயி நிச்சயமாகவே இருந்தாள். மேனகாவும், அதே கருத்தையே காட்டி நடக்கவும், அவள் வீட்டுப் பெரிய வர்கள், தானாக இறங்கி வருவார்கள், அதுவரை பொறுமையாகக் காத்திருப்பது மேல் என்று நினைத்தாள் அவள்.

எதற்கும்... என்று தாயிடம் தன் எண்ணம் பற்றி, அவள் கூறியபோது, பெற்றவளின் கருத்தும் அது வாகவே இருக்கவே, மைத்திக்கு நிம்மதியாக இருந்தது.

இடையே திருப்தி சூப்பர் மார்க்கெட் சம்பவம், அவ ளுள் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியது. தன் மீது கொண்ட அன்பினால், மேனகா செய்த தவறு என்று, உடனே சமாதானமும் ஆகிவிட்டது.

ஆனால் 'அவளைப் போலப் பொய்யை இயல்பாகச் சொல்ல, உன்னால் முடியவில்லை' என்று சுமனசா சொன்னது, திடும் திடும் என நினைவு வந்து, மைத்தி யின் மன அமைதியைக் கெடுத்தது.

பொய்யை இயல்பாகச் சொல்வது என்றால், அடிக் கடி பொய் சொல்லிப் பழகியிருந்தால்தானே முடியும்? மேனகா அடிக்கடி பொய் சொல்கிறவளா?

இந்த யோசனையோடு, அண்ணன் சொன்ன 'தெளிவு'ம் சேர்ந்து கொள்ள, மைத்தியின் அன்றைய தூக்கம் கிட்டத்தட்ட கெட்டுப் போயிற்று! அதே சிந்தனை!

இதெல்லாம் ஒன்றுமே இல்லை! உப்புச் சப்பே இல்லாதது!

எல்லா வகையிலும் மிகச் சிறந்தவனான சைதன்யனுக்கு மனைவி ஆகப் போகிறவளைப் பார்த்து, மற்றப் பெண்கள் எல்லோருக்கும் பொறாமையாகத்தான் இருக்கும். அந்தக் காழ்ப்புணர்ச்சியில், எவளாவது, ஏதாவது சொன்னால், அதை நினைத்து, மனதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது!

யோசித்து, யோசித்துக் கடைசியாக இந்த முடிவுக்கு வந்த பிறகே மைத்தியால் ஓரளவு நிம்மதியாகத் தூங்க முடிந்தது!

ஆனால், இரவெல்லாம் அதே நினைவாக இருந்ததாலோ, என்னவோ, காலையில் கண் விழித்து எழும் போதே, நிச்சயதார்த்தம் கூட நடக்காதபோது, அண்ணனுக்கும் மேனகைக்கும் திருமணம் நடக்கப் போகிறது என்று, சுமனசாவுக்கு எப்படித் தெரிய முடியும் என்ற கேள்வியோடுதான், மைத்திரேயி எழுந்தாள்.

இதற்கு என்ன பதில்?

திருமண விஷயமே தெரியாதபோது, மேனகையிடம் பொறாமை என்ற வாதம் முழுதாக அடிபட்டுப் போகிறதே! பின்னே, மேனகை பற்றிய சுமனசாவின் அபிப்பிராயம் சரி என்றல்லவா ஆகிறது! அதெப்படி முடியும்?

அல்லது, சுமனசாவுக்கு எல்லாம் தெரியுமோ?

இந்த உளப்பலை இதயத்தின் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்துவிட்டு, அன்றாட வாழ்வில் ஈடுபட்டாள் அவள்.

மைத்தியின் குழப்பம் தீர, இப்போதும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

மருத்துவமனையில் இருந்து சந்தானமூர்த்தி வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

அவரை வீட்டில் போய்ப் பார்த்து வரலாம் என்று, சைதன்யனும், அவனுடைய தந்தையும் கிளம்பினார்கள்.

கூட ஒரு பெண் இருந்தால், சைதன்யனிடம் வேறு எந்த முயற்சியும் நடக்காது என்று தோன்ற, மைத்திரேயியும் கூடக் கிளம்பினாள்.

வியப்புடன் பார்த்த அண்ணனிடம் முகக் கன்றலை மறைத்து நின்று, ''சுமனசாவின் நீளக் கூந்தலை இன்னொரு தரம் பார்க்க ஆசை, அண்ணா!'' என்று வாய்க்கு வந்த ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் தங்கை.

மறுபடி, மறுபடி அந்தப் பெண்ணைப் பற்றி, அண்ணனிடம் நல்ல விதமாகவே கூறும்படி ஆகிறதே! இப்போது, அவனுக்கே சுமனசாவின் கூந்தல் அழகைப் பார்க்கத் தோன்றாது? இவளே அண்ணனைச் சுமனசாவிடம் கொண்டு சேர்த்து விடப் போகிறாளா? என்ன அசட்டுத்தனம்!

நினைத்ததைப் பேசும் இந்த வாய்த் துடுக்கை அடக்குகிற போதல்லவா, அவள் மனதிலும் வளர்ந்ததாக அர்த்தம்?

தன்னைத் தானே நொந்து கொண்டவள், இனிக் கவனத்தோடு பேச வேண்டும் என்று, தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டாள்.

சற்றே குறுகலான அந்தத் தெருவுக்குள் கார் நுழையும்போதே, மைத்திக்கு ஒரு மாதிரி இருந்தது.

தெருவில் இருந்து, இரண்டு படி ஏறினால், ஒரு ஹாலும், பக்கவாட்டில் ஓர் அறையும், சமையல் அறை போலப் பின்புறம் ஏதோ கட்டடமும் தெரிந்தது.

காற்றோட்டமாக இருப்பதற்காக, நோயாளியின் கட்டில், ஹாலில் ஓர் ஓரமாகக் கிடந்தது.

வாயில் கதவை ஒட்டி, ஹாலிலேயே, செருப்புகள் கிடந்தன.

சந்தானமூர்த்தி கட்டிலில் உட்கார்ந்திருக்க, சுமனசா முன்னே வந்து வரவேற்றாள்.

''வாருங்கள்... வாருங்கள்!'' என்று அங்கே போடப் பட்டிருந்த நாற்காலிகளைக் காட்டியவள், மைத்திரேயி வாயில் அருகிலேயே நிற்கவும், அவளிடம் சென்றாள்.

''என்ன?''

நோயாளி படுத்திருக்கும் அறையிலேயே செருப்புகளைப் போடுவதா என்ற உண்மையான கரிசனமும், இந்த மாதிரி இடத்தில் வசிப்பவள், அன்று சூப்பர் மார்க்கெட்டில் என்ன போடு போட்டாள் என்கிற ஆத்திரமுமாக, ''செருப்பை ஏன் இங்கே போட்டிருக் கிறது?'' என்று சற்று இளக்காரமாகக் கேட்டாள்.

தன் இல்லாமையை எண்ணி, சுமனசாவைத் தலை குனிய வைக்கும் வேகம், அவளுக்கு. இனியேனும் தன் நிலை உணர்ந்து சுமனசா பேசட்டுமே!

ஆனால், ''அதுவா?'' என்று மைத்தியை நேராகப் பார்த்தாள் சுமனசா. ''செருப்பு வைக்கும் இடத்தில் 'ஹோம் தியேட்டர்' வைத்திருக்கிறோம். அதனால்தான் இப்படி நிலைமை! இங்கே செருப்பைக் கழற்றி விட்டு, உள்ளே வந்து உட்கார்!'' என்றுவிட்டு வந்தவர்களுக்குப் பானம் எடுத்து வரச் சென்றாள்.

ஹோம் தியேட்டரா? விட்டால், இந்த இடத்துக்குள் முழு தியேட்டரையே கட்டிவிட மாட்டாளா? என்று பொருமிய போதும், ஏ்தையும் வெளிக்காட்டாமல், சாதுவாகத் தந்தையின் அருகில் போய் அமர்ந்தாள், மைத்ரேயி.

சற்று நேரம் இருந்து, சந்தானமூர்த்தியின் உடல் நிலை பற்றி, நந்தகுமார் விசாரித்தார்.

''சமயத்தில் சின்னவர் செய்த உதவிதான் சார், இப்போது நான் உயிரோடு இருப்பதே! மருத்துவமனையில் சேர்த்துப் பணமும் கட்டி... இதற்கெல்லாம் நான் எப்படி ஈடு கட்டப் போகிறேனோ, தெரியவில்லை,'' என்று சந்தானமூர்த்தி குரல் தழுதழுத்தார்.

''ஈடு கட்டுவது என்றெல்லாம், என்ன பேச்சு இது சந்தானம்? நீங்கள் உண்மையான உழைப்பாளி. அதனால்தானே, மகனுக்கு உதவியாக உங்களை நான் அனுப்பியதே. நீங்களும், அவனுக்குப் பெரும் பலமாக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்குச் செய்யாமல், வேறு யாருக்குச் செய்வது? ஏதேனும் பதில் செய்ய வேண்டும் என்று நினைத்தால் மனதை அலட்டிக் கொள்ளாமல், நல்லபடியாக ஓய்வெடுங்கள். அவசரப்படாமல் முழு ஆரோக்கியம் திரும்பி, டாக்டர் அனுமதி கொடுத்த

பிறகு, அலுவலகத்துக்கு வாருங்கள், போதும்! அதுவரை எந்தக் கவலையும் இல்லாமல் இருங்கள். பணக் கவலையும் கூட!'' என்றுரைத்து, மகனைப் பார்த்தார் நந்தகுமார்.

இருவரும் பேசி வைத்து வந்ததுபோல, ''ஆமாம் சார், நோய் விடுப்பு என்று போட்டு, மாதா மாதம் உங்கள் சம்பளம் வீட்டுக்கு வரும். செலவைப் பற்றிக் கவலைப்படாமல், உடம்பு நன்கு குணமானதும், வேலைக்கு வாருங்கள்,'' என்றான் சைதன்யன்.

மைத்திரேயி எதிர்பார்த்ததற்கு மாறாக, ஓர் அழகான ட்ரேயில் சின்ன கண்ணாடித் தம்ளர்களில், எலுமிச்சைச் சாறு கொணர்ந்து கொடுத்தாள் சுமனசா.

''என் தங்கை மகள், சார். பெயர் சுமனசா. இவள் மட்டும் இல்லை என்றால், வீடு என்ன ஆகியிருக்குமோ தெரியாது!''

கண்டிப்பது போலப் பார்த்து, ''அலட்டிக் கொள்ள வேண்டாம் என்று, உங்களிடம் டாக்டர் சொல்லவில்லை? தேவைக்கு மட்டும் பேசுங்கள், மாமா,'' என்று மாமனிடம் சொல்லிவிட்டு, நந்தகுமாரைப் பார்த்தாள் சுமனசா.

''சார், மாமாவுக்கு மருத்துவமனைச் செலவு எவ்வளவு ஆயிற்று, அதை எந்த மாதிரியாகத் திருப்பிக் கொடுப்பது என்று, அதெல்லாம் தெரிந்து கொள்ள விருப்பம். முதலாளிகளிடம் அதைக் கேட்டால், அதிகப் பிரசங்கித்தனமாகத் தோன்றி விடுமோ என்று தயக்கம். ஆனால் அதற்காகத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா?

சொல்லுங்கள் சார். இந்தப் பணத்தை நாங்கள் எப்படித் திருப்புவது?'' என்று கேட்டாள்.

தந்தைக்கும் மகனுக்கும் மின் வெட்டாய், ஒரு பார்வைப் பரிமாற்றம் நிகழ்ந்த பின், சைதன்யன் பானத்தில் கவனமாக இருக்க, தானும் ஒரு மிடறு விழுங்கி விட்டு, அவனைப் பெற்றவர் சொன்னார். ''பாரம்மா, இந்த மருத்துவமனை, சற்று நட்சத்திர ஹோட்டல் மாதிரியானது. அதே போலத்தான் செலவும். எந்த மருத்துவக் காப்பீடும் இதை ஏற்காது. அத்தோடு, அங்கே அழைத்துப் போனதும், சைதன்யனின் சுய விருப்பம்! சந்தான மூர்த்தி தானாக அங்கே போயிருக்க மாட்டார். அவரது வேலையின் மதிப்பும் எங்களுக்குத் தெரியும். அதனால், அந்தச் செலவை நிர்வாகமே ஏற்கும். இனி இந்தப் பணக் கவலையை விட்டு விடு,'' என்று முடித்தார்.

''அப்படி இல்லை சார். மருத்துவத்துக்கும், கோயிலுக்கும் நாமேதான் செலவு செய்ய வேண்டும் என்று, என் அம்மா சொல்வார்கள். அதனால்...''

''ஆனால், உன் மாமாவின் வேலையின் மதிப்பு பற்றி, அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே! இதை விட அதிகப் பணத்துக்குக் கூட, அது ஈடுகட்டும். அதனால், இந்தப் பேச்சு, இத்தோடு நிற்கட்டும்!'' என்று சற்று அழுத்தமான குரலில், முதலாளியாகக் கூறி முடித்தார் நந்தகுமார்.

உடனேயே, ''உன் பானத் தயாரிப்பு பிரமாதம், சுமனசா. அடுத்து நான் வரும்போது, இதே போலச் செய்து தர வேண்டும்,'' என்று ஒரு புன்னகையும் செய்தார்.

வாழ்க்கையில் ஜெயிப்பது எப்படி என்று கொஞ்சம் புரிந்தாற்போல இருந்தது. மைத்திரேயிக்கு. ஒரு கையை ஓங்கிக் காட்டிவிட்டு, அடுத்த கையைப் பற்றிக் குலுக்குகிறாரே!

சுமனசாவுக்கும் புரிந்தது போலும். சற்றுத் தயக்கமாக என்றாலும், லேசாக முறுவலித்து, "கட்டாயம் சார்!" என்றாள் அவள்.

தந்தை சொன்னது நிஜமாக, மைத்திக்கும் பழச் சாறின் சுவை மிகவும் பிடித்தது. ஒரேயடியாகச் சர்க்கரையை அள்ளிக் கொட்டி விடாமல், மிதமான இனிப்புடன், லேசான உப்புச் சுவையும் கலந்து, வெனிலா போல ஏதோ ஒரு வாசனையுமாக, பானம் வெகு சுவையாகத் தான் இருந்தது.

மருத்துவச் செலவு பற்றி, சுமனசா உண்மை யாகத்தான் கேட்கிறாளோ என்ற சந்தேகம், மைத்திக்கு அப்போது வந்தது. நடப்பைப் பார்த்தால், ரொம்பவும் அப்படித்தான் தோன்றியது. ஆனால், சொல்ல மாட் டேன் என்பவர்களிடம் திரும்பத் திரும்பக் கேட்பா னேன்? இந்த விவரம், மருத்துவமனையில் விசாரித் தாலே தெரிந்து விடாதா? அதைச் செய்யாமல், சும்மா பாவ்லாதான் காட்டுகிறாள்!

இந்த அண்ணனும், அப்பாவும், அதை நம்புகிறார்கள்! சரியான தருணத்தில், இதை வெளிக் கொணர வேண் டும்! இப்போது கூறினால், அவர்கள் வேண்டாம் என்கிற பணத்தை வசூல் செய்வதற்காகச் சொல்வது போலச் சின்னத்தனமாகத் தோன்றும். வேறு சரியான நேரம்தான் பார்க்க வேண்டும்.

இந்தக் குச்சு வீட்டுக்கு அடுத்து வேறு வருவாராமே! அதையும் பார்க்கலாம்!

உள்ளூரக் கறுவியவாறே, தந்தை தமையனோடு, அங் கிருந்து கிளம்பினாள் மைத்திரேயி.

# 7

வீட்டுக்குச் செல்லும்போது, நந்தகுமார், மகனிடம் ஒரு விளக்கம் கேட்டார்.

''ஏன் தம்பி, நம் அலுவலர்களை இவ்வளவு மோசமான நிலையிலா நாம் வைத்திருக்கிறோம்? முன்னைவிடக் கீழிறங்கித் தெரிகிறார்? விலைவாசி உயர்வாலா?' என்று வினவினார்.

''அப்படி இல்லைப்பா. சந்தானமூர்த்தி சாருக்குச் செலவுகள் அதிகம் போலத் தெரிகிறது. பையன் நிர்வாகம் பற்றிப் பெரிய படிப்பு படிக்கிறான். கட்டணத்தை அவனே சமாளித்தாலும், உணவு, உறைவிடம் என்று இருக்கிறதே. மூத்த பெண்ணுக்குச் சமீபத்தில் திருமணம் நடந்தது, பெண் நன்றாக இருக்க வேண்டும் என்று, சற்று அதிகச் செலவு செய்திருப்பார் போல! அந்தக் கடனுக் குக் கட்டுவது வேறு.''

''அக்கா மகளை வேறு கூட வைத்திருக்கிறார்! எப்படியும் இன்னொரு வயிறுதானே?''

''இல்லையப்பா. அந்தப் பெண்ணைச் செலவுக் கணக்கில் சேர்க்க முடியாது. தாயார் இறந்த பிறகு, இங்கே கூட்டி வந்தார்களாம். ஆனால், அவளும் வேலை பார்க்கிறாள்.

''ஆனால், அவள் வந்த பிறகுதான், வீட்டில் எல்லோரும் செலவு பற்றிக் கவலை இல்லாது இருக்க முடிவதாக, சந்தான மூர்த்தியுடைய மனைவி ஒரு தரம் சொன்னார்கள். எல்லாம் அவள்தான்திட்டம் போட்டுச் செய்வாளாம். ஒருநாள், சுமனசா வரத் தாமதம் ஆகிவிட்டது என்று, அந்த அம்மாள் பதறிப் போன சமயம், நான் போய்ச் சற்று அமைதியாகப் பேசவும், அதெல்லாம் சொல்லிப் புலம்பினார்கள்.

''அதுவரை, அவளுக்குத் திமிர் இருப்பதாக நினைப்பேன். பிறகுதான், அது ஒரு பாதுகாப்பு வளையமோ என்று தோன்றியது. யாரும் நோகடித்து விடாமல், ஒரு தற்காப்பு! ஆனால் ரோஷம்தான் கொஞ்சம் அதிகமாகத் தெரிகிறது!'' என்று முடித்தான் சைதன்யன்.

மைத்தி வேற யோசித்தாள். பணத்துக்கு இவ்வளவு சிக்கல் இருக்கும்போது, சுடர் மருத்துவமனைச் செலவை சுமனாசாவால் எப்படிக் கொடுக்க முடியும்?

''நான் அடிக்கிற மாதிரி அடிப்பேன். நீ அழுகிற மாதிரி அழு!'' என்று பழைய நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றில் பார்த்த நினைவு அவளுக்கு வந்தது. அதே போலத் தான் சுமனசாவும் கேட்பது போலக் கேட்டுக் கொண்டேதான் இருப்பாள். ஆனால், அது நிஜம் அல்ல. பணத்தைக் கட்டும் எண்ணம் அவளுக்குக் கிடையவே கிடையாது.

போகட்டும். வீட்டில் இவ்வளவு கஷ்டம் என்றால், தராமலே இருந்துவிட்டுப் போகட்டும். இந்தப் பணம் வந்துதான் வீட்டில் நிறைய வேண்டும் என்று இல்லை! தேவைப்படுகிறவர்களிடம் இருந்து பிடுங்கும் கெட்ட புத்தி, அவள் வீட்டில் யாருக்கும் கிடையாது. அவளுக் கும்தான்.

எப்படியோ மேனகைக்கும் சைதன்யனுக்கும் இடை யில் இவள் வராமல் இருந்தால் போதும். அண்ணன் மனதில் சுமங்களா உயர்வாகவும், மேனகை தாழ்வாகவும் தோன்றாமல் இருந்தால், அது கூடப் போதும்.

குடும்பத்தில் இயல்பான பெருந்தன்மையோடு, மைத்திரேயி இப்படி நினைத்து முடித்த போது வீடு வந்து விட்டது. அண்ணனுக்கு உதவியாகக் கார் கதவுகளை மூடிவிட்டு, அவனோடு சேர்ந்து செல்லும்போது, அவன் சட்டென நகைத்தான்.

தங்கை கேள்வியாய் நோக்கவும், ''ஹோம் தியேட் டரா? பரவாயில்லை. நகைச்சுவை உணர்வும் இருக் கிறது. அதே சமயம், நெத்தியடி கொடுக்கவும் தெரி கிறது!'' என்று, மேலும் சிரித்தான் அவன்.

வேடிக்கை புரிந்து முறுவலித்தாலும், அவளுக்குத் திகைப்பாகவும் இருந்தது.

இவ்வளவு நேரம் அண்ணன் அவளையா நினைத்துக் கொண்டிருந்தான்? சே, அன்று அந்த சூப்பர் மார்க் கெட்டுக்குப் போயிருக்கவே கூடாது!

கல்லூரியில் சில முக்கியமான பாடங்களில் கவனம் செலுத்தும்படியாக இருந்ததால், வீடு உண்டு கல்லூரி

உண்டு, என்று சில தினங்கள் வேறு நினைவே இல் லாமல், மைத்திரேயி இருந்து விட்டாள்.

ஆனால், நாலாவது நாள், மேனகை போன் செய்து விட்டாள்.

தானே போய், மேலே விழுவது போலத் தோன்றி விடக் கூடாது என்று, அடக்க ஒடுக்கமாக மூன்று நாட்கள் இருந்தவளுக்கு, அதற்கு மேல் தாங்கவில்லை.

அவள் தொடர்பு கொண்டது தரை வழிப் போனில் தான்.

எடுத்துப் பேசிய நடுத்தர வயதுப் பெண்ணிடம், இனிய மென் குரலில், மைத்தியிடம் பேச வேண்டும் என்று அவள் செய்தி சொல்ல, சற்று நேரத்தில் மைத்தி வந்து போனை எடுத்தாள்.

''யார், மேனகாவா? நீ எதற்கு இந்த லைனில் பேசுகிறாய்? என் செல்லுக்குப் பண்ணியிருக்கலாமே!'' என்று அவள் கேட்கவும், ஒரு வினாடி அமைதியின் பின், ''அது... ஏதோ தப்பாக அழுத்தி விட்டேன் போல. வேற யாரோ எடுத்து, குரல் நன்றாக இருக்கிறதே, நேரில் சந்திப்போமா என்று ஒரு மாதிரிப் பேசவும், எனக்கு ஒரே பயமாகி விட்டது. அதிருக்கட்டும். சற்று முன் டெலி போனை எடுத்துப் பேசியது யார்?'' என்று ஆவலாக விசாரித்தாள் மேனகை.

''அதுவா? தேவகி ஆன்ட்டி, அம்மாவுக்கு உதவிக்காக வீட்டில் இருப்பவர்கள். ஏன்? தப்பாக எதுவும் சொன் னார்களா? அவர்கள் அப்படிப்பட்ட ஆள் இல்லையே! என்ன விஷயம்?'' என்று கேட்டாள் சின்னவள்.

கேள்வியும் கேட்டுப் பதிலையும் நீயே சொல்லிவிட்டு, அப்புறம் என்னடி கேள்வி என்று உள்ளூரக் கடுப்பு மேனகைக்கு. அத்தோடு வருங்கால மாமியாருக்கு என்று பயன்படுத்திய இன்குரல் ஒரு வேலைக்காரியிடம் அல்லவா வீணாகி இருக்கிறது!

அவள் வேறு, தேவகி ஆ...ன்ட்டியாம்! காரோட்டு கிறவன் தாமஸ் தா...த்தா! அந்த வீட்டில் நிறைய மாற்ற வேண்டியிருக்கிறது!

''மேனகா, எனக்கு நிறையப் படிக்க வேண்டியிருக்கிறது. நாளைக்கு மதியத்தோடு, டெஸ்ட் முடிந்து விடும். அப்புறமாகப் பேசுவோமா? இப்போது வைத்து விடு கிறேன்,'' என்ற மைத்திரேயி, ரிசீவரை வைத்துவிட்டுப் போயே விட்டாள்.

வருங்கால அண்ணி! அவள் என்ன சொல்ல அழைத் தாளோ என்ற அக்கறையே இல்லையா? ஏதேனும் முக்கியமான விஷயம் சொல்லக் கூப்பிட்டிருந்தால்?

மைத்தியை மறுபடி அழைத்து, இதைக் கேட்க வேண்டும் என்ற வேகத்தையும், எண்களை அழுத்தத் துடித்த கையையும் அடக்கிக் கொண்டு, டெலிபோன் கருவியை மேனகா கீழே வைத்தாள்.

ஏனெனில், மைத்தியிடம் சொல்வதற்கு, முக்கியமான விஷயம் எதுவும் அப்போது அவளிடம் இல்லை!

ரொம்ப யோசித்து, மறுநாள் மதியத்துக்குள், ஒரு முக்கியமான விஷயத்தை மேனகா கண்டு பிடித்தாள். அதுதான் ஷாப்பிங் போவது?

அன்று 'திருப்தி' சூப்பர் மார்க்கெட்டில் வீணாகிப் போன பணத்தைத் திரும்பவும் தருவதாகச் சைதன்யன்

சொல்லியிருந்தான் அல்லவா? அதை வாங்கிப்போய் ஏதாவது வாங்குவது!

'திருப்தி' மாதிரி ஒரே இடத்தில் எல்லாம் கிடைப்பது கடினம் என்றாலும், அலங்காரப் பொருட்களுக்கு எத்தனையோ கடைகள் இருக்கின்றனவே!

அன்று மதியம், கடைசிப் பரிட்சையை முடித்து விட்டு, மைத்திரேயி வகுப்பறையை விட்டு வெளியே வரும்போது, மேனகாவும் கல்லூரி வளாகத்துக்கே வந்து காத்திருந்தாள்.

நாலைந்து நாட்கள் சற்றுக் கண் விழித்துப் படித்த தாலோ, என்னவோ, மேனகையின் ஷாப்பிங் திட்டத்தில், அவள் அளவு உற்சாகத்தோடு மைத்தியால் கலந்து கொள்ள முடியவில்லை!

ஆனால், ஆவலில் கண்கள் பளபளக்க நின்ற மேனகா விடம் மறுக்கவும் மனமின்றி, சைதன்யனை செல்லில் கூப்பிட்டாள்.

விஷயம் அறிந்ததும், ''மைத்திம்மா, நீயே இங்கே வந்து பணத்தை வாங்கிக் கொள்கிறாயாடா? அலுவல கத்துக்குத்தான். தொழிற்சாலைக்கு அல்ல. கொஞ்சம் வேலையாக இருப்பதால் இங்கிருந்து கிளம்பி வர, என்னால் இயலாது,'' என்றான் அண்ணன்.

''சரிண்ணா,'' என்று செல்லை அணைத்தாள் மைத்தி ரேயி.

கல்லூரியின் கேட் அருகே நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார், தாமஸ்.

பெண்கள் இருவரையும் கண்டதும், ''அட, இந்தப் பாப்பாவும் இங்கிட்டுதான் படிக்குதா? நான் பார்த்ததே இல்லியே?'' என்று வியந்தார்.

ஷாப்பிங் செல்லும் விஷயம் சொன்னதும், ''ஏன் பாப்பா, இன்னைக்கே போகணுமா? நாலு நாள் பரிட்சை எழுதின களைப்பு முகத்திலேயே தெரியுதே!... சரி, இங்கேயே நில்லு. காரை இங்கே கொண்டு வாரேன்.'' என்றார்.

அண்ணனும் இதையேதான் சொல்லப் போகிறான்.

ஒரு வினாடி யோசித்து, கைப்பையில் இருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து, மைத்தி அவரிடம் கொடுத்தாள். ''ஒரு சின்ன வேலை இருக்கிறது, தாத்தா. பத்து நிமிஷம் ஆகும். நீங்கள் அதற்குள் ஒரு டீ குடித்துவிட்டு வாருங்கள்,'' என்று அனுப்பினாள்.

''இன்னும் என்ன வேலை, மைத்தி?'' என்று முகம் சுழித்த மேனகையிடம், ''வேலை இல்லை மேனகா. உள்ளே 'ரெஸ்ட்' அறையில் முகத்தைக் கழுவிக் கொண்டு, காண்டீனில் காபி டீ ஏதாவது குடித்துவிட்டு வரலாம். அல்லது, அண்ணனும், தாமஸ் தாத்தா மாதிரியே, ஏதாவது சொல்லி, இன்னொரு நாள் போ என்பார். அதற்காகத்தான்,'' என்றாள்.

சட்டென முகம் மலர்ந்து, ''நல்ல ஐடியா!'' என்றாள் மேனகை.

சற்றுத் தாமதமாக வருவதாக, சைதன்யனிடம் தெரிவித்துவிட்டு, மைத்திரேயி முகம் கழுவப் போனாள். ஆளுக்கு ஒரு துண்டு பீட்சா உண்டு, டீயும் குடித்துவிட்டு வரும்போது, அவள் முகம் வெகுவாகத் தெளிவு பெற்றிருந்தது.

சைதன்யனின் அலுவலகத்தில் கார் நின்றபோது, தான் காரிலேயே காத்திருப்பதாக மேனகா கூறினாள்.

''என் தாத்தாவுக்குத் தெரிந்தால், நான் உன் அண்ணனைப் பார்க்கவென்றே வந்ததாக எண்ணிக் கொள்வார். முறைப்படி திருமணம் நிச்சயம் ஆகிறவரை, அதெல்லாம் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லியிருப்பதால், நான் இங்கேயே இருக்கிறேன், மைத்தி!'' என்று காரணமும் சொன்னாள்.

ஓரளவு இது உண்மையே என்றாலும், முக்கியமான காரணம் இன்னொன்று இருந்தது.

மைத்திரேயி பணம் வாங்கப் போகிறாள். கூடப் போனால், அவளும் பணத்துக்காக அங்கே வந்து நிற்பது போலத் தோன்றும். இப்போதைக்கு அந்த எண்ணம் வேண்டாம். பிறகு, எல்லாமே அவளதுதானே?

சைதன்யனே வெளியே வந்து வற்புறுத்தி அழைத்தால்... அப்போது வேண்டுமானால், உள்ளே போகலாம்.

தனியாகச் சென்று அண்ணனின் அறைக்குள் உரிமையோடு சென்ற மைத்திரேயிக்கு, அங்கே ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

சைதன்யன், சுமனசாவைக் கிட்டத்தட்ட அணைத்தாற்போல, நின்று கொண்டிருந்தான்.

திகைப்பும், அதிர்ச்சியுமாக, ''அண்ணா!'' என்றவளின் வாயிலிருந்து காற்றுத்தான் வந்தது.

அதற்குள் அரவம் உணர்ந்து தலை திருப்பிப் பார்த்தவன், ''வாம்மா,'' என்று இயல்பாக வரவேற்றுவிட்டு, ''அந்தப் பக்கம் பறந்து விடாமல் பிடித்துக் கொள், சுமனசா,'' என்று கூறி, மெதுவாக அவளை விட்டு விலகி வந்தான்.

அதன் பிறகே, சைதன்யனின் அகலமான மேஜை மீது பரத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய கட்டட வரை படத்தை, மைத்திரேயி கவனித்தாள். நாலைந்து வரை படங்கள்.

இதில், இப்படி நெருங்கி நின்று என்ன பார்க்கிறார்கள்? அதிலும், அவளைச் சுற்றி அணைத்தாற் போலக் கையை வைத்து?

என்னவாக இருந்தாலும், சுமனசா அதைச் சொல்லப் பிரியப்படவில்லை என்று தெரிந்தது.

மைத்தியிடம், ''ஹலோ!'' என்றதோடு, அத்தனை காகிதங்களையும் சேர்த்து அடுக்கி, பேப்பர் வெயிட் ஒன்றை அவற்றின் மேல் வைத்துவிட்டு ''அவ்வளவு தான், சார். நேராகப் பார்ப்பது எது, சுழல்வது எது என்று குறித்திருக்கிறேன். எத்தனை என்று பார்த்து, எவ்வளவு ஆகும் என்று கூடிய சீக்கிரம் தெரிவியுங்கள். நான் வருகிறேன்,'' என்றவள், மறுபடியும் மைத்தி பக்கம் திரும்பி, ''பை!'' என்றதோடு, விடுவிடென்று வெளி யேறிச் சென்று விட்டாள்.

வந்த வேலையைவிட, அண்ணனும் சுமனசாவும் ஒட்டிப் பழகிய ரகசியத்தை அறிவது, முக்கியமானதாகப் பட்டது தங்கைக்கு.

''என்னண்ணா பெரிய ரகசியம்? அப்படி மூடி மறைத்து வைத்துப் பூடகமாகப் பேசிவிட்டுப் போகிறாளே!'' என்று வழக்கம் போல, அண்ணனிடம் வெளிப்படை யாகவே கேட்டாள்.

யோசனையாகப் பார்த்துவிட்டு, ''ரகசியம் எதுவும் இல்லை. மைத்தி. விஷயம் உனக்குச் சங்கடமாக

இருக்குமோ என்றுதான். சுமனசா வெளிப்படையாகப் பேசாதது. 'திருப்தி' சூப்பர் மார்க்கெட்டின் வரைபடம், இது. ஒவ்வொரு தளத்திலும், சிசி கேமிராக்களை, எங்கெங்கே எத்தனை பொருத்துவது என்று திட்டமிடவே, சுமனசா வந்தாள். நீ வருமுன் முடித்து விடலாம் என்றுதான் முயன்றோம். கிட்டத்தட்ட முடித்தும் விட்டோம். எண்ணிக்கை மட்டும்தான் கூட்டிப் பார்க்க வேண்டியிருந்தது. ஆனால், அவள் படம் தெளிவாக வரைந்திருப்பதால், எளிதாகக் கணக்கிட்டு விடலாம். எனவே, அதைக் குறிப்பாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்,'' என்றான் சகோதரன்.

அப்பப்பா! பண்பாட்டின் உருவமாகத் தன்னை எப்படி உயர்த்திக் கொண்டிருக்கிறாள்! கடைசியாகப் பார்த்தால், அவளுக்காகவாம்! மைத்திக்காகவா, அண்ணனை அப்படி ஒட்டிக் கொண்டு நின்றாள்? இன்னும்... இன்னும் என்னது?

புரியாத ஏதோ மனதை உறுத்த, அதை ஒதுக்கி, ''ஆனால், அவளிடம், அவ்வளவு நெருக்கமாகவா அண்ணா, நிற்பது? யாராவது பார்த்தால், என்ன எண்ணுவார்கள்? அவளுக்கே கூட, மனதில் தப்பு ஆசைகள் தோன்றக் கூடுமே!'' என்றாள் தங்கை.

மேனகை சொல்வது போல, சில மாதிரிப் பெண்களைப் பற்றி, அண்ணனுக்குத் தெரியவில்லைதான்.

எடுத்துச் சொன்னால், கண்டிப்பது போலப் பார்த்தான் சைதன்யன்.

''இதில் நெருக்கம் என்ன, மைத்தி? இருவரும் அருகருகே நின்று வேலை பார்த்துக் கொண்டிருந்தோம்.

காற்றில் ஒரு தாள் பறக்கப் போனது, நான் சட்டென அவளைச் சுற்றிக் கையை நீட்டி, அதைப் பறக்காமல் பிடித்து வைத்துக் கொள்ள, மேலே வேலை செய்தோம். இதிலே, யாரும் தப்பாக நினைக்க என்ன இருக்கிறது?''

''ஐயோ, நான் மற்றவர்களைச் சொல்லவில்லை, அண்ணா! சுமனசாவே கொஞ்சம் கஷ்டத்தில் இருக்கிற பெண். இப்படி நீங்கள் வித்தியாசம் இல்லாமல் பழகினால் அதிலே ஆதாயம் தேடத் தோன்றாதா? வைத்தியச் செலவை வேறு வேண்டாம் என்று விட்டீர்கள். இன்னும் என்ன கிடைக்கும் என்று...''

சைதன்யனின் முக பாவனையில், தங்கையின் பேச்சு, தானாக நின்றது.

''இது உனக்குத் தகுதியில்லை, மைத்திரேயி!'' என்றான் அவன் கடுமையான குரலில். ''கொஞ்ச நாளாகவே, நீ கொஞ்சம் இறங்கிப் பேசுவது போலத்தான் தெரிகிறது. என்னது? வைத்தியச் செலவு பற்றி, ஏதோ சொன்னாயில்லையா? என்னிடம் அந்தத் தொகை பற்றி, சுமனசா எத்தனை முறை கேட்டிருப்பாள்? உனக்கும் தெரியுமே!''

''போங்கண்ணா, உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவளுக்கு உண்மையிலேயே, அந்தப் பணக் கணக்கு தெரிய வேண்டுமானால், சுடர் மருத்துவ மனையிலேயே கேட்க வேண்டியதுதானே? பைசாக் கணக்கு வரை, சொல்லியிருப்பார்களே?''

''எப்படிச் சொல்லுவார்கள்? சும்மாவே 'சுடரி'ல் எல்லோரிடமும் எல்லா விவரமும் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று உனக்குத் தெரியும். பணம் கட்டும்

நானே, யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம் என்ற பிறகு, வாயைத் திறப்பார்களா? அங்கே கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாமல்தான், அவள் என்னிடம் தொணதொணத்தது. அப்புறமும் என்ன செய்திருக் கிறாள் பார்!'' என்று மேஜையின் ஓரத்தைச் சுட்டிக் காட்டினான் அவன்.

ஐந்நூறு ரூபாய் நோட்டுக் கற்றை, சிறியதாக ஒன்று கிடந்தது.

''சுடர் மருத்துவமனைச் செலவு எங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்றுதானே, வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். இதோ நாங்கள் வழக்கமாகச் செல்லும் மருத்துவமனையில், இந்தச் சிகிச்சைக்கு ஆகக் கூடிய செலவைத் தருகிறேன் என்று, கொண்டு வந்து, தந்துவிட்டுப் போயிருக்கிறாள்! 'டிஸ்சார்ஜ் ரிப் போர்ட்'டை எடுத்துப் போய்க் காட்டி, எவ்வளவு ஆகும் என்று கேட்டுக் கண்டு பிடித்தாளாம். அப்படிப்பட்ட வளைப் போய் நீ... வேண்டாம்மா! இந்தக் கீழ்த்தரப் பேச்சு உனக்கு வேண்டாம். நீ என் வழக்கமான தங்கை யாகவே இருடா. இதோ பணம் தருகிறேன். எடுத் துப்போ,'' என்று பத்தாயிரம் கட்டு ஒன்றை எடுத்து வந்து, தங்கையிடம் கொடுத்தான், சைதன்யன்.

''தாமஸ் தாத்தாதானே வண்டியை எடுத்து வந்தது? பத்திரமாகப் போய்க் கொள்வாய்தானே? நான் இந்த வேலையை இப்போதே முடித்தாக வேண்டியிருக்கிறது. கணக்கைக் கொடுத்து விட்டால், வேலையையும் சீக்கிரமாகத் தொடங்கலாம். நமக்கும் நிறைய லாபம் வரும். அதனால்தான்...'' என்று இழுத்தான்.

அண்ணன் ஏன் மென்று விழுங்குகிறான் என்று புரிய, மைத்திரேயி நகைத்தாள்.

''ஐயோ, அண்ணா! வேலை இருக்கிறது, நீ கிளம்பு என்றால், கிளம்பி விட்டுப் போகிறேன். இதற்குப் போய், இவ்வளவு தயங்கித் தடுமாற வேண்டுமா?'' என்றாள் மைத்தி. சலுகையோடு, ''வருகிறேன், அண்ணா. நீங்கள் வேலையைப் பாருங்கள். நானும், நீங்கள் சொன்ன விதமாகவே, இனி யோசிக்கிறேன்,'' என்றுரைத்து, அவனை முகம் மலர வைத்துவிட்டு, அங்கிருந்து வெளியேறி னாள், மைத்திரேயி.

காரில் காத்திருக்கும் மேனகையிடம், நிறையச் சொல்ல வேண்டும் என்று, அவள் வேகமாகச் சென் றால், அவளுக்கு முன் நிறையக் கேள்விகளுடன், மேனகா காத்திருந்தாள்.

கார் கதவைத் திறந்து, மைத்தி ஏறு முன்பாகவே, ''அந்த திருப்தி சூப்பர்வைசர் பெண்ணுக்கு இங்கே என்ன வேலை, மைத்தி? வேலை கேட்டு வந்தாளா? தரக்கூடாது என்று அவரிடம் கண்டிப்பாகச் சொல்லி விடு. எனக்குப் பிடிக்காது. அவளுக்கு என்ன திமிர் இருந்தால், இந்த அலுவலகத்துக்கு வேலை கேட்டு வருவாள்? அவள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும்! இடுப்பை ஒடித்து, ஒடித்து அன்ன நடை நடந்து, அவள் வெளியே வருவதைப் பார்த்ததும், நான் எப்படி அதிர்ந்து போனேன், தெரியுமா? அவளை நீ பார்த்தாயா? அவளுக்கு வேலை தரவே...'' என்று படபடவென்று, வேகமாகப் பொரிந்து கொட்டினாள் மேனகை.

''ஐயோ, கொஞ்சம் நிறுத்தேன், மேனகா!'' என்று மைத்திரேயி குறுக்கிட்டுக் கத்தும்வரை, விடாமல் கேள்வி மழை தொடர்ந்தது.

தன்னிடமா மைத்திரேயி கத்தினாள் என்று அதிர்ந்து அவள் விழிக்கையில், மைத்தி வேகமாகப் பேசினாள். ''அவள் இங்கே வேலைக்காக வரவில்லை. திருப்தி நிறுவனத்திலிருந்து, ஏதோ மதிப்புக் கணக்கீடு கேட்டு, சுமனசாவை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவளும் வந்த வேலையை முடித்து விட்டுப் போகிறாள். அவ்வளவுதான்!'' என்றாள்.

''திருட்டுக் கழுதை! எல்லாம் பொய். மதிப்புக் கணக்கீட்டுக்காகத் 'திருப்தி' நிறுவனம், ஒரு சூப்பர்வைசரைத் தான் அனுப்புமாமா? அப்படியே நைசாக உன் அண்ணனைப் பார்த்து, என்னைப் பற்றி வத்தி வைக்க நினைத்து, இங்கே வருவதற்கு, அவளாகவே முன் வந்திருப்பாள்! உன்னைப் பார்த்ததும், ஒன்றும் பலிக்காது என்று பயந்து ஓடி விட்டாள்!'' என்று தானே ஓர் ஊகம் செய்து, மேனகா நிம்மதியடைந்தாள்.

ஆனால் 'வத்தி வைக்க' என்ற வார்த்தைகளில் மைத்திரேயி குழம்பிப் போனாள்.

கிளம்பும்போது உறுத்தியது, இதுதானோ?

''ஒரு நிமிஷம் அண்ணி'' என்று சற்றுத் தள்ளிப் போய் நின்று, செல்லில் சைதன்யனைத் தொடர்பு கொண்டாள். ''வேலையில் குறுக்கிட்டதற்கு சாரிண்ணா. ஆனால் 'திருப்தி'யில் நடந்த பிரச்சினை, உங்களுக்குள்... அதாவது, சுமனசாவுக்கும் உனக்கும் நடந்த பேச்சில் எப்படி வந்தது? உன்னிடம் நான் கூறியது. அவளுக்குத்

தெரிய வாய்ப்பில்லை. பின்னே, அதை உனக்குச் சொல்லி வத்தி வைக்கத்தான் அவள், இப்போது வந்தாளா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

''என்னம்மா, மறுபடியும் தப்பாகவே பேசுகிறாயே, சுமனசியிடம் நான்தான் இது பற்றிப் பேசினேன். என் தங்கை சின்னப் பெண். கூட வந்தவளும், மைத்தி மேல் உள்ள அன்பில் அவசரப்பட்டு ஏதோ செய்து விட்டாள். இருவரையும் தப்பாக எண்ண வேண்டாம் என்றேன். அதை அடியோடு மறந்து விடலாம் என்று, அவள் பெருந்தன்மையாகச் சொல்லி. அதைப் போல நடக்கவும் செய்தாள். ஆனால், நீ ஏனம்மா இப்படி? உன் பெரிய மனது எங்கே போயிற்று?'' என்று அவன் வருத்தமாகக் கேட்கவும், மைத்திக்கு மனம் கூசியது.

''இல்லைண்ணா! சாரிண்ணா! பரிட்சை, பரிட்சை என்று ஒரு வாரமாக அதிலேயே இருந்தது, களைப்பாகி விட்டது போல! எல்லாமே தப்புத் தப்பாக... சாரிண்ணா!'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

''களைப்பாக இருந்தால், இன்னொரு நாள் 'ஷாப்பிங்' போயேன்டா! வீட்டுக்குப் போய்க் குளியல் தொட்டியில் தண்ணீர் நிரப்பி, அமிழ்ந்து கிடந்தால், இதமாக இருக்குமே!'' என்று அண்ணன் யோசனை சொல்ல, அந்த அன்பில் மனம் குளிர்ந்தவாறே, காருக்குத் திரும்பி வந்தாள்.

அவளைக் கண்டதும் ''என்ன மைத்தி, எவ்வளவு நேரம் நான் காத்திருப்பது? நாம் இரண்டு பேருக்கும் பொருந்துவது பார்த்து, நாலு கடை அலைந்து, தேடி வேறு வாங்க வேண்டும். சைதன்யன் பணம் தந்து

விட்டார்தானே? வா, போகலாம்,'' என்று பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில் கூறினாள் மேனகா.

திடுமெனச் சொத்தைக் கடலையைச் சுவைத்த உணர்வு, மைத்திக்கு ஏற்பட்டது.

தங்கள் நிறுவன ஊழியர் என்று, மருத்துவத்துக்காகச் செலவு செய்த பணத்தைக் கூட ஓசி வேண்டாம் என்று ஒருத்தி... இத்தனைக்கும், பெற்ற மகள் கூட இல்லை. அவள் திருப்பித் தருகிறாள்!

ஆனால், இவள் எந்த உரிமையில், மைத்தியுடைய அண்ணன், தங்கைக்காகத் தந்த பணத்தைத் தனக்கும் சேர்த்துச் செலவு செய்யத் துடிக்கிறாள்?

அதுவும், மைத்தி களைத்திருக்கிறாள் என்று தெரிந்தும், கடை கடையாக இழுத்துப் போக வேறு திட்டமிடுகிறாளே!

எங்கேயோ பெரிதாக இடித்தது, மைத்திரேயிக்கு!

# 8

மைத்திரேயி மனம் கலங்கியது ஒரு சில வினாடிகளாகவே இருக்கக்கூடும். ஆனால், அந்தச் சில வினாடிகள், அவள் முகம் திருப்பி இருந்ததே, மேனகாவுக்குப் போதுமானதாக இருந்தது.

கூடச் சேர்ந்து, ஆமாம், ஆமாம், கொஞ்சம் வேகமாகப் போ, டிரைவர் என்று காரோட்டியை விரட்டாமல், வெறித்த பார்வையுடன், இவள் என்ன செய்கிறாள் என்று யோசித்துவிட்டு, பழைய உத்தியையே கையாண் டாள் மேனகா.

''வந்து... அந்தத் தெருக் கடைகளில் மட்டும்தான், நாம் வாங்க விரும்பிய வளையல்கள் இருக்கின்றன, மைத்தி. விலை அதிகம் உள்ளவை என்பதால், மிகவும் கொஞ்சமாகத்தான் வரவழைத்திருக்கிறார்களாம். இருப் பவை கொஞ்சம் என்பதால், சீக்கிரமாக விற்றுத் தீர்ந்து விடக் கூடும். எனக்கு இல்லா விட்டாலும் பரவா யில்லை. உன் கையில், அந்த வளையல்கள் வர்ண ஜால மாக மின்னுவதை நிறையக் கற்பனை செய்து பார்த்து விட்டேனே! கிடைக்காமல் போய் விடுமோ என்று ஒரே கவலை எனக்கு? அதனால்தான் அவசரப்படுத் தினேன். உன்னால் முடியும் தானே? பார்க்கும் முதல் கடையிலேயே கிடைத்து விட்டால், நாம் அதிகம் அலை யக் கூட நேராது... என்ன சொல்லுகிறாய்? எதுவானாலும், உன் விருப்பம் போலச் செய்வோம்,'' என்று தீனக்குரலில் விளம்பினாள்.

மைத்தியின் மனம் கனிந்தது.

இப்போதும், இவள் தோழியான தனக்காகத்தான் பேசியிருக்கிறாள்!

சொந்த நலத்தையும், மேனகா விட்டு விடவில்லை. அவளுக்கும் வாங்கத்தான் செய்வாள். அது மைத்திக்குப் புரியாமல் இல்லை. ஆனால், தொழில் குடும்பத்துப் பெண்ணான மைத்திரேயிக்கு, அது பெரிய தவறாகத் தெரியவில்லை.

'சர்வ பரித் தியாகி'யாக அந்த சுமனசா போல, மேனகா இருக்கத் தேவையில்லை! அண்ணன் குடும்பமும் செழிப்பாக இருப்பதுதான் மைத்திக்கு சந்தோஷம்! இந்த மேனகாதான் அதற்குச் சரியானவள்!

வாங்கிய வளையல்களைக் கையில் அணிந்து, சைதன்யனிடம் காட்டியபோது, ''பிரமாதம்!'' என்றான் அவன்.

''மேனகாதான் தேர்வு செய்தது. இருவரும் ஒரே தினுசில், வெவ்வேறு வண்ணங்களில் வாங்கிக் கொண் டோம்,'' என்று ஓரக் கண்ணால் அண்ணன் முகத்தைப் பார்த்தவாறே, மைத்திரேயி கூறினாள்.

தங்கையின் தலையைப் பிடித்துத் தன்புறம் திருப்பி, ''அதை இப்படி நேராகப் பார்த்தே தெரிவிக்கலாம்!'' என்றான் அவன்.

அவள் பேசாமல் பார்க்கவும் முறுவலித்து, ''அவளுக் குச் சிறந்த பொருட்களைத் தேர்ந்தெடுக்கத் தெரிகிறது, போதுமா?'' என்று கேட்டான்.

போதாது!

மேனகா பேரழகி., குணக் குன்று! நாத்தனார் ஆகப் போகிறவளிடம் இவ்வளவு அன்பாக இருக்கும் அன் புருவம்! அந்தக் குடும்பத்துக்கு ஏற்ற ஒரே ஒருத்தி!

இன்னும், இப்படி எவ்வளவோ சொல்லலாம்! ஆனால், அன்புக்கும், நல்ல குணங்களுக்கும் மொத்த ஏலம் எடுத்தவள் வேறு ஒருத்தி என்றல்லவா, இந்த அண்ணன் எண்ணுகிறான்!

அதைச் சொல்லி, சுமனசாவை அண்ணனுக்கு நினைவு படுத்த விருப்பம் இல்லாமல், ''ஆறு கடைகளில் ஏறி

இறங்கி, அலைந்து திரிந்து, வாங்கினோம், அண்ணா. அவற்றுள் இரண்டு சின்ன மூன்று மாடி சூப்பர் மார்க் கெட்டுகளும் அடக்கம். மாடியும் கீழேயும் ஏறி இறங்கி... ஒரு வழியாகத் திருப்தியாக வாங்கி விட்டுத்தான் வீட்டுக்குத் திரும்பி வர முடிந்தது!'' என்று வாங்கி வந்த கதை சொன்னாள் மைத்திரேயி.

''என்னது? என்ன சொன்னாய்? சும்மாவே, நேற்று அசதியாக இருந்தாய். அத்தோடு, இந்த வளையல் களுக்காக, அவ்வளவு நடந்தாயா? என்ன பைத்தியக் காரப் பெண்ணம்மா, நீ! இந்த வளையல்கள் அப்படி எங்கே ஓடி விடும்! பேசாமல் வீட்டிலிருந்து ஓய்வு எடுத்திருக்கலாம் அல்லவா?'' என்றான் ஆற்றாமை யோடு, அவன்.

விட்டால்தானே என்று, உடனடியாக எழுந்த வார்த் தைகள், தொண்டைக்குள்ளேயே அடங்கின.

மேனகையின் சேலை ஒன்றின் நிறத்துக்குப் பொருத்தமானதைத் தேடித்தான், அவ்வளவு அலைந் தார்கள் என்பது மட்டும் தெரிந்தால், அண்ணன் ரொம் பவும் ஆத்திரப்படுவான் என்று, அதைச் சொல்லாமலே மைத்திரேயி மறைத்து விட்டாள்.

இப்போதுள்ள நிலைமையில், மேனகையிடம் சைதன்யனுக்குக் கோபமோ, வெறுப்போ வரவே கூடாது!

பெரியவர்கள் கௌரவம் பார்த்துக் கையைக் கட்டிக் கொண்டு இருந்தாலும், சின்னவர்கள் மனநிலை அப் படியே இருக்கிறது என்று காட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், பெரியவர்கள் இளகி

வரும்போது, இதையே தொடருவார்கள் என்று, மேனகா ஏற்கெனவே சொல்லியிருந்தாள்.

மைத்தியோடு அங்கங்கே செல்வது கூ, அவளது மனதை ஜாடையாகத் தாத்தா, பாட்டிக்குத் தெரிவிக் கத்தான் என்றாளே!

அவள் அவ்வளவு உறுதியாக இருக்கும்போது. சைதன்யன் மட்டும் மாறலாமா? மாற விடலாமா?

ஆனால், சந்தான மூர்த்தியைப் பார்க்கப் போகலாம் என்று, கூட வருமாறு மறுநாளே, சைதன்யன் தங் கையை அழைத்தான்.

மைத்திரேயி யோசனையாகப் பார்க்கவும், ''பெரிய சிகிச்சைம்மா! பெரிய வேலை பார்ப்பவரும் கூட. எப்படி இருக்கிறார் என்று அவ்வப்போது விசாரிக்க வேண்டும் தானே? சின்னப் பெண்கள் இருவர் இருக்கும் இடத் துக்கு, நான் தனியாகச் செல்வதை விட, நீயும், நானுமாகச் சேர்ந்து போனால், நன்றாக இருக்கும் என்று எண்ணினேன். அந்தப் பணம் வேறு! அந்தப் பெண் பாட்டில், மிடுக்காய்க் கொண்டு வந்து வீசி விட்டுப் போய் விட்டாள். சரிதான் என்று வைத்துக் கொள்வது, நமக்கு அழகாகுமா? எப்படித் திருப்புவது என்று...'' என்று சொல்லிக் கொண்டு போன தமையன் பேச்சில் குறுக்கிட்டு, ''வீசினாளா? என்ன திமிர்!'' என்றாள் மைத்தி ஆத்திரத்தோடு.

தங்கையின் கோபத்தைப் பார்த்துவிட்டு, ''ஒரேயடியாக வீசினாள் என்று சொல்ல முடியாதும்மா. ஆனால் வேண் டாம், வேண்டாம் என்று சொல்லும்போது, பிடிவாத மாகத் திருப்பித் தரும்போது, அப்படித்தானே தோன்று கிறது!'' என்றான் தமையன்.

நிஜமாகவே, சுமனசாவுக்குப் பணத்தாசை இல்லை என்று காட்டி விட்டாள் என்று எண்ணினாலும், ''ஆனாலும், அவளுக்கு ராங்கி அதிகம்தான், அண்ணா!'' என்று வாய்ப்பை விடாமல் ஓதினாள் மைத்திரேயி. ''உன்னிடமே போட்டி போடுகிறாளே!''

''ஆனால், 'சபாஷ் சரியான போட்டி' என்று நீ சொல்ல முடியாமல், பணத்தைக் கொடுத்துப் போட்டியில் சுமனசி ஜெயித்தே விட்டாளே!'' என்று கண்ணில் சிரிப்புடன் சைதன்யன் கூறவும், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

அண்ணன் இதை வேடிக்கை விளையாட்டாக அல்லவா, கருதுகிறான்! அவள் அந்த அளவுக்கு நெருங்கி விட்டாளா? ஊகூம். விடக்கூடாது!

மேனகா சொல்வது போல, அண்ணன் இந்தப் பணத்தை, அந்த சந்தானமூர்த்தி சாருக்காகச் செலவு செய்தது, தப்புதான். ஆனால் இவ்வளவு தூரம் வந்த பிறகு, சுமனசா உயர்வு போல, அவளிடம் பணத்தை வாங்கிக் கொள்வது, அவளை ஜெயிக்க விடுவது போலத்தான்!

''அண்ணா, கூடாது. யாரிடமும் நீ தோற்கக் கூடாது. மேனகா சொல்வது போல, இது நமக்கு நஷ்டம்தான். ஆனாலும் பரவாயில்லை. இந்தப் பணத்தைக் கொண்டு போய் எங்களுக்கு வேண்டாம் என்று, சுமனசாவிடம் திருப்பிக் கொடுத்துவிடலாம், கிளம்பு,'' என்று உடன் பிறந்தவனை விரட்டினாள்.

''ம்ம்ம்... அதில் ஒரு சிரமம் இருக்கிறதேம்மா. என் மாமாவுக்குச் செலவு பண்ண நீ யார்? என்னை விட,

உனக்கு என்ன உரிமை என்று, அவள் கேட்டு விட்டால்?''

''அவ்வளவு தைரியமாகக் கேட்பாளா, அண்ணா?''

''தைரியத்துக்கு என்னம்மா? அவளுடைய மாமா தானே நம்மிடம் வேலை பார்ப்பது? அவளுக்கு என்ன வந்தது?''

''ஐயையோ! அப்படியானால், சுமனாசாவிடம், நீ தோற்றாய்தானா?''

''ம்ம்ம்... ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். சந்தானம் சார்தான் ஒத்துழைக்க வேண்டும். முயற்சி செய்து பார்ப்போம், வா.''

சந்தானமூர்த்தி வீட்டில் வழக்கமான வரவேற்பு நடந்தது. வீட்டுத் தலைவர் மனதார நன்றி சொல்ல, சுமனசா எலுமிச்சைச் சாறு கொண்டு வந்து கொடுத் தாள்.

ஒன்றும் வேண்டாம் என்று மறுக்க நினைத்தவளுக்கு, அன்றைய சுவை நினைவு வர 'நன்றி' சொல்லி வாங்கிக் கொண்டாள்.

குடிக்கும்போதே, ''சந்தானம் சார், ஒரு முக்கிய விஷயமாக வந்தேன். நம் அலுவலகத்தில், உடல் நலக் காப்பீடு பற்றி, அரசாங்கத்துடன் பேசிக் கொண்டிருந் தோம், அல்லவா? அரசு ஒப்புதல் கிடைத்து விட்டது. முதல் காப்பீட்டுத் தொகை வந்தது, உங்களுக்குத்தான்,'' என்றான் சைதன்யன்.

ஓ! இப்படிச் சொல்லிக் கொடுக்கப் போகிறானா? இதைச் சுமனசாவால் எப்படி மறுக்க முடியும்? அண்ண னுக்கே ஜயம்!

வெற்றிக் களிப்பைக் கண்கள் காட்டிவிடாமல், மைத்தி ரேயி பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

தலையைத் தடவியவாறு, ''உங்கள் அப்பா நிறுவனத் துக்குத்தானே, காப்பீடு...'' என்று சந்தானமூர்த்தி குழப் பத்துடன் தொடங்க, சைதன்யன் சொன்ன 'சந்தானம் சாரின் ஒத்துழைப்பு' மைத்திக்குப் புரிந்தது. இப்போது எப்படிச் சமாளிக்கப் போகிறான்?

''நீங்கள் சொல்வது சரிதான், சந்தானம் சார். ஆனால், கடைசி நேரத்தில், அப்பா நம்மதையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். அமைச்சர் வெளிநாடு போகிற அவசரத்தில், எல்லாம் சேர்த்துக் கையெழுத்துப் போட் டுப் போய்விட்டார். நமக்கு லாபமாகிப் போயிற்று. யாரையும் தனியாகக் 'கவனிக்காமலே' நமக்கு வேண் டியது கிடைத்து விட்டது!''

''ஆமாம், ஆமாம்!'' என்று சந்தோஷமாகக் கூறியது, சந்தானத்தில் குரல்.

இடையே புகுந்து, ''ஆனால் சுடர்'' போன்ற மருத்துவ மனையின் செலவுகளுக்குக் கூடக் கொடுக்கிறார்களா? அதிசயமாக இல்லை?'' என்று சுமனசா சற்று அதிகப் படியாக வியக்க, மைத்தியின் கன்னங்கள் லேசாகச் சிவந்தன.

ஆனால், சைதன்யன் சர்வ சாதாரணமாக, ''ஊகூம், அதெப்படிக் கொடுப்பார்கள்? இந்த மாதிரி சிகிச்சைக்கு இவ்வளவு ஆகும் என்று கணக்கிட்டுக் கொடுக்கிறார் கள். அதன்படி...'' என்றவனின் பேச்சில் குறுக்கிட்டு, ''முப்பதாயிரம் ரூபாயை ஒட்டிய ஒரு தொகை மாமா வுக்குக் கிடைத்திருக்கும்! அப்படித்தானே?'' என்றாள் சுமனசா. அப்பாவியா[illegible] விரித்து!

மைத்தியால் தலை நிமிரவே முடியவில்லை. என்ன மாதிரிக் கிண்டலடிக்கிறாள்! நமக்குத்தானே பணம் வருகிறது என்பதே இல்லையே!

ஆனால், அவளுடைய அண்ணன் இதையும் எதிர் பார்த்தவன் போல, ''நீ அலுவலக நிர்வாகம் படித்துக் கொண்டிருந்ததாக, சந்தானம் சார் ஒரு தரம் சொன்னார். ரொம்பக் கெட்டிக்கார மாணவி போல! மிகவும் துல் லியமாக ஊகித்திருக்கிறாயே!'' என்று ஆச்சரியம் காட்டிப் பாராட்டிவிட்டு, கையிலிருந்த சாறின் கடைசி மிடறை, அண்ணாந்து வாயில் ஊற்றி, ரசித்து அருந்தியவாறு, டம்ளரை ட்ரேயில் வைத்தான்.

''அப்பாடி! இப்போதுதான் எனக்குத் திருப்தியா யிற்று!'' என்றார் சந்தானமூர்த்தி ஒரு நிம்மதிப் பெரு மூச்சுடன்.

வசதியாகச் சாய்ந்து கொண்டு, 'பார் சுமி, ஆர்டியில் வாங்குவதை விட, அதில் வாங்கும் கடனுக்கு அதிக வட்டி கட்ட நேரும். அதனால் டெப்பாசிட்டை உடைத்தே விடலாம் என்றாயே! இப்போது பார், பணம் வந்து விட்டது. இந்தப் பணத்தைக் கட்டிக் கடனை அடைத்து விடு. இவ்வளவு நாள் வைப்பு நிதி வட்டி, அப்படியே கிடைக்கும் அல்லவா?'' என்றவர், சைதன்யனிடம் திரும்பி, ''சொந்தத்துக்கு ஒரு சின்னச் செலவு கூடச் செய்யாமல், சின்னவள் பவியுடைய படிப்புக்காகச் சேமிக்கிறாள் சார். தன்னுடைய படிப்பு பாதியில் நின்ற மாதிரி, இவளுக்கு ஆகிவிடக் கூடாதாம்...''

பவி... ஓ, இவருடைய சின்ன மகள்... என்று மைத்தி யோசித்துக் கண்டு பிடிக்கையில், ''இருக்கட்டும் மாமா.

இதை நாம் அப்புறமாகப் பேசலாம். நம் வீட்டுக் கதை, உங்கள் எம்.டி.க்கு எதற்கு?'' என்றவாறு காலியான டம்ளர்களோடு கூடிய ட்ரேயைச் சுமனசா எடுத்தாள்.

குனிந்து ட்ரேயை எடுத்தபோது சரிந்து, முன்புறம் விழுந்த நீண்ட ஜடையின் எழில், மைத்தியின் ரசிக உள்ளத்தைச் சுண்டி இழுத்தது. அன்றைய கோபத்தில், இதைப் போய்ப் பட்டிக்காடு என்றாளே! கண் மண் தெரியாத கோபம் என்பது சரிதான் போலும்! ஆனால், என்ன அழகுக் கூந்தல்!

மைத்திரேயி வியந்து ரசிக்கையில், சுமனசா சைதன்யனைப் பார்த்து, ''தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். ஆனால், மாமா இன்னமும் பலவீனமாகத்தான் இருக்கிறார், ஓய்வெடுக்க வேண்டும்,'' என்றாள்.

அதாவது, வேறு வார்த்தைகளால், வெளியே போ என்கிறாள்! என்ன தைரியம்? துணிந்து தப்பாகச் சொல்லுவாள், ஆனால், தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாதாமா!

கோபத்தில் உடல் விரைத்த தங்கையைத் தற்செயல் போல, அவளது தோளில் படிந்த அண்ணனின் கை சமனப்படுத்தியது.

தங்கை மகளைச் செல்லக் கனிவுடன் பார்த்து, ''இவளுக்கு என் ஆரோக்கியம் பற்றி, ரொம்பக் கவலை. பரவாயில்லை. இதை மட்டும் சொல்லி விடுகிறேன். நீ தட்டை வைத்து விட்டு வாம்மா,'' என்று தாய் மாமன் சொல்ல, ஒரு தயக்கத்துடன் சுமனசா உள்ளே சென்றாள்.

அவள் செல்வதைப் பார்த்துவிட்டு சந்தானமூர்த்தி மேலும் சொன்னார். ''இப்படிச் சேர்த்த பணம், இப்படி

நமக்காக வீணாகிறதே என்று உள்ளூர, ரொம்பவும் வேதனையாக இருந்தது, சார். சற்றுப் பொறும்மா என்றாலும், இவள் கேட்கவில்லை. யாரிடமும் நாங்கள் கடனாளியாக இருக்கக் கூடாதாம்! நல்லவேளையாக இப்படி ஒரு வழி கிடைத்து, இந்தப் பணத்தை, நேரி லேயே கொணர்ந்து கொடுத்து, அந்த வலியையும் போக்கி விட்டீர்கள்!'' என்று சைதன்யனிடம் நன்றி யுடன் இயம்பினார்.

சுமனசா திரும்பி வரவும், ''பணம் கொடுக்க மட்டும் வரவில்லை, சார். 'திருப்தி' சூப்பர் மார்க்கெட்டோடு, நம் நிறுவனத்துக்கு ஒரு டீல் இருக்கிறது. அதுபற்றி, உங்கள் மருமகளிடம் பேசவும் வந்தேன். நீங்கள் படுங்கள், சார். நாங்கள் வெளியே போய் நின்று பேசி முடிக்கிறோம்,'' என்று சைதன்யன் எழுந்தான்.

வெளிப்புறம் சென்றதுமே, ''அந்த டீல் பற்றி, என் வேலை முடிந்தது. பணக் கணக்குப் பேசத் 'திருப்தி' நிர்வாகத்திலிருந்து யாராவது வருவார்கள். அதனால்...'' என்று கறார்க் குரலில் தொடங்கியவளை இடைமறித்து, ''நானும், அது பற்றிப் பேச உன்னை அழைக்கவில்லை. இந்தப் பணத்தை, இன்னும் எப்படியாவது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று தொல்லை பண்ணாமல், சந்தானம் சாரை இப்படியே நிம்மதியாக இருக்க விடு என்று சொல்லத்தான் கூப்பிட்டேன்!'' என்று சற்று அதிகாரக் குரலில் பணித்தான் சைதன்யன்.

சபாஷ் சரியான போட்டிதான். ஆனால் அண்ணனின் இந்த வெற்றி நிலைக்குமா? ஆவலோடு, பேச்சு வார்த் தையைக் கவனித்தாள் மைத்திரேயி.

தலைச் சிலுப்பலுடன் நிமிர்ந்து, "அவர் என்னுடைய தாய்மாமா என்பது நினைவிருக்கட்டும். அவரது நிம்மதி, உங்களை விட, எனக்கு முக்கியம்!" என்றாள் சுமனசா மிடுக்குடன்.

உதட்டைப் பிதுக்கினான் சைதன்யன். "நடப்பைப் பார்த்தால், அப்படித் தோன்றவில்லையே. அவர் சொல்லச் சொல்லக் கேளாமல்தானே..."

"எங்களுக்கு யாருடைய பிச்சையும் தேவையில்லை."

"பிச்சையாக எண்ணுவானேன்? உதவியாக எண்ணிக் கொள்ளேன்."

"வேண்டாம்!" என்றாள் அவள் ஒற்றைச் சொல்லாக.

"வேண்டுமோ, வேண்டாமோ, இந்த விஷயத்தில் நீ என்னை ஜெயிக்க முடியாது. நீ எத்தனை முறை தந்தாலும், சுவரில் அடித்த பந்தாக, அந்தப் பணம் இந்த வீட்டுக்குத் திரும்பி வந்தே தீரும். இப்போது சந்தானம் சாரின் ஊதியத்தையே அதிகப்படுத்திக் கொடுத்தால், உன்னால் என்ன செய்ய முடியும்?"

பேச்சிழந்து, சுமனசா வெறித்து நோக்கவும், மைத்திக்குத் தன் அண்ணனைப் பற்றிப் பெருமையாக இருந்தது. இவளை வாயடைக்க வைத்து விட்டானே!

சிறு அமைதியின் பின், "விட்டு விடு, சுமனசி. இவ்வளவு சிரமப்பட்டுத் திருப்பித் தந்துதான் ஆக வேண்டும் என்று இல்லைம்மா," என்றான் சைதன்யன் தணிவாக.

"உங்களுக்குப் புரியவில்லை. இந்தப் பணம் சேர்ப்பது, கொடுப்பது எல்லாம் ஒன்றுமே இல்லை. மாமா

எனக்குச் செய்திருக்கும் உதவிக்கு. அவருக்கு நான் என்ன செய்தாலும் தகும்,'' என்றாள் அவள் குரல் கர கரக்க.

''அதற்காக? அவருடைய மகனை மணந்து, குடும் பத்தில் ஒருத்தியாக், நன்றிக்கடன் செலுத்தப் போகி றாயா?''

அண்ணனின் ஆத்திரக் குரலிலும், அவன் கேட்ட விஷயத்திலுமாக, மைத்திரேயி திடுக்கிட்டுப் போனாள்.

இது சுமனசியின் சொந்த விஷயம். இதை ஏன் அண் ணன் கேட்கிறான்?

கேட்டவனுக்கும், கேட்கப் பட்டவளுக்குமே, இது திகைப்புதான் போலும்.

பேச்சிழந்து, மூவருமாக நின்றபோது, ஒரு பைக் வந்தது.

அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியவாறே ''சுமி, கண்ணன் ஊரில் இல்லையாம். இப்போது என்ன செய்வது? வேண்டுமானால்...'' என்று பேசியவாறே வந்தவன், கார் அருகில் வந்ததும், மறுபுறம் நின்ற மற்ற இருவரையும் கவனித்து, ''சாரி...'' என்று தயங்கினான்.

சுமனசா லேசாகச் செருமிக் கொண்டு, பைக்கில் வந்தவனை மற்ற இருவருக்கும் அறிமுகப்படுத்தி வைத் தாள்.

அவன் அவளுடைய மாமா மகன் குணசீலன்! கிடைத்த முதல் விடுமுறை நாட்களில், தந்தையைக் காண ஓடி வந்திருந்தான்.

சைதன்யனைக் காட்டி, ''இவர்...'' என்று அவள் தொடங் கும் போதே, ''காப்டன்! கல்லூரியில் எங்கள் கிரிக்கெட்

டீமுடைய கேப்டன். உங்கள் டீமில் ஓர் ஆண்டு, உங்கள் கடைசி ஆண்டில், நான் விளையாடி இருக்கிறேன், கே... சார்!'' என்றான் குணசீலன்.

''நினைவிருக்கிறது. கடைசி ஓவர்களில், அதிக ரன் கொடுக்காமல் விக்கெட் எடுக்கும் குணா! இந்தக் குணா வாலேயே, நாங்கள் நிறையப் போட்டிகளில் வென்றிருக் கிறோம், மைத்தி. என் தங்கை. மைத்திரேயி!'' என்று விழி விரிய நின்ற தன் தங்கையைப் பேச்சினுள் இழுத் தான் சைதன்யன்.

அவளும், ''அதுதான் பார்த்த மாதிரி இருக்கிறதே என்று, தோன்றியது போல! அண்ணனின் ஆல்பத்தில் ஸ்டேட் போட்டியில் ஜெயித்த ஃபோட்டோவில் நீங்கள் அண்ணனுக்குப் பின்னால் நிற்கிறீர்கள்!'' என்று குறிப் பிட்டுச் சொல்ல, பேச்சு இலகுவாகச் சென்றது.

''அப்பாவுக்கு நீங்கள் செய்த உதவி பற்றி, சுமி சொன் னாள் சார். சமயத்தில் நீங்கள் செய்த சரியான உதவி இல்லாமல், அப்பா பிழைத்திருக்கவே முடியாது என் றாள். எல்லோரும் சொல்லும் சாதாரண வார்த்தைகள். ஆனால், வேறு சொல்ல முடியாது. ரொம்பவும் நன்றி சார்!'' என்று உணர்ச்சியோடு நன்றி தெரிவித்தான் குணசீலன்.

ஆனால், அந்த உதவியின் காரணமாக, அண்ணனின் வாழ்வில் நேர்ந்திருக்கும் குளறுபடியின் நினைவில், மைத்திரேயிக்குச் சினம் துளிர்த்தது.

குறைந்த பட்சமாக, இவன் இங்கே இருந்திருந்தால், சுமனசிதான் எல்லாம் என்கிற மாயையேனும் அண் ணன் மனதில் இல்லாமல் போயிருக்கும்! ஆனால், வீட்டுத் தலைமகன், தேவைப்பட்ட நேரத்தில் கண்ணி

லேயே காணவில்லை. கிட்டத்தட்ட குணமாகி விட்ட இப்போது வந்து நிற்கிறானே!

எண்ணியதை அவள் மறைக்காமல் சொன்னபோது, அத்தை மகளை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''அது... அது...'' என்று அவன் தடுமாற, சுமனசா குறுக்கே புகுந்தாள்.

''வர வேண்டாம் என்று, நான்தான் குணாவை நிறுத்தினேன்,'' என்றாள் அமைதியாக.

''எ... என்னது?!'' என்று அதிர்ந்தாள், மைத்திரேயி. ''நோயுற்ற தந்தையைப் பார்க்க வர வேண்டாம் என்று, மகனைத் தடுப்பதா? ஊகூம், மகாத் தப்பாகத் தெரிகிறதே!''

அத்தை மகளைத் தாங்கிப் பேசினான் குணசீலன். ''இல்லையில்லை. நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை, மைத்திரேயி அப்போது வருவது வீண் செலவு என்பதோடு, உபத்திரவமாகவும் ஆகிவிடும் என்று...''

''என்ன உபத்திரவம்?'' என்று மைத்தி விடாமல் கேட்டாள்.

பேசாமல் நின்றபோதும், சைதன்யன் முகத்திலும் கேள்வி தெரிந்தது.

ஆனால், ''விடு, குணா அண்ணா. தேவைகளும், சுகங்களும் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சொல்லிப் புரிய வைப்பதும், கடினம்,'' என்று அவன் மேலே பேசாமல் தடுக்க முயன்றாள் சுமனசா.

ஏன்? ஏன் தடுக்கிறாள் என்று மைத்தியின் மனம் பரபரத்தது.

சுமனசியின் வண்டவாளம், தண்டவாளம் ஏறப் போகிறதா?

அந்த வீட்டில், சுமனசா தான் எல்லாம் என்பது போல ஒரு சூழ்நிலை எப்போதும் இருக்கும். வேறு பின்புலம் இல்லாத அவள், பல்வேறு செயல்களால், அவர்களுக்குத் தான் இன்றியமையாததாக ஆக்கிக் கொண்டிருக்கிறாளா?


அதன் ஒரு பகுதியாகத்தான், குணசீலன் இந்தப் பக்கமே வரவிடாமல் தடுத்தாளோ? மற்றப்படி, இவள் செய்த அனைத்தையும் வீட்டுக்குத் தலை மகனாக, அவனல்லவா செய்திருப்பான்!

தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்ள, அவள் செய்த சூது, உள்ளங்கை நெல்லிக்கனி என்பார்களே, அது போலத் தெள்ளத் தெளிவாக, இப்போது தெரியப் போகிறதா?

முக்கியமாக, அவளைத் தியாகசீலி என்று கருதும் அண்ணன் சைதன்யனுக்கு!

இந்த மாயை விலகினால், அண்ணன், அவனது திருமணம் பற்றிக் கூட யோசிக்கத் தொடங்கலாம்.

நெஞ்சு பரபரக்க, "என்ன உபத்திரவம்?" என்று மைத்தி மீண்டும் கேட்க, அதையே வேறு விதமாக, "சொல்லித் தான் பாரேன், குணா! புரிகிறதா, இல்லையா என்று, தானாகத் தெரிந்து விடுகிறது!" என்று வழி சொன்னான், அவளுடைய அண்ணன் சைதன்யன்.



# 9

அனுமதி கேட்பது போல, அத்தை மகளைப் பார்த்து, "சொல்லி விடலாம் சுமி, சொல்லா விட்டால், எனக்கு

அப்பாவிடம் அக்கறை இல்லாதது போல அல்லவா தோன்றும்!'' என்றான் குணசீலன்.

எனனவோ செய் என்பது போன்ற ஓர் அசைவுடன் வீட்டினுள் செல்லக் காலடி எடுத்து வைத்த சுமனசா, சற்றுத் தயங்கி, ''இங்கே கேலிக்கு இடமாகி விடுமோ என்று நினைத்தேன். ஆனால் உன்னிஷ்டம். சொல் வதை மட்டும் சுருக்கமாகச் சொல்லு. அத்தை, ஏற் கனவே ஒரு தரம், தலையை நீட்டிக் காட்டிவிட்டார்கள்,'' என்றாள் மாமன் மகனிடம்.

''இரண்டு காரணங்கள், சார்!'' என்று வேகமாகத் தொடங்கினான் குணசீலன். ''ஒன்று பணம். அப்போது அவசரமாக ஒரு தரம் வந்து விட்டு, மறுபடியும் இப்போது இந்தச் சமயத்தில் அங்கே ஒரு வாரம் தொடர் விடுமுறை வரும் என்பதால், இப்போது வருவது என்று, முன்ன மேயே திட்டமிட்டபடி, இன்னொரு தரம் வருவதானால், செலவு அதிகம் ஆகும் என்பது ஒன்று. அத்தோடு...'' என்று சுமனசியைப் பார்த்தான் அவன்.

அவள் எங்கோ பார்த்துக் கொண்டிருக்கவும், அவனே மேலே சொல்லலானான்.

''இந்த வீட்டைப் பார்த்தீர்களா, சார்? என் படிப்புச் செலவுக்காக, வாடகைக்கு இருக்கும் வீடு சின்னதாகி விட்டது. படுப்பதற்கு ஒரே அறைதான். வந்து... ஒரே இடத்தில் சுமியும் நானும் இரவில் தங்கக் கூடாது என்று. அம்மா உத்தரவு! இதில் ஒன்றுமில்லை என்று, என்ன சொல்லியும் கேட்பதில்லை. அப்பாவுக்காக, அம்மா மருத்துவமனையில் வேறு இருந்தார்களா? பகலில் கூட, நான் வீட்டில் தங்க முடியாது! யாராவது, சினேகித னோடுதான் தங்கியாக வேண்டும். இப்போதுகூட

விடுதியில் தங்கும் ஒரு நண்பனைப் பார்க்கத்தான் போய்விட்டு வந்தேன்.''

''ஆனால், ஏன்? எதற்காக இப்படி?'' என்று புரியாமல் கேட்டாள், மைத்திரேயி. என்னவோ இருவருமாகச் சேர்ந்து காதில் பூ சுற்றுகிற மாதிரி சந்தேகம் அவளுக்கு.

''ஏனென்றால்... ஏன் என்றால்...'' என்று சொல்வ தறியாமல் குணா தயங்கவும், ஒரு வேக மூச்சுடன், சுமனசா விளக்கத்தைத் தொடர்ந்தாள். ''அத்தை இதி லெல்லாம் ரொம்பக் கண்டிப்பு! முறை வேறு. தப்பான பேச்சு வந்துவிடக் கூடாது என்று...''

''முறை என்றால்? ஓ! திருமண முறையா? அப்படி வேறு பேச்சு இருக்கிறதோ?'' என்று புருவம் சுருக்கி விசாரித்தாள் மைத்ரேயி.

''பேச்சு இருக்கிறதோ, இல்லையோ? எந்த வகை யிலும் ஊர் பேச இடம் கொடுக்கக் கூடாது என்பது, அத் தைக்கு! கறுப்பாக வாந்தி என்பதைக் காக்காய் காக் காயாக வாந்தி எடுத்ததாகச் சொல்லுகிற உலகம் இது. அதனால், இருவரும் தனியாக வீட்டில் இருந்து, அது யார் கண்ணிலும் பட்டு விடக்கூடாது என்பார்கள்!''

மைத்திரேயிக்கு இன்னும் ஒன்று தெரிந்து கொள் ளும் ஆர்வம் இருந்தது. ஆனால் கேட்பதே, அவர்களைத் தப்பாகக் கருதிக் கேட்பதாகவும் தோன்றக்கூடும். கேளா மல் விடவும் மனமில்லாமல், இதை எப்படிக் கேட்பது என்று யோசித்தவளுக்கு, சுமனசியின் பேச்சு நினைவு வந்தது.

சாதுரியம் அவளுக்கு மட்டும் சொந்தமில்லையே!

''வந்து... இதைத் தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம், சுமனசி. உள்ளேதான், உன் அத்தையோடு மாமாவும் கூடவே இருக்கிறார்களே! இப்போதும் ஏன் குணசீலன் வெளியே சென்றாக வேண்டும்? தவறான ஊகத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். அதில் ஒன்றும் தப்பில்லையே? கேட்கலாம் தானே? சொல்லக் கூடாதது எதுவும் இல்லையே?'' என்று நயந்த குரலில் வினவினாள்.

மின்னலாகப் பாய்ந்த மூவரின் பார்வையையும் தாங்கிச் சாதுவாய் நின்றாள் மைத்திரேயி.

சைதன்யனின் பார்வையில் இருந்த நகைப்பு, அவள் ஓரளவு எதிர்பார்த்ததே. அவனையே தாக்கினாலும், கெட்டிக்காரத்தனமாகப் பேசினால், தங்கையைப் பாராட்டுவது, அவனது பழக்கம். குணசீலனின் திகைப்பும் இயல்புதான்.

ஆனால், தூரத்தே இருந்த தெரு விளக்கின் ஒளியில் பளிச்சிட்ட சுமனசியின் கண்களில் இருந்த வியப்போடு கூடிய நகை, மைத்தி சற்றும் எதிர்பாராதது!

அண்ணன் போலவே, அவளையே மடக்கினாலும், பேச்சை ரசிக்கிறாளே!

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''தப்பாக நினைக்க எதுவும் இல்லை. ஆனால், விஷயம் வெறும் போர்! கொஞ்சம் ஒரு மாதிரி வேறு இருக்கும். அவ்வளவுதான்! தெரிந்துதான் ஆக வேண்டும் என்றால்...'' என்று இழுத்தாள்.

மைத்திரேயி காத்திருப்பதாகக் காட்டவும், லேசாகத் தோளைக் குலுக்கி விட்டுத் தொடர்ந்தாள். தொடர்ந்து.

''அதாவது... வந்து, அயர்ந்து தூங்கும்போது, அணிந் திருக்கும் ஆடைகள், சற்று அங்கே இங்கே நெகிழக் கூடும். இந்த வயதில், மனம் பாதிக்கப்படக் கூடும் என்பது, அத்தையின் அபிப்பிராயம். எத்தனையோ விஷயங்களில், வெறும் கருத்துச் சொல்லக் கூடத் தயங்கும் அத்தை, இதில் மகா கண்டிப்பு! அவர்களிடம் மறுத்து வாதாடுவதை விட, அவர்கள் சொன்னபடியே நடந்து விட்டால், எல்லோரும் நிம்மதியாக இருக்கலாம்! அதனால் அப்படித்தான், எப்போதும் நாங்கள் நடப் பதும்,'' என்று முடித்தாள் சுமனசா.

அவள் முடித்த விதத்தில், சங்கடப்பட்டுக் கொண்டு நின்ற குணசீலன் உட்பட, மற்ற மூவர் முகங்களிலும் சிறுநகை மலர்ந்திருந்தது.

''அப்படி ஒரு நண்பனைத் தேடித்தான், குணா இப்போது வெளியே சென்றதும், தோல்வியோடு திரும்பி வந்ததும் போல! பரவாயில்லை. குணா, என் னோடு வா. நான் ஓர் இடத்தில் உன்னைத் தங்க வைக் கிறேன்,'' என்று குணசீலனை அழைத்துச் சென்றான் சைதன்யன்.

''உங்களுக்கு எதற்குச் சிரமம்?'' என்ற சுமனசியின் கேள்விக்கு, ''என்ன சிரமம்? நான் என்ன, குணாவை என் தலை மேலேயா தூக்கி வைத்துக் கொண்டு இருக்கப் போகிறேன்? அல்லது, என் படுக்கையைக் கொடுத்து விட்டுத் தரையில் உருளப் போகிறேனா?'' என்று சைதன்யன் பதில் சொன்ன விதத்தில் சிரித்தவாறே, மூவரும் கிளம்ப, சுமனசா வீட்டுக்குள் திரும்பிச் சென்றாள்.

மறுநாள் காலையில், சற்றுத் தாமதமாகவே திரும்பி வந்த குணசீலனின் முகம் சந்தோஷத்தால் மலர்ந் திருந்தது.

''நான் எங்கே தங்கினேன், தெரியுமா?'' என்று கேட்டு, ''ஊகூம்...'' என்று அத்தை மகள் உதட்டைப் பிதுக்கவும், ''கேப்டனின் கெஸ்ட் ஹவுஸ்! அவரும் அங்கே என்னுடனேயே தங்கி விட்டார். இரவு முழுதும், பழைய கதைகளைப் பேசிக் கொண்டே இருந்தோம்,'' என்று பெருமையுடன் அறிவித்தான்.

சற்றுத் தயங்கி விட்டு, ''அவர்கள் பணக்காரர்கள், குணா அண்ணா. நமக்கு ரொம்பவும் மேலே! கவனத் தோடு பழகு,'' என்று எச்சரித்தாள் சுமனசா.

''ஓ.... சரி சரி,'' என்று தலையாட்டியபடி, அங்கிருந்து அகன்று விட்டான் அவன்.

சைதன்யனுடைய தங்கை மைத்தியும், வெகு நேரம் கூடவே இருந்து பேசிக் கொண்டிருந்ததும், காலை உணவு கூட மூவருக்குமாக எடுத்து வந்து தந்து, சேர்ந்து அமர்ந்து, கலகலப்பாகப் பேசியபடியே சாப்பிட்டதும் தெரிந்தால், இவள் என்ன சொல்லக்கூடும்?

அம்மாபோல, அந்த மாதிரிக் கண்டிப்பு இவளுக்குக் கிடையாது என்றாலும், பணத்தை வைத்து வேறு மாதிரியாக இனம் பிரிக்கிறாளே!

திருமதி சந்தானமூர்த்தியின் கொள்கைப் பிடிப்பும், சைதன்யன் குடும்பத்தாரின் விருந்துபசாரமும் சேர்ந்து கொள்ள, அங்கிருந்த ஒரு வாரமும், 'கெஸ்ட் ஹவு'சி லேயே குணசீலன் இரவில் தங்கும்படி ஆயிற்று! சந் தோஷமாகவே தங்கினான்.

பெரும்பாலும் அண்ணனோடு, மைத்தியும் வந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவாள். ஒரு முறை மகளோடு தாயாரும் வந்து, குணசீலனிடம் அவனுடைய தந்தை பற்றிக் குசலம் விசாரித்தாள்.

அண்ணன் தங்கையோடு பேசிக் கொண்டிருக்கையில், மற்ற விஷயங்களோடு, சுமனசாவைப் பற்றியும் பேச்சு வரும்.

எப்போதுமே, அவளைப் பற்றிக் குணா உயர்வாகப் பேசுவான்.

அவள் வேலை பார்த்துச் சேர்த்து வைத்த பணத்தைக் கட்டித்தான் புனாவில் பெரிய படிப்பில் அவன் சேர்ந்தது. ஆனால், படிப்பு தவிர, மற்றச் செலவுகளுக்குத் தந்தைதான் அனுப்ப நேர்ந்தது. இப்போது வெளிநாட்டில் கணவனோடு இருக்கும் பெரிய மகளின் திருமணத்துக்கு வேறு அதிகச் செலவு செய்து, அந்தக் கடன் சுமை வேறு!

''அத்தை இறந்து, சுமி அங்கே தனியாக இருக்க முடியாத நிலை என்று, அவளையும் அப்பா கூட்டி வந்திருந்தார். வெறும் ஒரு வாரம்தான். வீட்டு நிலைமையைக் கவனித்துவிட்டு சுமிதானே போய் ஒரு வேலையைத் தேடிக் கொண்டாள். கம்பெனி செகரட்டரி கோர்ஸ் படித்துக் கொண்டிருந்தவள்! படிப்பை முடிக்காவிட்டாலும், அவளது கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்துவிட்டு, நல்ல சம்பளத்தில் வேலை கொடுத்தார்கள். 'திருப்தி'யில் அந்தத் தளம் முழுவதும், அவள் பொறுப்பில் இயங்குவதுதான். வீட்டு நிதிப் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டாள். [illegible] சின்ன வீட்டுக்குக் குடி

வந்தது அவளது ஐடியாதான். இல்லாவிட்டால், கடனில், சொந்த வீடு முழுகியே போயிருக்கும். இப்போது அந்த வீட்டு வாடகையில், கடனைக் கட்ட முடிகிறது. அப்பாவின் வருமானம், அவளது ஊதியத்தைக் கணக்கிட்டு வீட்டுச் செலவு, என் படிப்புப் போக, பவிக்கும் பணம் கட்டுகிறாள். கடன் என்று யாரும் வீடு வந்து நிற்பதில்லை. அதிலேயே, அம்மா எவ்வளவோ அமைதியாகி விட்டார்கள். ஆனால் அப்பாதான் வருத்தப்படுவார். உதவி என்று சொல்லிக் கூட்டி வந்து, உழைத்துக் கொட்ட வைத்திருக்கிறேன் என்று, சில சமயம் என்னிடம் புலம்புவார். என் படிப்பு முடிந்தால், பெரிய வேலை நிச்சயம். அதில், அவளை மகாராணி மாதிரி வாழ வைக்கலாம் என்று அப்பாவிடம் சொல்லுவேன்...''

இந்த ரீதியில் பேசத் தொடங்கினால், குணாவுக்கு முடிக்கவே தோன்றாது.

அவனுடைய அத்தை மகள் ரத்தினத்தைப் போல, உலகில் யாருமே கிடையாது என்பது, அவனது கருத்து! அந்தக் குடும்பத்தில் எல்லோருக்குமே அதே எண்ணம் தானே? அதுவே இவனுக்கும் படிந்து விட்டிருக்கும்.

ஆனால், மகாராணி மாதிரி வாழ வைக்க விரும்புகிறவனுக்குப் பக்கத்தில் மகாராஜாவாக உட்காரவும் ஆசையா என்று, மைத்திரேயி சந்தேகப்பட்டாள்.

சந்தேகம் எரிச்சல் மூட்ட, குணாவின் பிரச்சினைக்கு, அவள் வேறொரு தீர்வு சொன்னாள்.

பேசாமல் ஒரு பெரிய வீட்டு மருமகன் ஆகிவிட்டால், அத்தை மகளின் சிரமத்தை இப்போதே குறைத்து

விடலாமே! அவனது தோற்றத்துக்கும் குணத்துக்கும், எத்தனையோ பேர் காத்துக் கிடப்பார்கள்!

நெஞ்சுப் படபடப்பை மறைத்துக் கொண்டு அவள் சொன்ன யோசனையைக் குணா முழுதாகக் கேட்கக் கூடத் தயாரில்லை.

எப்படி வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரண மாக, அவனுக்குச் சுமி இருக்கிறாளாம். உழைப்பும் நேர்மையும்தான் முக்கியமாம். பெற்றோர், தங்கை என்று குடும்பக் கடமை இருக்கிறதாம். எல்லாவற்றையும் விட, அத்தை மகளின் நல்வாழ்வுதான் அவனது முக்கியப் பொறுப்பாம்.

இதையெல்லாம் ஒழுங்காகப் பாராமல், இலகு வழி தேடிப் போனால், அப்புறம் அவள் முகத்தில் எப்படி விழிப்பது?

உதட்டைக் கடித்துக் கொண்டு, அவனது பேச்சை யெல்லாம் கேட்டவளுக்கு இன்னோர் ஐயமும் ஏற் பட்டது.

மனதில் நினைத்ததை, வழக்கம் போல, அண்ண னிடம் வெளியிட்டாள்.

''அண்ணா, மாமா மகனிடம் பெரிதாகக் காட்டிக் கொள்வதற்காக, சுமனசா இப்படியெல்லாம் செய் கிறாளோ? குணா நல்லபடியாகப் படித்து முடித்தால், அவருக்கு லட்சத்துக்கு மேலே சம்பளம் வரும். அதை மனதில் கொண்டு... அவர், அவளை உயர்வாக நினைக்க வேண்டும் என்று... ஒருவேளை அதற்காகத்தான், பணத்தைக் கூடத் திருப்பிக் கொடுத்தாளோ?''

ஏற்கெனவே ஏதோ யோசனையில் இருந்தவன், இப்போது பார்வையாலேயே கண்டித்தான் ''ஏதாவது ஓர் அபிப்பிராயத்தை முதலிலேயே வைத்துக் கொண்டு, யாருடனும் பழகக் கூடாது, மைத்தி. பழகித் தெரிந்து கொண்டுதான் ஒருவரைப் பற்றிய கருத்தைக் கணிக்க வேண்டும்,'' என்றான் சற்று அழுத்தமான குரலில்.

அண்ணன் சொல்வது உண்மைதானோ?

மேனகாவை முதலில் பார்த்ததுமே பிடித்துப் போய் விட்டது. அண்ணியானால் என்று எண்ணிவிட்டு, அதன் பிறகுதான் அவளோடு பழகினாள். அவளது பழக்க வழக்கங்களில் சிறு சிறு மாற்றங்கள் தேவை என்று சில சமயம் எண்ணினாலும் முதல் கருத்து மாறவே இல்லை.

ஆனால், சுமனசியை அவள் பார்த்தது, ஓர் இக்கட் டான நேரத்தில். அந்த நேரத்து எரிச்சலில், அவளிடம் உள்ள சிறப்புகூடக் குறையாகவே தோன்றியது. பிறகும், அந்த முதல் அபிப்பிராயத்தினாலேயே, அவளது உயர்வு களை ஏற்றுக் கொள்ளாமல், அவளிடம் குறைகளையே மைத்தி தேடுகிறாளோ?

விருப்பு, வெறுப்பின்றிப் பார்த்தால், மேனகை போல எடுத்த எடுப்பில் மனதை மயக்காவிட்டாலும், சுமன சியும் அழகுதான். நல்ல விஷயங்களும், அவளிடம் நிறையவே இருந்தன!

இரு பெண்களையும் ஒத்து நோக்கிப் பார்க்கும்போது...

சோஃபாவில் இலகுவாகச் சாய்ந்து கிடந்தபடி சிந் தனையில் ஆழ்ந்திருந்த மைத்திரேயி, விலுக்கென நிமிர்ந்து அமர்ந்தாள்.

இது என்ன பைத்தியக்காரத்தனம்? இவர்கள் இரு வரையும் எதற்காக ஒத்திடுவது?

மேனகை, அவளுக்கு அண்ணியாக, குடும்பத்தில் ஓர் அங்கமாகப் போகிறவள். அது முடிவான... கிட்டத்தட்ட முடிவான விஷயம். ஆனால், சுமனசியோ, ஒரு சஞ்சல மான நேரத்தில் பார்க்கப்பட்டு, சந்தர்ப்ப வசத்தால், மேற்கொண்டும் பழகும்படி ஆனவள். மற்றப்படி, முழுக்க முழுக்க வேற்று மங்கை. இவர்கள் இருவரையும் ஒத்திட்டு யோசித்தது, எவ்வளவு பெரிய மடத்தனம்!

அது மட்டுமல்ல, கௌரவம் பாராட்டிக் கொண்டு, இரு வீட்டுப் பெரியவர்களும், என்னம்மா அவசரம் என்று அண்ணனும், சும்மா இருப்பது கூட மடத்தனம் தான்.

அத்தை மகளுக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கும் குணாவுக்காகவும், இன்னும் சில பல சிறு நடைமுறைக் காரணங்களாலும், மேனகையைச் சந்தி யாமல் மைத்தி இருந்ததும் முழு மடத்தனமே!

இதை இப்படியே விடக்கூடாது. மேனகா வீட்டுக்குச் செல்ல முடியா விட்டால் என்ன? முதலில், அவளை எங்காவது வரச் சொல்லிச் சந்தித்துப் பேச வேண்டும். இப்போது என்ன செய்வது என்று, கலந்து ஆலோசிக்க வேண்டும். இருவருமாகச் சேர்ந்து யோசித்து, ஆவன செய்து, திருமணத்தை விரைவில் முடிக்க வழி தேட வேண்டும்! மேனகா தன் தாத்தாவையும், மைத்தி பெற் றோரையும் பிடித்து உலுக்கினால், எல்லாம் நல்லபடி யாகச் சீக்கிரமாக முடியும்! இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டும்.

நல்லவேளையாக, அண்ணனைப் போல அசட்டை யாக இல்லாமல், மேனகா முழு ஆர்வத்தோடு இருக் கிறாள்! அதனால், இருவருமாகச் சேர்ந்து, என்ன செய் வது என்று கலந்து ஆலோசித்து, ஏதாவது செய்யலாம்!

அடுத்தடுத்து என்ன, எப்படிச் செய்வது என்று மனதுக் குள் ஒரு முழு அட்டவணையே போட்டு விட்ட போதும், மைத்திரேயியால் நிம்மதியாக இருக்க முடி யாமல், ஏதோ அவளை உறுத்தியது.

ஒரு சிறு வார்த்தையோ, குறிப்போ அல்லது ஏதோ ஒன்று, அவளது கவனத்தில் பட்டும் படாமலும் ஜாலம் காட்டியது. எவ்வளவோ யோசித்தும், அவளால் அது என்னவென்று கண்டுபிடிக்கவே முடியவில்லை!

மேகனாவைக் குடும்பத்துக்குள் கொண்டு வருவது பற்றி, மைத்திரேயி ஒருபுறம் தீவிரமாகத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தாள்.

ஆனால், திருமணத்தைப் பற்றிய எண்ணம் இல் லாமல், அவளுடைய அண்ணன், குணசீலனை விருந் துக்கு அழைத்துக் கொண்டிருந்தான். சந்தனபுரியின் நட்சத்திர ஹோட்டலில் விருந்து.

இரண்டு நாட்களில் படிப்பு நிமித்தமாகக் குணசீலன் கிளம்புவதாக இருந்தது. கடைசி நாளைத் தாயின் கைச் சாப்பாட்டை உண்டு வீட்டினரோடு பேசியிருந்து விட்டுக் கிளம்ப இடம் கொடுத்து, ஒரு நாள் முன்னதாக, அவனை விருந்துக்கு அழைத்தான் சைதன்யன்.

இதில் மைத்திரேயிக்கு எந்த விதமான ஆட்சேபனை யும் இருக்கவில்லை. ஆனால், ''தங்கைகளையும்

அழைத்து வாப்பா!'' என்று சுமனசியையும் சேர்த்துக் கூப்பிடவும், அவளுக்குக் கொதித்து விட்டது!

பவித்ராவும் சேர்ந்தே வருவாள்தான். ஆனால், அவள் சின்னப் பெண்.

ஆண்கள் இருவரும் சுமனசியிடம் வழிவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் துன்பம், அவளல்லவா பட வேண்டும்! அதிலும், அத்தை மகள் ரத்தினத்தின் காலிலேயே விழுந்து விடுவான் போல, அவள் என்ன சொன்னாலும் குணா தலையாட்டுவதைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாக இருக்குமே!

தாயாரோடு கிராமத்து வீட்டுக்குப் போய்விட்டு வந்த மேனகையைச் சந்தித்தபோது, இவை அனைத்தையும் பற்றி, மைத்திரேயி பொருமித் தள்ளி விட்டாள்.

வில் வடிவான புருவங்களை அழகாகச் சுருக்கிச் சற்று நேரம் மேனகா யோசித்தாள்.

பிறகு, ''நீ சொல்வதைப் பார்த்தால், அந்த சுமனசா பயங்கர வில்லியாக அல்லவா தெரிகிறாள்! 'உத்தமி ரத்தினம்' வேஷம் போட்டே எல்லா ஆண்களையும் பிடிப்பாள் போல! ஆனால் எனக்கு முதலிலேயே சந்தேகம். சைதுவிற்காகத்தான் 'திருப்தி'யில் நம்மை மாட்டி வைக்க முயன்றாள் என்பது, இப்போது நிச்சயமாகி விட்டது! சிசி கேமிரா வைக்க அவரிடமே ஏற்பாடும் செய்திருக்கிறாள், பார்! எப்படியாவது, அவருக்கு விஷயம் போக வேண்டும் என்பதற்காகத்தானே?

''போகட்டும். அதெல்லாம் முடிந்த கதை. ஆனால், இதனால் எல்லாம் சைதன்யனைப் பிடித்து விடலாம் என்று அவள் நினைத்தால், அது முட்டாள்தனம்!

அவ்வளவு இலகுவாக, நான் அவரை விட்டு விட மாட்டேன்!

''மைத்தி, நான் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று நினைக்கிறேன்! இல்லாவிட்டால், நாம்தான் ஏமாளிகளாக, விழித்துக் கொண்டு நிற்க நேரும்! கிராமத்தில் வைத்து, அம்மா விடம் இது பற்றிப் பேசியபோது, அவர்களும் அப்படித் தான் சொன்னார்கள். பேத்தி என்று, என்னிடம் பிரியம் காட்டுகிறார் என்றாலும், தாத்தா பெரிய முசுடாம். பிடித்த பிடியிலேயே நிற்பாராம். அவர்களுக்குத் திருமணமான போது, மாமனார், மாமியாரிடம் அம்மா ரொம்பவே பட்டிருப்பார்கள் போல! அதனால்தான், அம்மா இங்கே வருவதே இல்லையாம். நான் அறிய வந்தது இல்லை!

''அங்கே இவ்வளவு பிரச்சினை வரவில்லை என்றால், இங்கே அனுப்பியே இருக்க மாட்டார்களாம்!

''இப்போதும், தாத்தா, தான் பிடித்த புளியமரக் கிளை யில் இருந்து இறங்கி வருவது கடினமாம். கிட்டத்தட்ட நடக்காதாம். உன் வீட்டு வழியாகத்தான் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்கள்.

''ஆனால் அதைப்பற்றி நீ கவலைப்படாதே, சொர்க்கம் ஹோட்டலில்தானே விருந்து? அங்கே நான் தற்செய லாக வருவது போல வந்து, உன்னைச் சந்திக்கிறேன். நீ என்னையும் விருந்தில் கலந்து கொள்ளும்படி கேள். மறுத்து யாராலும் பேச முடியாது. அப்புறம் நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன். நான் யார் என்றும், என்னோடு போட்டி போட அவளால் முடியாது என்றும், அவளுக்குத் தெரிய வைக்கிறேன்!'' என்று சூளுரைத்து, மைத்திரேயிக்கு அவள் தென்பூட்டினாள்.

அந்த ஒரே பேச்சில், மைத்திரேயியின் ஒரு கவலை மறைந்தது.

ஆனால், குணா?

அவளுக்குப் பதினெட்டே வயதுதான். சின்னப் பெண் என்று, அவளுடைய அண்ணன். வேடிக்கையாகக் கூறுவது உண்டு. ஆனால் பதினெட்டு வயதிலும், மனதை ஒருவரிடம் பறிகொடுக்க முடியும் என்று யாருக்கேனும் புரிந்திருக்குமா?

அண்ணனைக் காப்பாற்றும் நடவடிக்கை, குணாவை சுமனசியிடம் ஒப்படைப்பதாக ஆகிவிடுமோ? மைத்தி யின் கலங்கிய முகத்தைப் பார்த்துவிட்டு, மேனகை சின்னவள் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள்.

''இதோ பார், குணசீலன் படிப்பு முடிந்து வர, இன்னும் ஓர் ஆண்டு இருக்கிறது. அப்படி வரும்போது, ஏதோ ஓர் இடத்தில் வேலை செய்வதை விட, சொந்தத் தொழிலையே மேம்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தால், அதை அவர் விட்டு விடுவாரா? சுமனசாவின் உதவிக் குப் பதிலாக, அவளுக்கு ஒரு பெரும் தொகை நீட்டி னால்... அதாவது பல லட்சங்களில் நீட்டினால், குணா வும் திருப்தியாகி விடுவார். வேண்டாம், வேண்டாம் என்று திருப்பிக் கொடுப்பதற்கு, அது ஒன்றும் ஆயிரங்களில் அடங்கும் சிறு தொகை அல்ல என்பதால், அவளும் சலாம் போட்டுக் கொண்டு ஓடி விடுவாள். உன் அண்ணன் மனைவியாக, அப்போது, அதை ஏற் பாடு செய்வது என் பொறுப்பு! உன்னை விட, எனக்குப் பணம் பெரிதல்ல. கட்டாயம் செய்வேன். என்னை நம்பு!'' என்று அழுத்தமான குரலில் அவள் உறுதியாகக் கூறவும், மைத்தியின் முகம் பளிச்சென மலர்ந்தது.

இனி எல்லாம் மேனகை பார்த்துக் கொள்வாள்!

அன்புக்கு உரிய மேனகையே என்றாலும், அவள் சொல்வதையும்கூட, முழுதாக அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு, மைத்தி முட்டாளல்ல. அவளுடைய அண்ணன் கொடுத்த பணத்தில், மேனகா தனக்கு வளையல் வாங்கியதும், அதற்காகத் தன்னை அலைய வைத்ததும், அவள் மனதில் இருக்கத்தான் செய்தது.

ஆனால், அதில் மைத்தியின் ஒரு பிழையும் இருந்தது. அண்ணன் பணம் கொடுத்தது, மேனகாவுக்கும் சேர்த்துதான் என்பது போலச் சொன்ன குற்றம்! சொல்லப் போனால், அண்ணனும் அதற்கு ஒப்பித்தான் கொடுத்தான். தன்னுடையது என்று நினைத்ததை மேனகா வசூல் செய்தாள், அவ்வளவே!

இதில் தப்பு என்ன இருக்கிறது? ஒரு பெரிய தொழில் அதிபனுடைய மனைவி ஆகப் போகிறவள், பணத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தால், அதைப் பாராட்ட வேண்டுமே தவிர, குறைப்படக் கூடாது! அதே தொழிலதிபன் மனைவியாய், அவள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும் செய்வாள் என்பதும் உறுதியே!

எனவே, விருந்து நாளை வெறுத்த நிலை மாறி, ஆவலாக எதிர்பார்க்கலானாள். மைத்திரேயி!

# 10

**ஹோ**ட்டலுக்குச் செல்வதற்காக மைத்திரேயி, தன்னைக் கவனத்துடன் அலங்கரித்துக் கொண்டாள்.

எந்த இடத்துக்குச் செல்லும்போதும், கண்ணைக் குத்தும் விதமாக, அளவு மீறி, அலங்காரம் செய்வது, மஞ்சுளாவுக்கும் பிடிக்காது. அதே சமயம், யாரும் அலட்சியமாக முகம் திருப்பும் விதமாகவும் இருக்கக் கூடாது என்பாள்.

திரும்பிப் பார்க்கும் விதமாகப் பளிச்சென்று தான் இருக்க வேண்டும். ஆனால், அது பாராட்டும் பார்வை யாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எப்போதும் கூறுவாள்.

மனதில் பதிந்திருந்த தாயின் அறிவுரைப்படி, ஓர் அழகிய கருநீல நிறத்தில், அங்கங்கே ஓரிரு கற்கள் பதித்த சல்வாரில், பொருத்தமாய் மெல்லிய நகை அணிந்து கிளம்பி விட்டாள்.

''என்னம்மா! 'பட்டுக் கருநீலப் புடவை, பதித்த நல் வயிரமா?' நன்றாக இருக்கிறதுடா!'' என்ற அண்ண னின் பாராட்டு மகிழ்ச்சியூட்ட, உற்சாகத்துடன் கிளம்பி னாள் அவள்.

கிட்டத்தட்ட அதே நேரத்தில், மாமன் மகனோடு வந்து சேர்ந்த சுமனசியும், குறைவாக உடையணிந் திருக்கவில்லை. கண்ணுக்குக் குளிர்ச்சியாக இளம் சிவப்பு நிறத்தில், அளவோடு வெண்ணிற சம்கி வேலைப் பாடு செய்யப்பட்டிருந்த சல்வார், பொருத்தமாய் ஒரு மெல்லிய துப்பட்டா.

அம்மா சொல்வது போலப் பாராட்டுதலாகத் திரும்பிப் பார்க்க வைக்கும் தோற்றம்!

அந்தப் பாராட்டைச் சைதன்யனின் கண்களில் பார்க் கும்வரை, அவளது தோற்றம், மைத்திக்குப் பிடித்துதான் இருந்தது!

இதே போல, குணசீலனும் பார்த்திருப்பானா?

கட்டாயம்! இன்னொருத்தியை மணக்க இருக்கும் அண்ணனாலேயே கண்ணை எடுக்க முடியவில்லையே! இவனுக்கு, முறை கிறை என்று, அது வேறு இருக்கிறது! நன்றிக் கடன் என்று அது ஒரு மண்ணாங்கட்டி! அவ்வளவுதான். தலை சுற்றிப் போயிருப்பான்!

முதலில் இந்த மேனகா எங்கே? பெரிதாக உள்ளே சென்று உட்காருமுன் வந்து விடுவதாகச் சொன்னாளே! அப்போதுதானே சேர்ந்து போய் அமர முடியும்? சொன்னதை மறந்து விட்டாளா? என்ன இது?

கவலையுடன் மைத்தி வாயிலைப் பார்த்தால், பக்கவாட்டில், 'லிஃப்ட்' கதவு திறக்க, பளபளவென்று ஜொலித்தபடி, அதிலிருந்து வெளிப்பட்டாள் ஒருத்தி.

ஹோட்டலின் மேல் தளத்தில் பார்லர் உண்டு. யாரோ மணப்பெண், திருமண நிச்சயம் அல்லது வரவேற்புக்காகச் சிங்காரித்துக் கொண்டு போகிறாள் என்று பார்வையை வாயிலுக்குத் திருப்பிய மைத்தி, ஒரு சிறு திடுக்கிடலுடன் திரும்பிப் பார்த்தால், அது மேனகாவே!

எ... என்ன இது? வெறுமனே ஒரு ஹோட்டல் டின்னருக்கு, இவ்வளவா? இவள் மாற வேண்டியது நிறைய இருக்கும் போலத் தெரிகிறதே!

மனதுள் நிறைய முரண் செய்ய, அதை வெளிக் காட்டாமல் அடக்கியவாறே பார்க்கையில், மேனகா அவள் அருகில் வந்திருந்தாள்.

''ஹாய் மைத்தி! என்ன இங்கே, இவ்வளவு தூரம்? ஒரு தோழி பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக, இங்கே

வரச் சொல்லியிருந்தாள். வந்து பார்த்தால், அவள் வரவில்லையாம். ஏதோ ரத்தாகி விட்டதாம். என்ன செய்வது என்று பார்த்தால், அவளை விட, என் உயிருக்கு உயிரான தோழி, நீ வந்திருக்கிறாய். அந்த விருந்து ரத்தானதே நல்லதாகி விட்டது! சற்று நேரம், உன்னோடு இருக்கலாமே! உனக்கு என்ன தோன்றுகிறது, மைத்தி?''

உயிருக்கு உயிரான தோழி. உன்னோடு இருக்கலாம். எல்லாவற்றையும் பெரும்பாலும், சைதன்யனை மையலாகப் பார்த்தபடி, மேனகா சொல்லி முடித்து விட்டாள். இது, உரிய பேச்சைத் தொடங்குவதற்காக, மைத்திக்குரிய குறிப்பு!

ஆனால், மைத்திரேயிக்குச் சட்டெனப் பேச்சு வரவில்லை. சுமனசி ஒரு தரம் சொன்னது போலப் பொய்யை இயல்பாகச் சொல்ல இயலாதது இது ஒரு காரணம் என்றால், மேனகையின் அதிகப்படி அலங்காரம், இன்னொரு தடையாக இருந்தது.

இது சைதன்யனுக்குப் பிடிக்காது. ஊர்ப்புற விழாக்களுக்குக் கொஞ்சம் கூடுதலாக நகைகளை அணிந்தாலே, ''என்னம்மா, நீங்கள் கூட, அம்மன் சாமி மாதிரி, அள்ளிப் போட்டுக் கொள்கிறீர்களே!'' என்று குறைப்படுவான்.

ஆனால், இவள்! மயில் கழுத்து நிறத்தில், பல்வேறு வண்ணங்களில் கல், சம்கி பயன்படுத்தி, இரு மயில்கள் ஒன்றை ஒன்று பார்த்து நிற்பது போல, அவளது கமிஸ் முழுவதற்கும் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. காதுகளில் நீளமாய் மயில்கள் பளிச்சிட்டன. கண்ணுக்கு

'ஷாடோ'வும், அதே வண்ணப் பளபளப்பில்தான். செருப்பு வரை, மிக மிகப் பொருத்தமானவைதான். ஆனால் கண் கூச வைக்கும் பளீர்! கூடவே உடையில் மயில் இறகுகளை அமைத்திருந்த விதத்தில், அதிகப்படி கவர்ச்சி வேறு!

விரைந்து சுதாரித்துக் கொண்டோ, என்னவோ, சல னமே காட்டாமல், மேனகையைக் குணாவுக்கு அறிமுகப் படுத்தி வைத்தவன், சைதன்யன்தான்.

''மேஜர் பரசுராமனுடைய பேத்தி. இப்போதுதானே சொன்னார்கள், என் தங்கைக்குத் தோழி என்று. மிஸ்டர் குணசீலன், அவருடைய மாமா மகள்!''

தலை சரித்து ஓரக் கண்ணால், அவனைப் பார்த்தாள் மேனகா. ''வெறுமனே மைத்தியின் தோழி என்கிறீர்கள்? இந்தக் குணசீலனுடைய அப்பா மட்டும் சமயம் பார்த்து நெஞ்சு வலியை இழுத்துக் கொண்டிராவிட்டால்...'' என்று வெட்கம் போலத் தரையைப் பார்த்தாள், மேனகா.

சுமனசா ஆத்திரத்துடன் நிமிர, அவளை முந்திக் கொண்டு சைதன்யன் பதில் சொன்னான். ''சாரி மேனகா, மறுத்துப் பேச வேண்டியிருக்கிறது. எந்த நோயையும், யாரும் வேண்டும் என்று இழுத்துக் கொள்ள மாட் டார்கள். அதுவும் இவன் தந்தை, அன்று உயிர் பிழைத் தது, அதிசயம்!'' என்றான் சற்றுக் கடுத்த குரலில்.

மேனகாவுக்குச் சமயத்தில் பேசவும் தெரியவில்லை! இதையும் தேவைப்படும் மாற்றங்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று, மைத்தி எண்ணமிடும்போதே, மேனகா, தன் கெட்டிக்காரத்தனத்தை இன்னும் காட்டி னாள்.

''ஐயோ! நான் அப்படிச் சொல்லவில்லை. சைது! குணா தந்தை ஆரோக்கியமாக இருந்திருந்தால், நம் வாழ்வில் என்னென்ன நடந்திருக்கும் என்று, அந்த ஆதங்கத்தில்...'' என்றவளை இடைமறித்து, ''பழங்கதை பேச, இது நேரமில்லை. இவர்கள் என் விருந்தினர். உணவறைக்குச் செல்ல வேண்டும். மைத்தி, படிக்க நிறைய இருப்பதால், பவித்ரா வரவில்லையாம். உன் சினேகிதி விஷயம் என்ன?'' என்று தங்கையிடம் கேட்டு, அவளோடு மேனகையையும் ஒரு சேர அதிர வைத்தான் சைதன்யன்.

மேனகையைப் போகச் சொல்லுகிறானே! அந்த அளவுக்குப் போய் விட்டானா?

கூடச் சேர்ந்து கொள்ளுமாறு, மைத்திரேயி, முன்பே மேனகையை அழைத்திருக்க வேண்டும். அவளது உடையைப் பார்த்து அதிர்ந்து, எரிச்சல் பட்டுக் கொண்டு, பேசாமல் நின்றது தப்பு! ஒரு வேளை, இந்த உடைதான், அண்ணனுக்கும் எரிச்சலூட்டி விட்டதோ?

அவசரமாக யோசித்து, ''அண்ணா, மேனகையையும் நம்மோடு அழைத்துப் போகலாமா? விருந்துக்கு என்று வந்துவிட்டு, அவளும் ஏமாற்றத்துடன் திரும்பிப் போக நேராது. இப்போது பவித்ரா வராததால், நாம் எதையும் மாற்றவும் வேண்டியிராது!'' என்று சிறு கெஞ்சல் கலந்த குரலில் வேண்டினாள்.

அவள் கேட்டு, அண்ணன் மறுக்க மாட்டான் என்ற நம்பிக்கைதான். ஆனால், ஒரு கூர் பார்வையின் பின், கண்கள் இளக, சைதன்யன் தலையாட்டிய பிறகே, மைத்தியின் மூச்சு நேராயிற்று!

மேனகையும் பெரிதும் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். உணவறைக்குச் சென்று உட்காரும் வரை, அவளும் பேசவே இல்லை!

மேனகையைப் பொறுத்த அளவில், அவளுக்கு முதலில் இருந்தே சற்று ஏமாற்றம்தான். அவள் எதிர்பார்த்தது போல, இரண்டு, ஆண்களும், அவளை விழி தெறிக்கப் பார்க்கவும் இல்லை! கிறங்கிப் போய்க் காலடியில் கிடக்கத் தயார் என்று காட்டிக் கொள்ளவு மில்லை!

குணசீலனாவது, விழியை எடுக்க முடியாமல், வெறித்து வெறித்துப் பார்த்தான் எனலாம். ஆனால், மிக முக்கியமாக யாருக்காக இந்த அலங்காரமோ, அவன் அதைக் கண்டு கொள்ளவே இல்லை!

அவள் போனால் தேவலை என்பது போல... அல்லது, குணாவின் மயக்கம்தான் அவனுக்கு ஆத்திரமூட்டி விட்டதோ? அவன் பார்வையில் பட்டுக் கொண்டு இருக்க வேண்டாம் என்றுதான், ஜாடையாகப் போகச் சொன்னானோ?

அப்படித்தான் இருக்கும் என்று முடிவு செய்ததுமே, மேனகைக்குத் தென்பு வந்து விட்டது! புன்னகையோடு ஒயிலாக உட்கார்ந்தாள்.

இருக்கைகளில் அமர்ந்ததும், மெனு கார்டுடன் ஆர்டர் எடுக்க வந்தவர்களிடம், அங்கே பீட்சா பிரிவு இருக் கிறதா? முகவரி கொடுத்தால் அனுப்புவார்களா என்று, சைதன்யன் விசாரித்தான்.

ஹோட்டல் ஆள் ஒப்புதலாகப் பதில் தரவும், சந்தான மூர்த்தி வீட்டு முகவரி கொடுத்து, நல்ல 'டாப்பிங்'

உள்ள பெரிய பீட்சா ஒன்றை அங்கே அனுப்ப ஏற்பாடு செய்தான்.

குணா எதையோ யோசித்தபடி, வேறு கவனமாக அமர்ந்திருக்க, கண்களில் நன்றிப் பெருக்குடன், சைதன் யனை நோக்கினாள் சுமனசா.

''அதென்ன பார்வை? சாப்பிட அழைத்துவிட்டு, அவளைப் பட்டினி போட்டு விடுவேனா?'' என்ற சிறு கோபத்துடன் சைதன்யன் கேட்டான்.

''பட்டினிக்கு வழியில்லாமல், அத்தை பார்த்துக் கொள்வார்கள். சார். ஆனால், பவிக்குப் பீட்சா என்றால், ரொம்ப ஆசை! பிறந்த நாள், நல்ல மதிப்பெண் வாங் கும்போது என்று, ஏதாவது சிறப்புக் காரணம் இருந் தால்தான் வாங்கிக் கொடுப்பது. இப்போது எதிர்பாராமல் பீட்சாவைப் பார்த்தால், ரொம்ப சந்தோஷப்படுவாள்!'' என்று சுமனசி விளக்கம் கொடுக்க, மேனகைக்குப் பேச விஷயம் கிடைத்தது!

''ஆமாமாம். எல்லோராலும், நம்மைப் போல நினைத் தால் பீட்சா வாங்கிச் சாப்பிட முடியுமா? நல்லவேளை யாக சைதுவின் தயவால், விருந்துக்கு வராமலே, உங்கள் பவித்ரா விருந்து சாப்பிடப் போகிறாள்! உனக்கும், உன் குணாவுக்கும் சந்தோஷம்தானே, சுமனசா?'' என்று என்னவோ, தான்தான் பீட்சாவை அனுப்பியது போலப் பெருந்தன்மை காட்டிக் கேட்டாள், அவள்.

''உன் குணாவாமே! பாம்பு விஷம் கக்குகிறதா? அதற்காகத்தான் வந்தது போல!

மேனகையை நேராக நோக்கி, ''எனக்கு ரொம்பவே சந்தோஷம்தான். ஆனால் பவித்ராவைப் பீட்சா ருசி

பிடித்தாட்டுவது, கொஞ்ச காலமாகத்தான். குணா அண்ணா படிக்கப் போன பிறகுதான் என்பதால், அண்ணாவுக்கு அது பற்றித் தெரியாது. எனவே என்னளவு, குணா அண்ணா மகிழ்ந்திருக்க வாய்ப்பில்லை,'' என்று தெளிவாக விவரம் கூறி விளக்கினாள்.

சபீனா போட்டு விளக்காத குறைதான். எத்தனை 'அண்ணா'க்கள்!

கண்ணோரம் புன்னகையில் சுருங்க, எல்லோருக்கும் சூப் கொண்டு வரச் சொன்னான் சைதன்யன்.

சுமனசியின் 'குணா அண்ணா' மைத்திரேயிக்குப் பிடித்திருந்தாலும், அண்ணனும் அதை ரசிக்கிறானே என்றும் இருந்தது. கூடவே, குணாவின் மௌனமும், அவளை என்னவோ செய்தது!

இதை, இத்தோடு விடுவதானால், அவள் மேனகாவாக இருக்க முடியாது. எனவே, சுமனசாவின் பேச்சில் ஒன்றைப் பிடித்து, ''அதென்ன குணசீலனை 'அண்ணா' என்கிறாய்? மச்... அத்தான், மச்சான் என்று அந்த முறைதானே மணந்து கொள்ளும் முறை! வந்து... பதில் சொல்லப் பிரியம் இல்லாவிட்டால்... யாருக்கேனும் தெரிய வேண்டாம் என்று நினைத்தாலும், இத்தோடு விட்டு விடலாம்!'' என்றாள் மறுபடியும் பெருந்தன்மை போலவே.

புரியாத அகல விழிப் பார்வையோடு, ''யாரிடமுமே மறைப்பதற்கு, இதில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள், சுமனசா. ''எனக்கு அப்பா வழியில் மூன்று அத்தைகள். நீங்கள் சொன்ன அத்தான், மச்சான் உறவுகளும் இருந்தன. உங்களைப் போலவே, முறைகிறை

என்றும் பேச்சு வந்ததாம். அப்பா அம்மாவுக்குப் பிடிக்க வில்லை! நெருங்கின சொந்தத்துக்குள் திருமணம் செய்வது, பொதுவாக வருங்காலச் சந்ததிக்கு நல்லதல்ல. அத்தோடு பெரியப்பா பிள்ளை என்றாலும், அத்தை பிள்ளை என்றாலும் ஒரே மாதிரி ரத்தத் தொடர்புதானே என்பது, அவர்கள் அபிப்பிராயம். அதனால் உறவுகள் மூத்த பையன்களை எல்லாம், அண்ணன்கள்தான் என்று, அப்படியே கூப்பிடப் பழக்கினார்கள். மாமன் மகனும், அத்தை மகனும் ஒன்றுதான். அதனால், குணாவும் அண்ணன்தான் என்றார்கள் அம்மா. அதுவே பழகிப் போயிற்று!'' என்று மீண்டும் ஒரு நீண்ட பதில் கொடுத்தாள்.

மைத்தியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''இது சரியான பதில் இல்லையே!'' என்றாள் மேனகை.

புருவம் சுருக்கி, ''அதெப்படி? ஏன் இந்த அழைப்பு என்றால், இதுதானே பதில்? வேறு விளக்கம் சொல் லவே முடியாதே!'' என்று பதிலுக்குக் கேட்டாள் சுமனசா.

சற்று அசடு வழிய ''அ... அப்படியில்லை! குண சீலனை மணக்க நீ விரும்புகிறாயா என்று அது ஒன்றும் சொல்லவே இல்லையே!'' என்று மறுபடியும் கேள்வி வந்தது.

ஓ! இதற்காகத்தான் இப்படிச் சுற்றி வளைத்து மூக்கைத் தொட்டதா? என்னவோ நாங்கள் பிச்சைக்காரக் குடும்பம் என்பது போலப் பேசினாய் அல்லவா, நன் றாகக் குழம்பு என்று மனதுக்குள் கறுவி, ''இப்போது திருமணத்துக்கு என்ன அவசரம்? படித்து முடித்து,

நிறையச் சம்பாதித்துப் பெற்றோருக்கு, தங்கைக்கு என்று குணா செய்ய வேண்டியது நிறைய இருக்கிறதே! அதெல்லாம் முடிந்த பிறகு யோசிக்கலாம்!'' என்றாள் அவ்வளவாக அக்கறை காட்டாத குரலில், சுமனசி.

அப்போதும், ''எல்லாம் நீதானே சொல்கிறாய்? உன் குணா... வந்து, உன் குணா அண்ணா எதுவும் சொல்ல வில்லையே! ஒரு வேளை, உங்கள் குடும்பத்தில் எப்போதும் மதுரை ஆட்சிதானோ? சிதம்பரம் கிடை யாதோ?'' என்று அவளைச் சீண்டினாள் மேனகா.

தூக்கத்திலிருந்து விழித்தாற்போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தான் குணசீலன். ''அ... அப்படி ஒன்றும் கிடை யாது. ஆனால், சுமி கெட்டிக்காரி என்பதால், அப்பா உட்பட எங்கள் வீட்டில் எல்லோருமே, அவள் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்போம். மதுரை என்கிறீர்களே, என் அம்மாவும்தானே? ஆனால், அவர்கள் கூட, சுமி பேச் சுக்கு மாறு சொல்வது கிடையாது. நல்லதை மட்டும் யோசிக்கிறவள் அவள்!'' என்றான் அவன்.

அத்தை மகளிடம் குணாவுக்கு மிகுந்த மதிப்பு உண்டு என்று, மைத்திக்குத் தெரியும். ஆனால் அது திருமணத்தில் வந்து முடியுமா என்பதுதான் அவளுக்கும் தெரிய வேண்டியிருந்தது. மேனகாவின் நோண்டல் சற்று அதிகப்படிதான் என்றாலும், இந்த அளவுக்குப் பேச்சு வந்த பின் விட மனமின்றி, ''நீங்களும் அண்ணி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே!'' என்றாள்.

குணா அதிர்ந்து விழிக்க, இப்போது சைதன்யன் பேச்சில் தலையிட்டான். ''அளவு மீறி ஒருவரது சொந்த

விஷயங்களில் தலையிடுவது, ஊகூம், நம் வீட்டுப் பழக்கம் இல்லையே, மைத்திம்மா! எப்படியோ, இந்தப் பேச்சு இத்துடன் நிற்கட்டும்! உணவு வந்து கொண் டிருக்கிறது. எல்லோரும் சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்துவோமே!'' என்றான்.

இலகுவாகவே சொன்னபோதும், அது ஒரு கட்டளை போல ஆகிவிட, அதன் பின், சொந்த விஷயம் யார் பேச்சிலும் வரவில்லை.

போர் என்று சொல்ல இயலாதபடி, நகைச்சுவையுடன் கூடிய உரையாடல்கள், தகவல்கள், கேள்வி பதில்கள் என்று சைதன்யன் தொடங்க, மற்றவர்கள் அதைப் பின்பற்ற, விருந்து ஓரளவு வெற்றிகரமாகவே நிறை வேறியது.

குணாவுடைய வகுப்புத் தோழனும், நண்பனுமான கண்ணன் ஊரிலிருந்து வந்து, அன்றைய இரவேனும் அவனோடு தங்கி அரட்டை அடிக்குமாறு வேண் டவே, ஊருக்குக் கிளம்புவது பற்றி, அப்போதே சைதன்யன், மைத்தியிடம் குணசீலன் விடை பெற்றுக் கொண்டான்.

திரும்பிச் செல்லும்போது, குணா கேட்டான். ''அந்தப் பெண் மேனகா ஒரு மாதிரிக் குறிப்புக் காட்டிப் பேசுகிறாள். மைத்திரேயி அவளை 'அண்ணி' என்றே அழைக்கிறாள். அந்தப் பெண்ணை கேப்டன் மணக்கப் போவதாக இருக்கிறதா?'' என்று அத்தை மகளிடம் வினவினான்.

''அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள்!'' என்றாள் சுமனசா எங்கோ பார்த்தபடி.

''ஐயோ!'' என்றான் குணசீலன்.

சுமனசி திகைப்புடன் திரும்பிப் பார்க்கவும், ''சொந்த விஷயங்களில் அடுத்தவர் தலையிடக் கூடாது என்று, கேப்டன் சொன்னார். ஆனால், இந்தப் பெண் பற்றி, நன்கு விசாரித்தார்களா என்று தெரியவில்லையே!'' என்றான் கவலையுடன்.

''மேஜர் இங்கே பெரிய மனிதர், குணாண்ணா!''

''இருக்கலாம். ஆனால் அவர் பேத்தி? என் ஊகம் சரியானால்... சரியாகத்தான் இருக்கும் என்று கிட்டத் தட்ட நிச்சயம். அந்த மயில் டிசைன் உடை பற்றி, என் நண்பன் விபு அவ்வளவு சொன்னானே! காதுகளில் நீளமாகத் தொங்கும், அந்த மயில் தொங்கட்டான்! அது இவளேதான்! இந்த மேனகா நல்லவள் இல்லை, சுமி!'' என்றான் குணா உறுதியாக.

''ஏன்? அவள் என்ன செய்தாள்?''

''எனக்கு ரொம்ப உறுதியாகத் தெரியாது, சுமி. ஆனால், இன்னொருத்தனோடு முன்பே ஒரு தரம் இவளுக்குத் திருமணம் நிச்சயமாகி இருந்ததாம். ஏதோ பணம் பற்றிய தகராறில், அது முறிந்து விட்டது. அவ ளுக்காகப் பெற்றோர், பணம் எதுவும் வேண்டாமென்று உதறிவிட்டு அவன் வந்தபோது, பணம் இல்லாத நீ வேண் டாம் என்று, அவனை இவள் உதறி விட்டாளாம். அவன் புத்தி பேதலித்து... தூக்கு மாட்டித் தொங்கப் போய்... விபு... என்னென்னவோ சொன்னான். முக்கியமாகப் பளபளவென்று இந்த உடைதான் நிச்சயத்துக்காம். உடையைப் பார்த்ததுமே, எனக்கு விபு சொன்னதுதான் நினைவு வந்தது. அப்போது, யாரோ என்று, அவ்வளவாக

அக்கறை இல்லாமல் கேட்டதா? அது பற்றித்தான் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தேன். ஆனால், இதற்கு மேல் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், மைத்தி அவளை 'அண்ணி' எனவும்... ஐயோ! இதை எப்படியாவது தடுக்க வேண்டுமே, சுமி.''

மேனகையின் அழகு, அலங்காரத்தில் மயங்கித்தான் ஒரு மாதிரி இருந்தானோ என்று எண்ணியதற்காக, மனதுக்குள் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சுமனசா சொன்னாள். ''இப்படிச் சொல்லிக் கொண்டு, அங்கே போனால், அடித்து விரட்டுவார்கள். அத்தோடு, அவர்கள் கெட்டிக்காரர்கள், அண்ணா. தன்னைப் பார்த்துக் கொள்ளத் தெரிந்தவர்கள். இதில் நாம் தலையிட்டுக் கேவலப்பட வேண்டாம்.''

சற்றுத் தயங்கி, ''அப்படியா சொல்கிறாய்...'' என்று இழுத்தபோதும், சிறு யோசனையின் பின், ''நீ சொல்வதும் சரியாகத்தான் தெரிகிறது, சுமி. கேப்டன் சாரெல்லாம் ரொம்பவே கெட்டிக்காரர். அதனால், அவர்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவோம்,'' என்று ஒத்துக் கொண்டான் குணா.

மீதிப் பயணம் அமைதியிலேயே கழிய, அவளை வீட்டில் விட்டு விட்டு, குணசீலன் நண்பனை நாடிப் போனான்.

குணா கிளம்பிச் சென்ற ஒரு வாரத்தில், சந்தான மூர்த்தி அலுவலகம் செல்லத் தொடங்கினார். அன்று காலையிலேயே, பக்கத்து அனுமார் கோவிலில் அபிஷேகம் ஆராதனைகள் ஏற்பாடு செய்து, பொங்கல், வடை பிரசாதம் வந்தது.

இரண்டு புது ஸ்டீல் டப்பாக்களில் பிரசாதங்களை அடைத்து, ''எம்டி சார் உதவி பண்ணவில்லை என்றால்,

நம் கதியே அழிந்து போயிருக்கும். இந்தப் பிரசாதத்தைக் கொடுத்து, நன்றி சொல்லிவிட்டு, அலுவலுக்குப் போம்மா. குணா கூட, அப்படித்தான் சொன்னான்,'' என்றாள் மாமன் மனைவி.

சைதன்யனின் வீட்டுக்கா... என்று கால்கள் பின்னடிக்க, ஒரு கணம் நிதானித்து, சுமனசா யோசித்தாள்.

போகத்தான் வேண்டும். ஒரு முறையேனும்! அவசியமும் இருக்கிறது.

காலையிலேயே பூஜை முடிந்துவிட்டதால், சைதன்யனின் வீட்டுக்குப் போய்ப் பிரசாதத்தைக் கொடுத்துவிட்டுச் சரியான நேரத்தில் சூப்பர் மார்க்கெட்டுக்குப் போய்விட, அவளுக்கு நிறையவே அவகாசமும் இருந்தது.

அத்தை மறுமுறை வற்புறுத்து முன்பாகவே, சைதன்யன் வீட்டை நோக்கி, சுமனசா கிளம்பி விட்டாள்.

# 11

தயக்கமும், ஒருவிதப் பயமுமாகத்தான், சைதன்யனின் வீட்டுக்குச் சுமனசா சென்றதே. ஆனால், கிடைத்த வரவேற்பு, அவள் சற்றும் எதிர்பாராததாக இருந்தது.

மரியாதைக்காக உட்கார வைத்து, யார் என்றும், யாரைப் பார்க்க வேண்டும் என்றும் விவரம் கேட்டதெல்லாம், சுமனசா எதிர்பார்த்ததே.

ஏதோ ஒன்றுடன் சேர்ந்த கன்று போல மைத்திரேயி சில சமயங்களில் நடந்து கொண்ட போதும், அவளுடைய அண்ணன், மைத்தி இருவரின் நடத்தையிலும் நல்ல பண்பாடு இருந்தது என்பது, மறுக்க முடியாதது.

அதற்கு எதிராக எதுவும் நடக்காது என்பதும், அவளுக்கு நிச்சயமே.

ஆனால், அவள் சென்ற சில நிமிஷங்களிலேயே, அவசரமாக அணிந்து வந்தவன் போல, டீ ஷர்ட்டை இழுத்து விட்டபடி வந்த சைதன்யன், ''வா, வா வா!'' என்று ஆர்வத்துடன் வரவேற்றது, அவள் எதிர்பாராத இனிமையே.

தொடர்ந்து, ''நீ வந்தது ரொம்ப சந்தோஷம். நம்பக் கூட முடியவில்லை! இரு, கிள்ளிப் பார்த்துச் சொல்லுகிறேன். ஆனால், யாரைக் கிள்ளிப் பார்ப்பது, என்னையா? உன்னையா?'' என்று அவன் கேட்கவும் அவள் முகம் மாறியது.

அவளை அவன் கிள்ளுவதா? அவளாக அவன் வீட்டுக்கு வந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவதா?

அவள் ஆத்திரமாக முறைக்கவும், ''தப்பாக எடுத்துக் கொள்ளாதே சுமனசி. எதிரே இருப்பது, மெய்யாகவே நீதானா? அல்லது அவ்வப்போது தோன்றும் உரு வெளித் தோற்றமா என்பதைத் தொட்டுப் பாராமல் எப்படிக் கண்டு பிடிப்பது? அதற்காகச் சொன்னேன்!'' என்று அவன் பவ்வியமாகப் பசவும், அவளுள் என்னவோ செய்தது.

அவளது உருவெளித் தோற்றம் அவனுக்கும் வருகிறதாமா! அவளுக்குத்தான் எப்போதும், கண்களில் ஏதோ கோளாறு என்று பார்த்தால்...

அவள் தலை சுற்றப் போகுமுன், நல்ல வேளையாக சைதன்யனுடைய பெற்றோர் அங்கு வந்து சேர்ந்தனர்.

அருகில் வந்து, அவளது கையைப் பற்றி, ''நீதான் அந்த சுமனசியா? நிறையக் கேள்விப்பட்டு, இப்போது தான் பார்க்க முடிந்திருக்கிறது. உட்காரம்மா,'' என்று அவளை உட்கார வைத்துத் தானும் அருகே அமர்ந்து கொண்டாள், அந்தத் தாய்.

நிறையக் கேள்விப்பட்டு என்றால்? யார் என்ன சொல்லியிருப்பார்கள்? மைத்திரேயி என்றால் நல்லதாக இராது. ஆனால்...

அனிச்சையாய் சைதன்யனைப் பார்த்தால், அவனது பார்வை தாயிடமிருந்து திரும்பிக் கொண்டிருந்தது.

என்ன நடக்கிறது, இங்கே? அன்று விருந்துக்குக் குணாவோடு அவள் கூடப் போனது, இங்கே பிரச்சினையாகி இருக்குமோ? ஆனால் இனிமையாகத்தானே பேசுகிறார்கள்?

புரியாததோடு, நெஞ்சுக்குள் இந்தப் படபடப்பு, சுமனசிக்குச் சற்றுப் பயமாகவும் இருந்தது. ஒன்றுமில்லாததைப் பெரிதாகக் கற்பனை செய்து, பின்னர் கலங்கக் கூடாதே! எதற்கும், இங்கிருந்து சீக்கிரமாகக் கிளம்பி விடுவது, அவளுக்கு நல்லது!

பெரியவர்களின் இயல்பான கேள்விகளுக்கு உரிய பதிலை வாயால் உரைத்தவாறே, சுமனசியின் மனம் வேகமாக யோசித்து முடித்தது.

அதன்படி, அவளது கல்வி பற்றிய கேள்விக்குப் பதிலளித்த கையோடு, தன் வருகைக்கான காரணத்தைத்

தெரிவித்தாள். ''உடம்பு சரியாகி, மாமா அலுவலகம் செல்கிற முதல் நாள் இன்று. அதற்காகக் கோயிலில் பூஜைக்குக் கொடுத்திருந்தோம். பொங்கலும், வடையும் பிரசாதம். உங்கள் குடும்பத்து உதவி இல்லாமல், மாமா... மாமா இன்று இருப்பதே, உங்கள் உதவியால்தான் என்று, கொஞ்சம் பிரசாதம், அத்தை கொடுத்து அனுப்பி னார்கள்,'' என்று கைப்பையில் இருந்த பாத்திரங்களை எடுத்தாள்.

அருகில் இருந்த சிறு மேஜை மீது வைப்பதுதான், சுமனசியின் எண்ணமாக இருந்தது. ஆனால், அதற்குள், ''சுவாமி பிரசாதம்'' என்று பாத்திரங்களைக் கை நீட்டி வாங்கிக் கொண்டாள் சைதன்யனுடைய தாயார் மஞ் சுளா.

''முதல் முதலாக, சுவாமி பிரசாதம் கொண்டு வந் திருக்கிறாள். மறக்காமல் சாப்பிடு,'' என்றாள் மகனிடம்.

பக்தி காட்டுவது போல, அவன் கன்னத்தில் போட்டுக் கொள்ள, மற்ற மூவருக்கும் சிரிப்பு வந்தது.

''டேய்...'' என்று கண்டிப்பது போலக் கூறினாலும், பெற்றவர்கள் வாய்விட்டு நகைக்க, சுமனசா புன்னகை யோடு பேசினாள்.

''அத்தோடு, மாமா கொஞ்சம் தன் சுகம் பாராத விதம். அவர் தன்னை ரொம்ப அலுப்புப் படுத்திக் கொள் ளாமல், அவரைக் கவனித்துப் பார்த்துக் கொள்ளும்படி கேட்கவும் வந்தேன், சார்!'' என்றாள் வேண்டுகோள் போல.

ஆனால், ''அதுதானே, பார்த்தேன்! இப்படி ஒரு பெரிய காரணம் இல்லாமல், தேவி தரிசனம் கிட்டுவது

ஏது?'' என்று, சைதன்யன் கேலியாகப் பேசவும், அவள் பெரிதும் அதிர்ந்து போனாள்.

பெற்றோர் முன்னிலையில்... தனியாக என்றாலுமே 'தேவி தரிசனம்' என்று, இது என்ன பேச்சு? ஆனால் அவனைப் பெற்றவர்கள் முகம் சுழிக்கக் காணோமே! சிரிக்க அல்லவா செய்கிறார்கள். வீட்டில் இப்படி இலகுவாகப் பேசிச் சிரிப்பதுதான், அவனது பழக்கமோ? இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாதோ?

திகைப்பைக் காட்டாமல், உதட்டைக் கடித்து அவள் சமாளிக்கையில், அவன் மேலும் பேசினான். ''ஆனால் இவ்வளவு நாட்கள் ஓய்வெடுத்ததற்கும், கூடவே அவருடைய தங்கை மகள் என்னைச் சந்தேகமாகவே நினைப்பதற்கும் சேர்த்து, நிறைய வேலை கொடுத்து, அவரைக் கசக்கிப் பிழிய வேண்டும் என்று நான் போட்ட திட்டம் என்ன ஆவது? அம்பேல்தானா?'' என்று அவன் வருத்தம் காட்டிக் கேட்க, அவனைப் பெற்றவள் மேலும் நகைத்தாள்.

புன்னகையுடன் சுமனசியைப் பார்த்து, ''பயப்படாதேம்மா. உன் மாமாவை என் பிள்ளை ரொம்ப நன்றாகப் பார்த்துக் கொள்ளுவான்,'' என்றார், சைதன்யனுடைய தந்தை பரிவாக.

மாமா என்றதும், சுமனசிக்குத் தன் விஷயம் மறந்தது.

''சாரி, சார். கேட்டிருக்கக் கூடாது என்று தெரிகிறது. ஆனால், மாமாவுக்கு ஒன்று என்றால், எங்களுக்குத் தாங்க முடிவது இல்லை. அதிகப் பிரசங்கித்தனம் என்று தோன்றினால், மன்னியுங்கள்,'' என்றபோது, அவளது குரல் லேசாகத் தளுதளுத்திருந்தது.

சின்னவளின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள் மஞ்சுளா. ''ஒரு மகள் போலவே, உன் மாமா வீட்டினரிடம் உனக்கு அன்பு! இல்லையாம்மா? வீட்டுப் பொறுப் பைப் பார்த்துக் கொள்கிறாயாம். சின்ன மகளுக்குப் பணம் சேர்க்கிறாயாம். அவரது மருத்துவச் செலவைக் கூடக் கொடுத்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடித் தாயாமே!''

இதெல்லாம் இவர்கள் 'கேள்விப்பட்ட' தாமா? ஆனால், மருத்துவச் செலவு பற்றிச் சொல்வதானால்...!

மீண்டும் சுமனசி சட்டெனச் சைதன்யனைப் பார்க்க, அவன் தோளைக் குலுக்கி, ''குணா உபயம்!'' என்றான்.

''அவனுக்கு ஓட்டை வாய்!'' என்றாள் சுமனசி.

''ஆனால், நீ செய்து வருவதைத்தானே சொன்னான்?''

''அது... ஆனால், ஒரு போதும் இது ஒரு வழிப் பாதை யல்ல,'' என்று அவனிடம் கூறியவள், மஞ்சுளா பக்கம் திரும்பினாள்.

''மேடம், என் அம்மாவை இழந்து நான் தனியான போது, அப்பா வழியில் இருந்த வளமான உறவுகள் எல்லாம் ஒதுங்கிக் கொண்டன. ஆனால் மாமாதான், என் தங்கை பெண்ணுக்குத் தலைக்கு மேல் ஒரு கூரையும், வயிற்றுக்கு ஒருவேளைச் சோறும் என்னால் கொடுக்க முடியும் என்று என்னை, அவரோடு இங்கே கூட்டி வந்தார். நான் கற்றுக் கொண்டிருந்த நிர்வாகப் படிப்பும் முடியாத நிலையில், செய்வது அறியாமல் நான் திகைத்திருந்த சமயம் அது. அப்போது மாமா கொடுத்த குடும்பப் பாதுகாப்புக்கு விலையே கிடையாது. மேடம்! இத்தனைக்கும், அப்போதே அவரது நிலையும் சரி

கிடையாது. என்றாலும், எப்படியோ போகிறாள் என்று, என்னை அவர் விட்டு விடவில்லை. மாமா போலத் தான், அத்தையும்! எனக்கு எந்த அவப் பெயரும் வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தானே பெற்ற பிள்ளையையே, வெளியே தங்கச் சொல்லுகிறார்கள்! பவிகூட அப்படித்தான். அக்கா, அக்கா என்று உயிராக இருப்பாள். ஆனால் எங்களுடைய இந்த அன்பான குடும்பத்தின் அச்சாணி, மாமாதான், மேடம்! அவர் இல்லாத நிலையை, எங்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது! அவரைக் காப்பாற்றித் தந்ததற்காக, உங்களுக்கு எப்படி என்ன கைம்மாறு செய்யப் போகிறோமோ, அதுவும் தெரியவில்லை!'' என்று உணர்ச்சி வேகத்தில் கண் கலங்கக் கூறினாள்.

கூறி முடிந்த பிறகே, தன் நிலை உணர்ந்தவள், வெட்கத்துடன் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''ரொம்ப பேசி போரடித்துவிட்டேன். அதற்கு இன்னொரு சாரி. நான் வருகிறேன் மேடம்!'' என்று எழுந்தாள்.

அவளது பேச்சின் கடைசிப் பகுதியைக் கவனிக்கா தவள் போல, ''கைம்மாறு பற்றி நீ சொன்னது உண்மை என்றால், ஒன்று செய்யலாம். யாரோ போல என்னை மேடம் என்று கூப்பிடாமல்...'' என்றவள், மகனின் ஒரு வேக அசைவில், அவன் புறம் பார்த்தாள்.

நெஞ்சு நிறைய நன்றி இருந்ததால், பெரியவளின் பேச்சை முழுக் கவனத்துடன் கேட்டிருந்த சுமனசியும், அவளது பார்வையைத் தொடர்ந்தாள்.

ஆனால், அதற்குள் சைதன்யன் இயல்புக்கு மாறி யிருக்க, மஞ்சுளாவும், ''ஆன்ட்டி என்று, ஏதோ ஓர் உறவு

போல அழைக்கலாம்,'' என்று சாதாரணமாகச் சொல்லி முடித்தாள்.

மஞ்சுளா முதலில் சொல்ல வந்தது வேறு என்று, சுமனசிக்குப் புரிந்தது.

ஆனால், ஒருவர் சொல்ல விரும்பாததை, என்ன என்ன ஏன்று கேட்டுத் தொண்தொணப்பது அநாகரிகம் என்று உணர்ந்து, ''கட்டாயமாய் மே... இல்லை, ஆன்ட்டி!'' என்று அவள் திருத்திக் கொண்ட விதத்தில், எல்லோரும் நகைக்க, சிரித்த முகமாகவே, அவளும் விடை பெற்றுக் கிளம்பினாள்.

கிளம்புவதற்காகப் பத்து நிமிஷங்கள் பொறுத்தால், அவளைத் 'திருப்தி'யில் விட்டு விட்டுப் போவதற்குச் சைதன்யன் முன் வரத்தான் செய்தான்.

ஆனால், செல்லும் வழியில் இன்னொரு வேலை இருப்பதாகச் சொல்லி, சுமனசி அதைத் தவிர்த்து விட்டாள்.

சும்மாவே, அவனைப் பற்றிய நினைவுகள், ஒவ்வொன்றாக நினைவு வந்து, தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு இருக்கின்றன. அவனோடு தனியே காரில் சென்று, இன்னமும் அவைகளைப் பெருக்கிக் கொண்டு, அல்லலை அதிகப்படுத்திக் கொள்வானேன்?

இப்படியெல்லாம் புத்திசாலித்தனமாக யோசித்துத் தான், சைதன்யனோடு காரில் செல்வதை, அவள் தவிர்த்தது. ஆனால், மூளையும் மனதும் ஒன்றில்லையே! அழகான அந்த வீடு, பிரியமாகப் பேசும் அவனுடைய பெற்றோர், எல்லாவற்றையும் விட, அவனது அருகாமை...

எல்லாமே தனக்கு வேண்டும் போல, சுமனசிக்கு மிகவும் ஏக்கமாகவும் இருந்தது.

அவளுக்கு ஒரு போதும் கிடைக்க முடியாத பாக்கியம்! முழுசாக அடையப் போகிறவள், அந்த மேனகா! ஆனால், அவளா?

கூடாது! கூடவே கூடாது!

''என்னம்மா கூடாது?'' என்று, பஸ்சில் பக்கத்தில் இருந்தவள் கேட்ட பிறகுதான், தன் மனதில் நினைத்ததையே வாய்விட்டுச் சொல்லி விட்டது, சுமனசாவுக்குப் புரிந்தது. உள்ளூர அவ்வளவு தீவிரமாக உணர்ந்திருக்கிறாள்!

உதடுகளை இறுக மூடிக் கொண்டு, சுமனசி மேலே யோசித்தாள்.

தீவிரம்தான்! சைதன்யன் மட்டுமல்ல. அவனுடைய பெற்றோர்களும் எவ்வளவு அருமையான மனிதர்கள்!

இந்தக் குடும்பத்தில், அந்த மேனகாவா? எப்படி ஒத்துப் போகும், அந்த நல்ல மனிதர்களுக்கு? வீடு நரகமாகிப் போகாதா? சைதன்யனுக்கும் அப்படித்தான். அண்ணி, அண்ணி என்று இன்று அவளைச் சுற்றும் மைத்தியையும், மேனகா விட்டு வைக்கப் போவது இல்லை.

ஆசை கொண்ட தன் மனம்தான் இப்படியெல்லாம் கற்பனை செய்கிறதோ என்ற ஐயத்தில், சுமனசி, நடுநிலையில் இருந்து, யோசித்துப் பார்த்தாள்.

ஆனால், மேனகாவை விலக்குவதாலேயே, சைதன்யன் சுமனசாவை மணப்பான் என்பதற்கு உத்தரவாதம்

கிடையாதே! பணம், அந்தஸ்து என்று அவர்களுக்கு ஏற்ற மாதிரிதானே, ஒரு பெண்ணைப் பார்ப்பார்கள்? அதனால், அவளது இந்தக் கருத்துக்கு, அவளது ஏக்கம் மட்டும் காரணம் அல்ல.

கூடவே, எப்படி யோசித்தும், மேனகாவை அந்தக் குடும்பத்தோடு சேர்த்து நினைத்துப் பார்க்கவே அவளால் முடியவில்லை!

முக்கியமாக, அந்த உடை! ஆன்ட்டி, அங்கிள் அருகே, அந்த உடையுடன் அவள் எப்படி நிற்க முடியும்? எப்படிப் பொருந்தும்? சுமனசியால் கற்பனைகூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை!

அன்று, மைத்தியாலேயே அதை ஜீரணிக்க முடியவில்லையே! எவ்வளவு நேரம் பேச்சிழந்து போனாள்!

ஒரு சமயத்தில், இந்தப் பேச்சு, நாம் பேசவேண்டாம் என்று, குணசீலனை விட்டுவிடச் சொன்னவள்தான், சுமனசா. ஆனால் இப்போது அவளாலேயே விட முடியவில்லை!

வெகு நேரம் யோசித்துவிட்டு, குணசீலனுக்கு போன் செய்தாள், சுமனசி.

இரு தினங்கள் கழித்து, வெளியூர் சென்று, திரும்பினாள்.

அன்று மாலையே, சைதன்யனை நேரில் சந்திக்க வேண்டும் என்று, போன் மூலம் அவனிடம் அனுமதி கேட்டாள்.

''என்னைச் சந்திப்பதற்கு, உனக்கு அனுமதியா?'' என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான் அவன். ''எந்த

நேரமானாலும், என் அறைக்குள் நேரே வருவதற்கு, உனக்கு அனுமதி தேவையே கிடையாதே! இது இன்னமுமா உனக்குத் தெரியாது?'' என்ற அவனது கேள்வியில், அவளது கண்கள் கலங்கின.

அவ்வளவு உரிமை, மெய்யாகவே அவளுக்கு இருக்கிறதா? அவன் உட்பட, அப்படி யாரும், அவளிடம் சொன்னதே இல்லையே! அத்தோடு, அவன் தங்கை, வேறொருத்தியை அல்லவா, இன்னமும் அண்ணி என்று அழைத்துக் கொண்டிருக்கிறாள்! இந்த நிலையில், சுமனசி எப்படி உரிமை கொண்டாட முடியும்?

ஆனால், உரிமையை அறிவிப்பவன் போல, அலுவலகத்துக்கு வரச் சொன்னான், அவன்.

அவள், அங்கே சென்றதும், அவனே வெளியே வந்து, அவளை வரவேற்று அழைத்துச் சென்றான்.

சுமனசி சொல்லச் சொல்லக் குறுக்கிடாமல் கேட்டான்.

மேனகா பற்றி, குணா சொன்ன கதைதான்.

ஆனால், மாமன் மகனுடைய நண்பன் விபுவை நேரிலேயே சந்தித்துப் பேசி, கதை உண்மையாகவே நடந்ததுதான் என்பதற்கான சில சான்றுகளோடு, சுமனசி திரும்பி வந்திருந்தாள்.

அவள் சொல்லி முடித்ததும், ''ஆக, இந்த வேலை செய்ய, உனக்கு இவ்வளவு காலம் தேவைப்பட்டதாக்கும்!'' என்றான் அவன்.

சட்டென நிமிர்ந்து, ''அப்படியானால், உங்களுக்கும் முன்பே தெரியும்?'' என்று கேட்டாள் அவள்.

''பின்னே? உன்னிடம் சொனனவன், என்னிடம் சொல்ல மாட்டானா? நீ ஒதுங்கிவிடச் சொன்னதற்காக, அப்படியேதான் இருந்து விடுவானா? அவன் என் நண்பன் அல்லவா? நீயாகச் செயலில் இறங்க வேண்டும் என்பதற்காகவே, எனக்குத் தெரியும் என்பதை, உன்னிடம் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று சொல்லியிருந்தேன்! அப்போதும் அம்மையார், தியாகச் செம்மல் அசையக் காணோமே! சரி, ஓர் உந்துதல் கொடுத்துப் பார்ப்போம் என்றுதான், பிரசாதத்தை வீட்டில் கொடுக்க வைத்தது!''

குணா கூடச் சொன்னான் என்றார்களே, அத்தை! நண்பர்கள் இருவரும் சேர்ந்து போட்ட திட்டம்! ஏன், குணாவுடைய நண்பன் அந்த விபு! அவன் கூட, இந்தப் பத்திரிகைச் சான்றைத் தயாராக வைத்துக் கொண்டு இருந்தானே! காரணம்...

மெல்ல மெல்லக் குறைந்து வந்த கலக்கம் அடியோடு மறைந்துவிட, ''இவ்வளவு எதற்கு? நீங்களே வீட்டில் பேசித் தெளிவு படுத்தியிருக்கலாமே!'' என்று கேட்டாள் அவள்.

''செய்திருக்கக் கூடியதுதான். ஆனால், இந்த மேனகை விஷயம்... அது, என் தங்கை ஆசைப்பட்டு, அவள் மூலம் நடந்தது. அவளாக அதை நிறுத்தினால்தான், பிற்காலத்தில் உனக்குப் பிரச்சினை இல்லாமல் இருக்கும் என்று கருதினேன். மேனகை பற்றி விவரத்தை நானே எடுத்துச் சொல்லி, அவளை விலக்கினேன் என்று வை. அடுத்து, நானே உன்னைக் கட்டும்போது, உனக்காக, நான் அவளது தேர்வை மறுத்ததாக, மைத்திக்குத் தோன்றி விடாதா? அது, உன் மீது

அவளுக்கு ஒரு மனத்தாங்கலை ஏற்படுத்தக்கூடும். அது கூடாது என்பது என் கருத்து. மைத்தி புத்திசாலி, சுமனி. மேனகையின் அழகு என்கிற மேகம், கொஞ்சம் அவளது புத்தியை மறைத்து விட்டது. அதைத் தெரிவிக்கிற வேலையை நீயே செய்வதுதான் நல்லது. அதனால் மைத்தியிடம் போய், இந்த விவரம் தெரிவி. குணா உனக்குத் தந்த தகவலாக மட்டுமே, இது இருக்கட்டும். அதை, என் நன்மைக்காக, நீ மைத்தியிடம் தெரிவிப்ப தாகவும்!'' என்றான் அவன்.

''பெருமளவு அதுதானே உண்மை! உங்களுக்காக வும், அங்கிள் ஆன்ட்டிக்காகவும், மைத்திக்காகவும்தான்!'' என்று முறுவலித்தாள் சுமனசி.

''ஓஹோ, அப்படியானால், உங்களுக்கு ஒன்றுமே இல்லையாக்கும்! வெறும் பொது நலசேவை! சமூக சேவகி ஆகி விட்டாய்! ம்?'' என்று கிண்டல் செய்தான் அவன்.

லேசாக முகம் சிவக்க, ''பெருமளவு என்றுதானே சொன்னேன்? கொஞ்சம் எனக்காகவும் என்பது அதி லேயே அடக்கம்!'' என்றாள் மென்குரலில் அவள். உடனேயே முகம் மாற, ''மேனகையின் அழகில் மைத் திக்கு மயக்கம். என் பேச்சை ஒத்துக் கொள்ள மறுத் தால்?'' என்று கவலையோடு கேட்டாள் சுமனசி.

தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்து, அவளையும் எழுப்பி நிறுத்தினான், சைதன்யன். அவளது தோளைப் பற்றி, இறுக அணைத்தான்.

''அந்த நிலை வருமானால், அப்போது நான் தலை யிடுவேன்,'' என்றான் அவன். ''ஆனால் உனக்கும்,

மைத்திக்கும் எதிர்காலத்தில் உறவு நன்றாக இருக்க வேண்டும் என்பது, என் ஆசை! அதற்காகத்தான் முதல் முயற்சியை, உன்னையே தொடங்கச் சொல்வது,'' என்று, அவளைக் கையணைப்பில் நிறுத்தியவாறே, தொடர்ந்து கூறினான்.

அவள் மூச்சுவிட முடியாமல், தடுமாறி நிற்கையில், ''உன்னை அணைத்த இந்தக் கைகள், வேறு ஒருத்தியைத் தொடாது என்பது மட்டும், எப்போதும் நினைவிருக்கட்டும்!'' என்றுரைத்து, அவளை விடுவித்தான்.

மேலும், ''மைத்திக்கு என் நலம்தான் முக்கியம். மேனகாவை அவள் தேர்ந்தெடுத்ததே, அவ்வளவு அழகான பெண், அண்ணன் மனைவி ஆக வேண்டும் என்ற ஆசையில்தான். அந்த அழகு தோலளவே என்று காட்டிவிட்டால் மாறிவிடுவாள்,'' என்றான்.

சைதன்யன் கூறியது சரியே என்று தோன்ற, சுமனசி, மைத்திரேயியை நாடிப் போனாள்.

சுமனசியைப் பார்த்ததும் மைத்திரேயி திகைத்துப் போனாள். அதுவும் அவளைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறாள் என்பது, அவளுக்குச் சற்று அதிர்ச்சியாகவே இருந்தது.

இந்த சுமனசியின் புகழ் சில நாட்களாக, வீட்டில் ஒரே பாராயணமாக நடந்து கொண்டிருந்தது. அவள் இப்படி, அவள் அப்படி என்று, பாராட்டு மழையாகப் பெற்றவர்கள் இருவருமே பொழிந்து கொட்டிக் கொண்டிருந்தார்கள்! இப்போது அவளே வந்து நிற்கிறாளே!

அண்ணன் எதையும் கண்டு கொள்ளாமல் இருந்தது மட்டும்தான், அவளுக்குக் கொஞ்சம் நிம்மதி.

ஆனால், அவனிடம் மேனகை பற்றிய பேச்சையும், அவளால் தொடங்க முடியவில்லை! அந்த விருந்து பற்றிய நினைவுகளினால் அவன் ஒதுங்குகிறானோ என்ற பயம், அவளுக்கு உண்டாயிற்று. அவனுக்கு அந்த நினைவுகள் மங்கி மறைவதாகக் காத்திருக்க வேண்டிய நிலை. அவளுமே, அந்த விருந்து நாள் மேனகையை மறக்க விரும்பினாள்.

அண்ணன் மேல் பேரன்பு வைத்திருந்த அவள், முதலில் இருந்தே, அழகிலும், அன்பிலும், குணத்திலும் சிறந்த ஒரு பெண்தான் தனக்கு அண்ணியாக வர வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தாள். அது மட்டு மல்ல. வர இருக்கும் அண்ணிக்கும் தனக்கும் இடையே நல்லுறவு இருக்க வேண்டும் என்பதும், ஒரு கட்டாய மான விதியாக இருந்தது! நாத்தனார் என்று தன்னை அவள் வெறுத்து விடக்கூடாது என்பது, வெகு வெகு முக்கியம்!

வீட்டில் பணம் எப்போதும் தாராளமாக இருந்ததால், வரப்போகும் அண்ணியிடம் அதை அவள் முக்கியமாகக் கருதவில்லை.

மைத்தி விரும்பித் தேர்ந்தெடுத்த மேனகையின் அழகு, குறை சொல்ல முடியாதது. வெண்ணிறமும், மாசு மருவற்ற சருமமும், வட்ட மதி முகமும்... சுமனசியின் மெல்லிய இடையும், அடர்ந்த நீண்ட கூந்தலும், பெரிய கண்களும் அவளுக்கு இல்லை என்றாலும், மேனகா தான் பேரழகி என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதேபோல, அன்பிலும் சிறந்தவள் என்பதை, சைதன் யன் பற்றித் திருமணப் பேச்சு வருமுன்பே, மேனகா

மைத்திக்குக் கொடுத்த பரிசுகள் பறைசாற்றவில்லையா? அவளாக வந்து பேசியதும், பழகியதும்... அவர்களுக் கிடையில், நாத்தனார்க் காய்ச்சலுக்கு இடம் இருக்க வழி கிடையாது என்பதும் நிச்சயம்!

அவள் குணவதி என்பதைச் சந்தனபுரிக்கு அவள் வர நேர்ந்த காரணங்களும், திருமணம் பற்றிய அவளது கருத்துக்களும், மைத்திக்குத் தெளிவாகத் தெரிவித்தன.

இவையே, மேனகையைத் தன் அண்ணன் மனைவி யாக, மைத்திரேயி தேர்ந்தெடுப்பதற்கு முக்கியமான காரணமாக இருந்தன.

சமீப காலமாக, அவளிடம் ஒரு சில சிறு தவறுகளைக் காண நேர்ந்தபோதும், மைத்தி அவைகளைப் பெரிதாக எண்ணவில்லை. எளிதாக மாற்றி விடலாம். திருமண மாகித் தங்கள் வீட்டுக்கு வந்து விட்டால், தானாகவே மாறிவிடும் என்றுதான் எண்ணினாள்.

மைத்திக்காகப் பொய் சொல்லக் கூடத் துணிகிற அன்பை எப்படி விடுவது?

ஆனால், அந்த மயில் உடை! நல்ல குடும்பப் பெண் கள் இந்த மாதிரியெல்லாம் அணியக்கூடாது என்று, இவளுக்கு ஏன் தெரியவில்லை என்று, மைத்திக்கு வருத்தமாக இருந்தது. என்றாலும், அதையும் திருத்த வேண்டிய பட்டியலில் சேர்த்தாளே தவிர, அவளை அடியோடு விட்டு விடும் எண்ணம், ஒரு முறை கூட அவளுக்கு வரவில்லை!

எப்படியாவது, பெற்றவர்களை விரட்டிப் பிடித்து, அண்ணன் திருமணத்தை விரைவில் நடத்தி, நம் வீட்டுப் பழக்க வழக்கங்களை, மேனகைக்குச் சீக்கிரமாகக்

கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற வேகத்தில் அவள் இருந்தபோதுதான், அவளோடு பேச வேண்டும் என்று, அவள் வீட்டுக்கே, சுமனசி வந்து சேர்ந்தாள். இந்த நிலையில், சுமனசி அவளைத் தேடி வந்தது, சின்ன வளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

என்னவோ, சுமனசி இருக்கும் இடத்தில், மேனகா கீழிறங்கிப் போவது போல ஓர் உணர்வு அவளுக்கு எப்போதும் தோன்றும்.

ஏற்றாற்போல, அவளைக் கவனத்துடன் நோக்கிய வாறே சுமனசி தெரிவித்த சேதி, மைத்திக்குப் பேரதிர்ச் சியைத் தந்தது!

# 12

மேனகாவின் முன் கதையை மைத்திரேயி, லேசில் நம்ப மாட்டாள் என்பது, சுமனசா எதிர்பார்த்து வந்த ஒன்றே.

எனவே, நம்ப முடியாமல், சின்னவள் திகைத்துப் பேச்சற்று விழிக்கும்போதே, அவசரமாக, இதற்கு உரிய சான்று தன்னிடம் இருப்பதையும் சுமனசி கூறி முடித்து விட்டாள்.

என்னதான் திகைத்தபோதும், மைத்தியின் மனதிற்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.

சான்று இருக்கிறதோ, இல்லையோ, ஒரு பெண்ணைப் பற்றி சுமனசி தரம் இறங்கிப் பொய் சொல்ல மாட்டாள்! இது உறுதி!

அவளும் பொய் சொல்லியிருக்கிறாள்தான்! ஆனால் அது வள்ளுவரே அனுமதித்திருக்கும் வகையான பொய்! தன்னலத்துக்காகவோ, நியாயம் தவறியோ சொன்ன தில்லை!

அப்படியானால் இது?

மேனகை ஒரு குணக் குன்று என்ற அவளது எண் ணம், ஏற்கெனவே சற்று ஆட்டம் கண்டிருந்தது, உண் மையே! ஆனாலும் இவ்வளவு மோசமாக ஒன்றை எப்படி நம்புவது?

ஒருவேளை, சுமனசியே ஏமாந்து போய், ஏதோ பொய்யை நிஜம் என்று நம்பியிருக்கலாம், அல்லவா? அப்படியே நம்பினாலும், அதைச் சொல்லவென்று, விழுந்தடித்துக் கொண்டு, இங்கே ஓடி வந்திருக்கிறாளே! அது ஏன்? அதுவும் அவளிடம்!

குழப்பமும் கலக்கமுமாகச் சின்னவள் நோக்கவும், ''நான் சொன்னதற்குச் சான்று இருக்கிறது! மைத்திரேயி, இதைப் பார்!'' என்று ஒரு பத்திரிகையை விரித்துக் காட்டினாள் சுமனசி.

சென்னையில், ஒரு குறிப்பிட்ட பகுதிக்கான பத் திரிகை. சுமார் ஓர் ஆண்டுக்கு, முந்திய தேதியில் வழுவழுப்பான ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அதில், பளபளவென்று மயில் டிசைன் உடையில் மோகனப் புன்னகை காட்டி நிற்க, யாரோ ஒருவன், அவளது விரலில் மோதிரம் அணிவித்த படம் முதலில் இருந்தது. எல்லார் முகங்களிலும், ஒரே புன்னகை மயம்!

கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தாலும், இது ஒன்றும் ரொம்பப் பெரிய விஷயம் இல்லை. திருமணங்கள் நிச்சயம் ஆவதும், கலைவதும், நடக்க முடியாதவையோ, நடக்காதவையோ அல்ல.

ஆனால், பத்திரிகையில் அடுத்த ஒரு படமும் இருந்தது. அதிலும், மையத்தில் நாயகன், நாயகியான மேனகாவும், மோதிரக்காரனுமே! ஆனால், விசுவா மித்திரர், மேனகை கதையைப் பால் மாற்றிப் போட்ட மாதிரி, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவளும், அவளது காலடியில் மோதிரம் போட்ட அந்த மனிதனும்! நிஜமாகவே அவளது இரு கால்களையும் கட்டிப் பிடித் துக் கொண்டிருந்தான், அவன்!

'நடந்தது என்ன?' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட் டதைக் காண, சற்று நேரம் மைத்திக்குத் தலை சுற்றிப் போயிற்று.

''இதையும் எப்படி நம்புவது? இதைப் போல, ஒரே ஒரு பத்திரிகையை அச்சடிப்பது, இன்று முடியாத காரியம் அல்லவே!'' என்று வாதாடினாலும், அவளது குரல், இறங்கிப் போயிருந்தது.

''இதன் உண்மை அறிவது ஒன்றும் இயலாத காரியம் அல்லவே! நீ மறைத்துப் பேசுகிறவள் அல்ல. மேனகா விடம் இதைக் காட்டி, உண்மையா அல்லவா என்று, நேரிலேயே கேட்டு விட்டால், எல்லாம் துலாம்பரமாகத் தெரிந்துவிடப் போகிறது!'' என்று வழி சொன்னாள் சுமனசி.

சுமனசி! இவள் பெயர் சுமனசா. ஏன் சுமனசி என்றே மனதில் தோன்றுகிறது?

ஏனோ தோன்றட்டும். ஆனால், இப்போது பூதாகர மாய் எழுந்திருக்கும் மேனகா விஷயத்தை, முதலில் கவனித்தாக வேண்டும். விஷயத்தைக் கொண்டு வந்தவளும், மனதைப் பாதிக்க, மைத்திரேயி யோசித் தாள்.

சற்று நேரம் தீவிரமாக யோசித்துவிட்டு, சுமனசியைக் கூர்ந்து பார்த்தாள். ''இந்தத் திருமணம் நிற்பதில், உங்களுக்கு என்ன அக்கறை?'' என்று அவளை நேராகப் பார்த்துக் கேட்டாள்.

மறைத்துப் பேசுகிறவள் அல்ல என்றதற்குப் பொட் டில் அறைகிற மாதிரி, அவளிடமே கேட்டு விட்டாள்! இதற்குப் பதில் சொல்லாமல் இருக்க முடியாது. பொய்யும் நடக்காது.

பார்வையைத் தளராமல் நிறுத்தி, ''எங்கள் குடும்பத் துக்குப் பெரிய நன்மை செய்தவர் உன் அண்ணன். அவருக்குக் கெடுதல் நடந்து விடக்கூடாது என்று எனக்கு ஆவல், ஆசை இருக்காதா? நீயும் அவரிடம் அன்பு உள்ளவள். அண்ணன் நன்றாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் இருக்கும் என்ற நம்பிக்கையில் வந்தேன்!'' என்று பதில் உரைத்தாள் மற்றவள்.

வரிகளுக்கு இடையே படிப்பது என்பார்கள். சுமன சிக்கு ஆசை! தனக்குரியது அன்பு!

சில பல நாட்களுக்கு முன்பு என்றால் எப்படியோ? ஆனால், மைத்தியின் மனதிலும், இயற்கையின் மாற்றம் ஏற்பட்டிருந்தது. எனவே சுமனசியின் வார்த்தைகளில் மறைந்திருந்ததைக் கண்டு பிடித்து, ''எப்போதுமே... முதலில் இருந்தே, இதே எண்ணம்தானா? காட்டிக்

கொண்டதே இல்லையே!'' என்று இன்னதென்று பெயர் சொல்லாமல் கேட்டு விட்டாள்.

மற்றவளும், ஆம், இல்லை என்று தெளிவு படுத்தாமலே, ''எட்டாப் பொருளுக்குக் கொட்டாவி விடும் பழக்கமில்லை,'' என்று மட்டும் பதில் தந்தாள்.

''ஆனால் இப்போது?''

''மைத்திரேயி, ப்ளீஸ்!'' என்றாள் சுமனசி, கெஞ்சுதலாக. ''உன் அண்ணன் உளையில் மாட்டிக் கொள்ளாமல் காப்பதுதானே, இப்போது முக்கியம்? தயவு பண்ணி, அதற்கு என்ன செய்வது என்று மட்டும் யோசியேன்!''

''என்ன செய்ய வேண்டும் என்றுதான் ஏற்கெனவே சொல்லி விட்டீர்களே! அதுதான் நேரிலேயே போவது!'' என்றாள் மற்றவள்.

கடவுளிடம் எதையோ வேண்டுவது போல, ஒரு கணம் கண் மூடித் திறந்த சுமனசி, மைத்திரேயியின் அசையாத பார்வையில், முகம் சிவந்து செங்கொழுந்தாகிப் போனாள்.

மேலே எந்தக் கேள்விக்கும் இடம் கொடாமல், சட்டென எழுந்து, ''அப்போது, நான் கிளம்புகிறேன். மைத்தி. சீக்கிரமே, தேவையான நடவடிக்கை எடுப்பாய் என்று நம்புகிறேன்,'' என்றவள், சரசரவென்று அங்கிருந்து வெளியேறிச் சென்றும் விட்டாள்.

சற்று நேரம் அவள் செல்வதை வெறித்துப் பார்த்தபடி நின்றாள் மைத்திரேயி.

ஆக, மேனகைக்கு இவள் போட்டி என்று, அவ்வப்போது தனக்குத் தோன்றியது சரிதான், போலும்!

ஆனால், முதலில் பார்க்க வேண்டியது, இப்போது சுமனசி கொண்டு வந்திருக்கும் பிரச்சினையை!

சற்று யோசித்துவிட்டு, மைத்திரேயி தாயைத் தேடிச் சென்றாள்.

பொதுவாக எங்கேனும் செல்வதாகத் தாயிடம் சொல்லப் போனால் டிரைவரிடம் காரை எடுக்கச் சொல்லி ஆள் அனுப்புவதும், கார் தயார் என்று தகவல் வந்ததும், மகளுக்கு 'பை' சொல்லி வழியனுப்புவதுமே மஞ்சுளாவின் வழக்கம்! மகளின் கெட்டிக்காரத்தனத்திலும், தப்புத் தண்டாவான இடங்களுக்கு அவள் போக மாட்டாள் என்றும், தாய்க்கு அவ்வளவு நம்பிக்கை.

ஆனால் இன்று, ''நீ போகத்தான் வேண்டுமா?'' என்று ஒரு கேள்வி வந்தது.

அவளுக்கு இருந்த மனக்கலக்கத்தில், மைத்திக்கு ஆத்திரம்தான் வந்தது. ''என்னம்மா, நீங்கள்! வெளியே போவதற்காகத்தானே, காரைக் கொண்டு வரச் சொன்னதே! போக வேண்டுமா என்று கேட்டால், என்ன பதில் சொல்வது?'' எரிச்சலாகக் கேட்டாள்.

''அதில்லைடா, வெய்யில் அதிகமாக இருக்கிறதே என்று சொன்னேன். எதற்கும் சீக்கிரமாக வந்துவிடு. கோவிலுக்குப் போகலாம் என்று இருக்கிறேன். போய் வா. பை!'' என்று சமாதானமாகச் சொல்லி முடித்தாள், மஞ்சுளா.

மேனகாவிடம் எப்படிக் கேட்பது என்று, மைத்திக்கு ஒரு கலக்கம் வந்தது.

ஒருவேளை, நூற்றில் ஒரு வாய்ப்பாக, சுமனசி சொன்னது தவறாக இருக்குமானால், அப்புறம் கால

முழுமைக்கும், மேனகா முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாது!

ரொம்ப யோசித்துவிட்டு, ''எனக்கு ஒரு பத்திரிகை கிடைத்தது,'' என்று சொல்லி, பத்திரிகையில் அவளைப் பற்றிய செய்தி இருந்த பக்கத்தை, அவள் முன் விரித்து வைத்தாள், மைத்திரேயி.

முகத்தில் மாறுதலே இல்லாமல், மேனகா பத்திரி கையைப் பார்த்து முடிப்பதைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், மைத்திரேயி!

இதற்கு என்ன அர்த்தம்?

குற்றமற்றவள் என்றால், இப்படி நம்மைக் கேவலப் படுத்தி இருக்கிறார்களே என்ற கலக்கம் கட்டாயம் இருக்குமே! ஒன்றையுமே காணோம் என்றால், இப்படி ஒரு நிலை வரக்கூடும் என்று, முகத்தில் எதையும் காட்டாத விதமாகத் தன்னைத் தயார்ப்படுத்தி வைத்திருக் கிறாளா?

பத்திரிகையைப் படித்து முடித்துவிட்டு, அலுப்புடன் ஒரு பெருமூச்சு விட்டாள், மேனகை.

''அழகாக இருப்பது வேதனை என்று, முன்பு சொன்னேனே, நினைவு இருக்கிறதா? அந்தப் பொல்லாத சென்னையை விட்டு, இவ்வளவு தூரம் வந்தும், இந்தத் தொல்லை, என்னை விடாது போல! ஆனால், இதெல் லாம் பொய், மைத்தி. என் வாழ்வை அழிப்பதற்காகச் செய்யும் சதி! நீ இதை நம்பவில்லைதானே?'' என்று சோகமாகக் கேட்டாள்.

இந்த சோக முகத்தைப் பார்த்துவிட்டு, அந்த முகத் தில் அடித்தாற்போல, இல்லை, அதைத்தான் நம்பு கிறேன் என்று யாரால் சொல்ல முடியும்?

இவ்வளவு மோசமாக ஒருத்தி, அதுவும் அண்ண னுக்கு மனைவியாகப் போகிற ஒருத்தி, எப்படி நடந் திருக்க முடியும் என்ற குழப்பம் ஏற்கெனவே மைத்திக் குள் குடைந்து கொண்டுதான் இருந்தது.

சுமனசியைப் பற்றி அறிந்த புதிய உண்மை, அவ ளையே சந்தேகிக்கவும் வைத்தது.

எந்த நேர்மைத் திருவுருவையும், இந்த நேசம் எதையும் செய்யத் தூண்டும். ஆனால், வெறும் வார்த் தைகள் மட்டுமில்லையே! பத்திரிகையில் வெளியான படம்! அதன் குறிப்புகள்! அதற்கு என்ன விளக்கம்?

''அந்தப் படம் உன்னதுதானே, மேனகா?'' என்று யோசனையோடு விசாரித்தாள்.

அவசரமாக யோசித்து, ''அது ஒரு பெரிய கதை, மைத்தி. சும்மா சொன்னால், உனக்கு நம்பக்கூட இயலாது. இது முழுவதுமே பொய். திட்டமிட்டுச் செய்யப் பட்ட சதி! இதை என்னால் நிரூபிக்க முடியும். ஆனால், அதற்கு, எனக்குக் கொஞ்ச நாட்கள் அவகாசம் வேண் டும்,'' என்றாள் மேனகா. ''தருவாயல்லவா? அல்லது, இந்தச் சதிவலையைப் பின்னியிருப்பவர்களின் விருப்பம் போல, நீயும் என்னை ஒதுக்கி விடுவாயா?'' என்று கேட்டபோது மேனகையின் கண்களில் நீர் நிறைந்து, இரு பெரிய துளிகள் ததும்பி விழுந்து, உடைந்து சிதறின.

உருகிப்போய், ''ஐயோ, என்ன மேனகா, இது?'' என் றாள் மைத்திரேயி. ''ஒரு குறை என்று தெரிய வந் தால், விசாரித்துதானே ஆக வேண்டும்? நீங்கள்தான் நிரூபிப்பதாகச் சொல்லுகிறீர்களே! அப்புறம் என்ன?

எவ்வளவு காலம் ஆனாலும், நான் காத்திருக்கிறேன்!'' என்று மேலும் சற்று நேரம் அவளிடம் தேறுதலாகப் பேசி, அதன் பிறகே, மேனகையை அவளது வீட்டருகே கொண்டு விட்டு விட்டுத் திரும்பிச் சென்றாள்.

தன்னை நிரூபிக்க அவகாசம் கேட்டிருக்கிறாள் என்று, சுமனசிக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, என்ன நடக்குமோ என்ற இறுக்கத்துடன், ஓர் ஆவி போல நடமாடினாள்.

சுமனசி இப்போது, கிடைத்த நேரத்தில் எல்லாம், கோயில்களில் குடியிருந்தாள். தாய்மாமனின் உயிரைக் காப்பாற்றித் தந்த கடவுள், அவளது வாழ்வைக் காப்பாற்ற மாட்டாரா? அதுவும், இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு!

என்னதான் சைதன்யன் கைவிட்டுவிட மாட்டான் என்ற நம்பிக்கை இருந்தாலும், குடும்பத்தினர் அத்தனை பேருக்கும் செல்லமான மைத்திரேயியை அடியோடு ஒதுக்கி, அங்கே ஒன்றும் நடக்காது என்பதும், அவளுக்கு நிச்சயமே!

அத்தோடு தன்னை நிரூபிப்பதாக, மேனகை என்ன தைரியத்தில் சொன்னாள்!

சுமனசா நேரிலேயே சென்று விசாரித்து அறிந்த உண்மைகள், அப்படி நிரூபிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தெளிவுறுத்தின.

அப்படியானால், மொத்தக் குடும்பத்தையும் ஏமாற்றிக் கைக்குள் கொண்டு வர, அவள் ஏதோ ஒரு வழி வைத்திருக்கிறாள்.

என்ன அது? ஏதோ நடக்கப் போவதாக அவளது மனதுள் குறுகுறுத்தது! அச்சக் குறுகுறுப்பு! இந்த மேனகா என்ன செய்யப் போகிறாள்?

அது என்னவாக இருந்தாலும், அவளது மோசடி வென்று விடாமல் காப்பாற்றும் வல்லமையைத் தா கடவுளே என்று, தினம் தினம் வேண்டிக் கொண்டாள்.

சனிக்கிழமைகளில், சுமனசாவின் வீட்டருகே உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் கூட்டம் அதிகம் இருக்கும். இங்குள்ள அர்ச்சகருடைய உறவினர் ஒரு பெரியவர், அவ்வப்போது வந்து உதவி செய்வார். இன்றும் அப்படி வந்தவர், சுமனசாவைப் பார்த்ததும், ''என்னம்மா, உன் மாமாவுடைய முதலாளி வீட்டில், அப்பா பிள்ளைக்குள் ஏதும் பிரச்சினையா? ஊர் மெச்சத் திருமணம் செய்வார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்தால், யாரோ போலக் கோயிலில் எளிமையாகக் கல்யாண ஏற்பாடு செய்கிறார்களே!'' என்று கேட்டு, அவளை அதிர வைத்தார்!

என்ன இது?

சைதன்யன் வீட்டாரை... முக்கியமாக மைத்திரேயியை, மேனகா எப்படியோ தன்னை நம்ப வைத்து விட்டாளா? இந்த சுமனசா ஏதாவது இடையூறு செய்வாளோ என்று, இப்படி ரகசியமாகக் கல்யாணத்தை முடித்துவிட ஏற்பாடு நடக்கிறதா?

இல்லை. இராது! சைதன்யன் இதற்கு ஒரு போதும் ஒப்ப மாட்டான். இந்தக் குடும்பமே நேர்மை வழிச் செல்வது! இது போல, ஒளிவு மறைவுத் திருமணத்தை

அங்கே யாருமே நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள்.

முக்கியமாக மைத்திரேயி! என்னதான் மேனகையிடம் மயக்கம் என்றாலும், அவளோடும் இந்த ஒளிவு மறைவை நினைத்துப் பார்க்க, சுமனசியால் முடியவில்லை!

ஏதோ ஓர் அதிசயமாக, யாரோ ஒரு மணமகனின் பெயர். சைதன்யனாக இருந்ததால், அர்ச்சகர் இப்படி எண்ணி விட்டார் போல!

ஆனாலும் உறுத்த, ''பெண்ணின் பெயர் என்ன, அங்கிள்?'' என்று விசாரித்தாள்.

''மேனகை. நம்ம மேஜருடைய பேத்தி!'' என்ற அவரது பதில், அவள் தலையில் நெருப்பை வாரிக் கொட்டியது.

அப்போதும், சுமனசாவின் மனது அதை ஒத்துக் கொள்ள மறுத்தது!

இவர் சற்று வயதானவர். பார்வை சரியாக இருக்கிறதோ, என்னவோ? ஏதோ பார்த்து, என்னவோ ஊகித்திருக்கலாமே!

பெரியவர் பணி புரிந்து வரும் கோயில் அவளுக்குத் தெரியும். சந்தனபுரி தொடங்கும் இடத்திலேயே சற்றுப் பெரிய கோயில். திருமணம் நடத்திப் பதிவும் செய்வார்கள். அதனால், முன்னறிவிப்பும் செய்தாக வேண்டும்.

அன்றைக்கு வேலைக்கு விடுப்புச் சொல்லிவிட்டு, அந்தக் கோயிலுக்கு ஓடினாள்.

அங்கே சந்தேகத்துக்கே இடமின்றி, தந்தை பெயர், முகவரியோடு சைதன்யனின் பெயர் தெளிவாக எழுதப்

பட்டிருந்தது. அதே போல, மேனகை மாணிக்க ராஜனின் பெயரும்! அன்றைக்கு மூன்றாம் நாள் திருமணம்.

தட்டாமாலை சுற்றிய சித்தத்தைத் தெளிவுபடுத்த முயன்றபடி, அங்கே அமர்ந்திருந்த கோயில் அலுவலரிடம், சுமனசா சில விவரம் கேட்டாள்.

''கல்யாணப் பெண்தான் எல்லாம் செய்தது. மாப் பிள்ளை வீடு தொழிலில் 'பிசி' என்பதால், இவர்களிடமே பொறுப்பைக் கொடுத்து விட்டார்களாம்! நம்ம மேஜரோட பேத்தியில்லையா? அதனாலே, உடனே ஏற்றுக் கொண்டோம்!''

மரியாதைக்குரிய மேஜர்! அவர் பெயரை வைத்துக் கொண்டு, என்ன தைரியமாக விளையாடுகிறாள்! இதைக் கடைசிவரை கொண்டு செலுத்த முடியும் என்று, இந்த மேனகை எப்படி நினைத்தாள்? சைதன்யன் தாலி கட்ட வேண்டாமா? நடக்காத விஷயம்!

ஆனால்... இதை அவ்வளவு அலட்சியமாக ஒதுக்க முடியாதோ என்றும், சுமனசிக்குத் தோன்றியது.

மேனகையும், இதையெல்லாம் யோசித்துதானே இருப்பாள்? அப்படியும். இந்த வேலை செய்திருக்கிறாள் என்றால், அவள் எண்ணியவாறு சைதன்யனைச் செய்ய வைக்கும் ஏதோ பிடிதரம் அவளிடம் இருக்கிறது! அது என்ன?

தொழிலிலோ, வாழ்விலோ, தப்பு தவறுகள் செய்து உயர்ந்ததாக, சைதன்யன் குடும்பத்தை யாரும் சொன்ன தில்லை! அப்படி எந்தவித 'பிளாக்மெயிலு'ம் பண்ண வழியில்லை. பின்னே?

சைதன்யனோடு தொடர்பு கொண்டு, இது பற்றிப் பேசலாம் என்று செல்லை எடுத்த சுமனசி சற்றுத் தயங்கினாள்.

எதையும் மைத்திரேயி மூலமாகச் செய்யச் சொன்னானே!

மைத்தியின் செல்லைத் தொடர்பு கொள்ள முயன்றால், 'இந்த எண் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருக்கிறது' என்றே திரும்பத் திரும்பக் குரல் வந்தது.

சில முயற்சிகளுக்குப் பின், திடுமென வயிறு கலங்கியது அவளுக்கு.

மைத்திரேயி! அவள் எங்கே? அவள்தான் பிடிதரமோ?

நிரூபணத்துக்காக, எவ்வளவு காலமும் காத்திருப்பதாக மைத்திரேயி அன்று சொன்ன வார்த்தைகளில், மேனகா கொதிநிலைக்குப் போயிருந்தாள்.

ஓர் உலகப் பேரழகி! அவளது வாய் வார்த்தை இந்த மகாராணிக்குப் போதாதாமா? ஒருமுறை, அதை அப்படியே நம்பித்தானே, திருமணப் பேச்சுவரை கொண்டு போனாள்?

அந்த அழகு அப்படியே இருக்கும்போது, இடையில் என்ன வக்கரிப்பு!

அந்த மயில் டிசைன் உடையை, இங்கே அணிந்தது தப்போ என்று, அன்றைக்கே மேனகைக்குத் தோன்றி விட்டது. அந்தச் சென்னைக் கிறுக்கனைப் போல, இந்த சந்தனபுரி ஹீரோ, அந்த உடையில் அவளைக் கண்டு, கிறுகிறுத்துப் போய்க் காலடியில் விழவில்லை என்ப

தோடு, சமயத்தில் தப்பான அடையாளத்தையும் காட்டிக் கொடுத்து விட்டது! இதைச் சமாளிக்க அவளுக்கு அவகாசம் தேவை! துணையும் தேவை!

அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டு, வீட்டுக்குள் ஓடிப்போய், அவளைப் பெற்ற தாயுடன் தொடர்பு கொண்டு பேசினாள்.

சில தினங்களுக்கு முன்பாக, இருவரும் கிராமத்து வீட்டில் ஒரு வாரம் சேர்ந்து இருந்தனர்.

அப்போது, இங்குள்ள நிலவரம் பற்றி மகள் சொன்ன போது, இருவருமாகச் சில பல திட்டங்களை யோசிக் கவும் செய்தனர்.

முரட்டடியாக எதையேனும் செய்து விட்டாலும், உனக்காகத்தான், உன் மேல் உள் ஆசையால்தான் செய்தேன் என்று, உரிய விதமாக மேலே விழுந்து, கண்ணீர் விட்டுக் கதறினால், எந்த ஆண் மகனும் மசிந்து விடுவான் என்பது, மேனகையுடைய தாயார் அறிந்து வைத்திருந்த சூத்திரம்!

எனவே, எந்த மாதிரியான திட்டங்களைத் தீட்டவும், அவர்கள் இருவரும் அஞ்சவில்லை! அவற்றுள் ஒன்றை உடனடியாக அமல்படுத்த வேண்டிய தருணம் வந்து விட்டதாகவே, இப்போது இரு பெண்களுக்கும் தோன் றியது.

அதற்குத் தக்கவாறு, தாயும் மகளும் செயலாற்றத் தொடங்கினர்.

அதன்படி, ஒரு குறிப்பிட்ட நாளில், தேவையான ருசுக்கள் தனக்குக் கிடைத்து விட்டதாகவும், நேரில்

வந்து பார்த்து, உண்மை அறிந்து கொள்ளும்படியும், மைத்திக்கு, மேனகா போன் செய்தாள்!

மைத்திரேயிக்கு ஒரே அதிர்ச்சி! கூடவே, சோகமா, சந்தோஷமா என்று சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி!

மேனகா தன்னை நிரூபித்து விட்டால், அப்புறம் அவளை மறுக்க முடியாது. குற்றம் குறைகள் இருந்தாலும், ஒரு பேரழகி அண்ணனுக்கு மனைவி ஆவாள் என்று சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

அதே சமயம், சுமனசி போல நகைச்சுவை உணர்வோடு, திறமையும் உள்ள ஒரு நல்ல பெண்ணின் உறவு, இனி எட்டாக் கனிதான். 'எட்டாக் கனி' பற்றி, சுமனசி சொன்னதை நினைத்து, அவளது மனம் கனிந்து உருகியது.

பாவம்தான். ஆனால் ஒரு போட்டி என்று வந்து விட்டால் ஒருவர்தானே ஜெயிக்க முடியும்? தோற்றவர் மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்!

மனதுக்குள் சுமனசிக்கு ஆறுதல் கூறியவாறு கிளம்பிய போதுதான் அவளிடம் தனக்கு இவ்வளவு பற்று ஏற்பட்டிருக்கிறது என்பதே மைத்திரேயிக்குப் புரிந்தது. ஆனால், இனிமேல் புரிந்து என்ன பயன்?

ஒரு பெருமூச்சுடன், மேனகையைச் சந்திப்பதற்காகக் கிளம்பிப் போனாள், அவள்.

அதுதான், அவளைக் கடைசியாக அவளுடைய குடும்பத்தினர் பார்த்தது! அப்புறம் மைத்திரேயி காணாமல் போனாள்.

அவளைக் காரிலே அழைத்துப் போன தாமஸ் தலையில் அடிபட்டு ஊருக்கு வெளியே கிடந்தார்.

காரும் ஒதுக்குப் புறமாக எங்கோ நின்றது!

இவையெல்லாம் அறியப்பட்டதே, சுமனசி, மைத்திரேயியைத் தொடர்பு கொள்ளத் தீவிரமாக முயன்ற பிறகு தான்!

## 13

மைத்திரேயியை செல்லில் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று ஆனதும், சுமனசா ரொம்பவே கலங்கிப் போனாள். சின்னவள் ஒன்றும் செல்லை ஸ்விட்ச் ஆஃப் செய்து போட்டு வைக்கிற ரகமாக, அவளுக்குத் தெரியவில்லை.

அவளுக்கு ஏதோ ஆபத்தோ என்று முதலில் பதறினாலும், அந்தப் பதற்றம் உடனேயே தெளிந்து விட்டது.

தாமஸ் தாத்தா கவனமான காரோட்டி. எங்கே செல்வதானாலும் மைத்திக்கு அவர்தான் கார் ஓட்டுவார். அதனால், விபத்து போல எதற்கும் வாய்ப்பில்லை!

ஆனால்... ஏதோ ஒரு விதத்தில், மைத்தியைத் தன் பிடியில் வைத்துக் கொண்டு, அவள் மூலமாகத் தன் எண்ணத்தை - திருமணத்தை நடத்திக் கொள்ளலாம் என்று மேனகா திட்டமிட்டிருப்பாளா?

பிணைக் கைதியாக?

மிக அதீதமான கற்பனையே! முதலில், அவளைப் பிணைக் கைதியாகப் பிடிப்பது எப்படி? அசட்டு யோசனை!

ஆனால், ஏதோ ஒரு வகையில், மைத்திரேயிக்கும், இந்தத் திருமண ஏற்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்ற எண்ணத்தைச் சுமனசாவால் விட முடியவில்லை!

இப்படியும் ஒருத்தி செய்வாளா என்று இருந்தாலும், மற்றப்படி, மேனகா தன்னிச்சையாகத் திருமண ஏற்பாடு களைச் செய்யத் துணிகிறாள் என்றால், அவளது கைவசம், ஏதோ ஆயுதம் இருந்தேதான் தீர வேண்டும்! அந்த ஆயுதம் மைத்திதான் என்றே, சுமனசிக்குத் தோன்றியது.

எதைச் செய்யவும், அதற்குரிய திண்ணக்கம் அவளுக்கு உண்டு என்பதைச் சென்னையில் சுமனசா விசாரித்து, உண்மையே என்று அறிந்த அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

மற்றப்படி, திருமண நிச்சயத்தன்றே சொத்தைத் தன் பெயருக்கு மாற்றுவதற்கான பத்திரத்தை நீட்டிக் கையெழுத்துக் கேட்பதும், சகலமும் அவன் தந்தை பெயரில் இருந்தது என்பதோடு, அவர் சொத்தைத் தருவதற்குச் சம்மதிப்பதாக இல்லை என்று ஆனதும், திருமணத்தையே முறித்து, மோதிரம் போட்டவனைப் பைத்தியமாக அலைய விடுவதும் யாரால் முடியும்?

எத்தனையோ 'கவுன்சிலிங்' செய்து, இப்போதுதான் அந்த மனிதன் சற்று இயல்புக்குத் திரும்பியிருப்பது

வரை, விசாரித்து அறிந்து கொண்ட பிறகுதானே, சென்னை யில் இருந்து சுமனசி திரும்பி வந்ததே!

ஆனால், மேனகா எதிர்பாராதது, பத்திரிகையில் செய்தி வந்து, எல்லோரும் அவளைக் கைகாட்டிப் பேசத் தொடங்கியதை! 'ஆ' என்று அழகைப் பார்த்தவர்கள், இப்போது 'சீ' என்று காறி உமிழ்ந்தார்கள்! வெளியே தலை காட்ட முடியாமல் போனது. அதற்காகத்தான். அந்தக் கதை பற்றிச் சற்றும் அறியாத இடமாக இந்த சந்தனபுரி யில், எத்தனையோ ஆண்டுகளாக எட்டிப் பார்த்திராத அவளுடைய தந்தை வழித் தாத்தா பரசுராமனின் வீட் டிற்கு வந்து, அவரது விருப்பப்படி, அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டிருக்க வேண்டும்!

இங்கேயே ஒரு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது கூட, மேனகையின் முக்கியத் திட்டமாக இருந்திருக்கலாம்.

குணா அண்ணன் மட்டும் வந்திருக்காவிட்டால். அது நடந்தும் இருக்கலாம்!

ஆனால், இப்போது என்ன நடக்கப் போகிறது? மைத் தியைத் துருப்புச் சீட்டாகக் கொண்டு, எண்ணியதை மேனகா சாதித்தே விடுவாளா? அப்புறம்...

சே! என்று தலையை உலுக்கிக் கொண்டாள் சுமனசி.

இப்படிக் கண்டதையும் நினைத்து மனதைக் குழப்பு கிற நேரம் இதுவல்ல. தெளிவாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய தருணம்.

இந்த நேரத்தில், மைத்தி, செல்லை நிறுத்தி வைத்து விட்டு, ஒரு தலைவலி மாத்திரையில் தூங்கிக் கொண்டு

கூட இருக்கலாம். அவள் பத்திரமாக இருப்பதையும், சைதன்யன் வீட்டில் மற்றவர்களின் பாதுகாப்பையும், முதலில் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அதன் பின், இந்தத் திருமண அறிவிப்பை என்ன செய்வது என்று பார்க்கலாம்.

சற்று யோசித்துவிட்டு, சைதன்யனின் வீட்டுக்கு, சுமனசா போன் செய்தாள்.

முதலில் எடுத்துப் பேசிய தேவகி ஆன்ட்டி, சுமனசாவின் பெயரைக் கேட்டதுமே, மஞ்சுளாவிடம் டெலிபோனைக் கொடுத்தாள்.

''மைத்தியிடம் ஒன்று கேட்க வேண்டும். வீட்டில்...'' என்று அவள் தொடங்கும்போதே, ''மைத்தி வெளியே போய் ரொம்ப நேரம் ஆகிறதேம்மா. அனேகமாகத் திரும்பி வந்து கொண்டு இருப்பாள் என்று நினைக்கிறேன். அவள் செல்லுக்குப் போட்டுப் பார்த்தாயா?'' என்று அன்பான குரலில் வினவினாள் அந்தத் தாய்.

''நா...ன் நான் பார்த்துக் கொள்கிறேன், ஆன்ட்டி. ஆனால்... எங்கே போயிருப்பாள் என்று... பக்கத்தில் என்றால், நானே போய்க் கொள்ளுவேன்...''

''அந்த மேனகை ஏதோ கூப்பிட்டாள் என்று போனாள்மா. அங்கிருந்து வேறே எங்கேயும்...''

சின்னவளின் வயிற்றில் புளியைக் கரைப்பதை அறியாமல், அந்த அம்மாள் சொல்லிக் கொண்டே போக, இடையிட்டு, ''மைத்தி வந்தால் வீட்டில் இருக்கச் சொல்லுங்கள், ஆன்ட்டி. செல்லில் சார்ஜ் இல்லை. வைக்கிறேன்,'' என்று செல்லை அணைத்தாள் சுமனசா.

அதிகரித்த நெஞ்சுத் துடிப்பை அடக்க முயன்றபடி, சைதன்யனை அழைத்தாள். ''நம் ஊர்ப் பெரிய கோயிலில் இருக்கிறேன். உடனே இங்கே வர முடியுமா? த... தயவு பண்ணி விரைவாக வாருங்கள்,'' என்றாள் குரல் நடுங்க.

அவனும் விரைவிலேயே வந்து விட்டான்!

''என்னம்மா, என்ன? சத்தம் ஒரு மாதிரி இருந்ததே!'' என்று நெருங்கியவனிடம் உதட்டின் மேல் விரல் வைத்துக் காட்டினாள் சுமனசி.

ஒரு பெரிய மூச்சை எடுத்து, ''இங்கே எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம். அந்தப் பெயர் அறிவிப்பு போர்டை மட்டும் பார்த்துவிட்டு, உடனே வந்து விடுங்கள்,'' என்றாள்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் திரும்பி வந்து, ''என்னை என்ன நினைத்துக் கொண்டாள். அந்தத் திமிர் பிடித்தவள்! அவளை உண்டு இல்லை என்று ஆக்கி விடுகிறேன்!'' என்று அடிக் குரலில் சீறினான் சைதன்யன்.

ஒரு மாதிரி ஆறுதலாகச் சுமனசி உணர்ந்தபோதும், அது நிலைக்கவில்லை.

''அடக்கிக் கொள்ளுங்கள், சது. இது ஆத்திரப்படும் நேரம் அல்ல. உடனே, நாம் உங்கள் வீட்டுக்குப் போக வேண்டும். என்... என் சந்தேகம் சரி என்றால்... முதலில் மைத்தி இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். செல் எடுக்கவில்லை,'' என்று வேகமாகப் பேசினாள்.

காரில் ஏறப்போன சைதன்யன், திகைப்புடன் அவளைப் பார்த்தான் ''செல் எடுக்காமல்? யார், என்ன தேவையில் கூப்பிடுவார்களோ என்று, எப்போதும் 'ஆனி'ல் வைத் திருப்பாளே!'' என்றவன் அவசரமாகத் தாமஸ் தாத்தா வின் செல்லோடு தொடர்பு கொள்ள முயன்றான்.

அதிலும் பதிலில்லை எனவும், ஏதோ விபரீதம் என்று தோன்ற, இருவரும் சைதன்யனின் வீட்டுக்கு விரைந் தனர்.

அதற்குள் சைதன்யன் தந்தையையும் வரச் சொல்லி யிருந்தான்.

மைத்தி சென்றிருக்கக்கூடிய சில இடங்களில், நம்பிக்கையின்றியே விசாரித்துப் பார்த்துச் சோர்ந்தார்கள்.

''ஏதேனும் விபத்தாக இருக்குமோ?'' என்று நடுங்கி னாள் மஞ்சுளா.

தாயின் கையைப் பற்றி, ''இராதும்மா, கார் விஷய மாகக் கெடுதலாக என்ன என்றாலும், இதற்குள் நமக்குத் தகவல் வந்திருக்கும். இது அப்படியில்லை!'' என்று கோயிலில் கண்ட திருமண அறிவிப்பு பற்றி, சைதன் யன் எடுத்துச் சொன்னான்.

''என்ன திண்ணக்கம்! சரியான பிசாசு! இவளைப் போய், உனக்கு மணமுடிக்க நினைத்தோமே!'' என்றாள் மஞ்சுளா. ''ஆனால் இப்போது மைத்தி, அவளைப் பார்க்கத்தானே... யம்மாடீ! என் செல்லத்தை அந்த ராட்சசி என்னமும் செய்து விட்டாளாடா?'' என்று அஞ்சிக் கலங்கினாள்.

''சுமனசியின் சந்தேகம் வேறே. உன்னைப் பார்க்க வந்தாளே, இன்னும் வரவில்லை என்று, ஒன்றும்

தெரியாதது போல அவளிடம் கேட்டுப் பாருங்களேன்மா,'' என்றான் சைதன்யன்.

''நானா?'' என்று பெற்றவள் மிரண்டு விழிக்க, ''சுற்றி வளைப்பானேன்? நீங்களே கேளுங்கள், சது. அவளது திட்டம்தான் என்ன என்று சீக்கிரமே தெரிந்து கொள் வோமே,'' என்றாள் சுமனசி.

''அதுவும் சரிதான்,'' என்று மேனகாவுடன் பேசினான், சைதன்யன். ''யோசித்துச் சொல்லுகிறேன்.'' செல்லை அணைத்தவன் முகத்தில் கவலை கப்பியிருந்தது.

''சுமனியின் சந்தேகம் சரிதான்! அவளிடம் மைத்தி பத்திரமாக இருக்கிறாளாம். நாளன்று கல்யாணம் முடிந் ததும், திருப்பி அனுப்புவாளாம். இடையில், போலீஸ், அது இது என்று ஏதேனும் தில்லு முல்லு செய்தால்... அப்புறம் வழக்கமான வசனம்தான் அம்மா. மைத்தியை நல்லபடியாகப் பார்க்க முடியாதாம்! ஹூம்! தில்லு முல்லாம். தில்லு முல்லைப் பற்றி யார் பேசுவது என்று பாருங்கள்!'' என்று ஆத்திரப்பட்டான் அவன்.

''பொறுமையாக இரப்பா!'' என்று அமைதிப்படுத்த முயன்றார் தந்தை. ''நாம் வேண்டுமானால், நம் ஆட் களைக் கொண்டு ஏதாவது செய்வோமா?''

''வேண்டாம் அங்கிள்,'' என்றாள் சுமனசி. ''மைத்தியை எங்கே வைத்திருக்கிறாள் என்பது பற்றி, நமக்கு எதுவும் தெரியாது. ஆனால் உங்கள் ஆட்களைப் பற்றி, அவளுக் குத் தெரிந்து விட்டால், அது மைத்திக்கு அல்லவா ஆபத்தாகக் கூடும்!'' என்று எச்சரித்தாள்.

''பின்னே? அவள் விருப்பத்துக்கு ஆடச் சொல்கிறாயா? அவள் கழுத்திலே கோயிலில் தாலியையும் கட்டி விடவா?'' என்று ஆத்திரப்பட்டான் சைதன்யன்.

''மைத்தியை நல்லபடியாக மீட்க வேறு வழியில்லை என்றால், அதையும் செய்துதானே ஆக வேண்டும்?'' என்றாள் சுமனசி எங்கோ பார்த்தபடி.

''உளறாதே! இந்து திருமணச் சட்டம் தெரியுமா, உனக்கு? ஒரு வருஷம் அந்த ராட்சசியிடம் இருந்து விடுதலை கிடைக்காது. அதற்குள், நம்மை உறிஞ்சித் தீர்த்து விடுவாள். விடுதலை கிடைத்தாலும், பணம், தொழில், சொத்து! பங்கு கொடுத்தே எல்லாம் நாசமாகி விடும். அதைவிட, அவளைப் பிடித்து, மைத்தியை உடனே வரவழைக்கவில்லை என்றால், உன்னைக் கொன்று விடுவேன் என்று மிரட்டுவது மேல் என்பது, என் அபிப்பிராயம். எல்லோரும் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று எரிச்சலாகக் கேட்டான், அவன்.

பெற்றவர்கள் அச்சமும், கவலையுமாக யோசிக்க, சுமனசி வேறு சொன்னாள்.

''இந்த மாதிரி நிலைமையை, மேனகா எதிர்பார்த்திருக்க மாட்டாள் என்றா நினைக்கிறீர்கள்? உங்கள் மறுப்பை உணர்ந்துதானே, அவள் இந்த முயற்சி செய்வதே! எனக்கு வேறு ஒன்று தோன்றுகிறது! மேஜர் சார்! மேனகா எப்படிப் பட்டவளாகவும் இருக்கட்டும்! ஆனால், மேஜர் அப்பழுக்கற்றவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! எனவே, அவருக்குப் பேத்தியின் இந்த பிளாக் மெயில் வேலை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நீங்கள்,

அவளிடம் வாதாடுவது போல, பேரம் பேசுவது போல, ஏதாவது பேசிக் கொண்டிருங்கள். அவளுக்குத் தெரியாமல், நான் மேஜரைப் பார்த்து முறையிடுகிறேன். அவர் பல போர்க்களையே கண்டவர். இந்தச் சிக்கலை அவர் நல்லபடியாகத் தீர்ப்பார் என்று எனக்கு... நான் நம்புகிறேன்,'' என்றாள்.

''ஆனால், அப்படி ஏதேனும் முயன்றால், அது மைத்தியை... மைத்திக்கு ஆபத்தாகி விடாதா, சுமிம்மா?'' என்று அச்சத்துடன் வினவினாள் மஞ்சுளா.

''இல்லை, ஆன்ட்டி. நாமாக ஏதாவது செய்தால் தானே அப்படி! அவளுடைய தாத்தாவே, தானாக ஒன்று செய்தால்? இந்தக் கோயில் திருமண விஷயம் அவருக்குத் தெரியாது என்பது நிச்சயம். அவருக்கு எல்லாம் முறைப்படி நடக்க வேண்டும்! அப்படியே ஏதாவது காரணமாகக் கோயிலிலேயே திருமணத்தை நடத்துவது என்றாலும், பெயர் கொடுக்கிற வேலையெல்லாம் அவரே போய்ச் செய்திருப்பாரே தவிர, கல்யாணப் பெண்ணான பேத்தியைச் செய்ய விட்டிருக்க மாட்டார். அதனால், நான் அவரிடம் பேசுகிறேன், ஆன்ட்டி. மைத்தி நல்லபடி கிடைப்பதோடு, இந்தக் கட்டாயத் திருமணமும் தடுக்கப்படுமானால், சந்தோஷப் படுவோம். ஆனால்...'' என்று சைதன்யனை விழி விரியப் பார்த்தாள் சுமனசி. ''ஆனால், ஒருவேளை அவரும் பேத்திப் பாசத்தில் மேனகைக்கு ஆதரவு கொடுத்தால், நீங்கள் அவளை மணக்கத்தான் வேண்டியிருக்கும்,'' என்றாள் உணர்ச்சி துடைத்த குரலில்.

அந்தக் குரலில் பின்னே இருந்த வேதனை புரிய, ''என் கண்ணே!'' என்று சுமனசியை அணைத்துக் கொண்டு விசும்பினாள் மஞ்சுளா.

சிறு அமைதியின் பின், ''வேறு வழி எதுவும் இல்லை! சுமி சொல்வது போலச் செய்து பார்ப்போம்,'' என்றார் தந்தை.

மகனும் தலையாட்டவும், ''மேஜர் காலையில் ஆறு மணிக்குப் பூங்காவுக்கு 'வாக்கிங்' வருவார். பத்துச் சுற்றுச் சுற்றிவிட்டு, அரை மணி நேரம் உட்கார்ந்து, பத்திரிகை படிப்பார். மாலையில் கிளப்புக்குப் போவார். ஆனால், அது பலரும் பார்க்கக் கூடியதாக இருக்கும். அப்புறம், லைப்ரரிக்குப் போவதுண்டு,'' என்று மேஜர் பரசுராம னின் பழக்க வழக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தார், பெற்றவர்.

மறுநாள் காலை ஆறு மணிக்குப் பூங்காவில் மேஜ ரோடு சேர்ந்து, சுமனசியும் நடைப் பயிற்சியில் ஈடு பட்டாள்.

அதன் பலன், அவர்கள் யாருமே எதிர்பாராத அளவில் இருந்தது.

''என் பேத்தி பற்றி எனக்குச் சிறு சிறு சந்தேகங்கள் இருந்தன. என்றாலும், இந்த அளவுக்கு இல்லை. ஆனால் அவளுடைய தாயாரைப் பற்றி எனக்குத் தெரியும் என்ப தால், நீ சொன்னது அனைத்தையும் நம்புகிறேன். இனி நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,'' என்று சுமனசியிடம் கூறிவிட்டு, நேராகக் கோயிலுக்குப் போனார்.

''ஒரு சின்னப் பெண் வந்து, ஏதோ இரண்டு பெயர் களைக் கொடுத்தால், என்ன ஏது என்று விசாரிக்காமல், கல்யாணத்துக்கு எழுதி வைத்துக் கொள்வீர்களா? பெரியவர்கள் நாங்கள் செத்தா போனோம்?'' என்று அதட்டி, மேனகா, சைதன்யன் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்கச் செய்தார்.

சொத்துப் பிரிப்பது பற்றிப் பேச வேண்டும் என்று, மகனையும், மருமகளையும் வரவழைத்தார்.

மருமகள் கிராமத்து வீட்டில் இருந்து வந்தாள் என்றதும், அவருக்குப் புரிந்து போயிற்று. துப்பாக்கி யோடு சென்று, கிராமத்து வீட்டில் சிறை வைக்கப் பட்டிருந்த மைத்திரேயியை மீட்டு வந்து, அவள் வீட்டில் ஒப்படைத்தார்.

மகனை அழைத்து, ''பெண்டாட்டி அழகாக இருந் தால், பெருமையாகத்தான் இருக்கும். ஆனால் அதற் காக, அவள் காலடியிலேயே விழுந்து கிடக்க வேண்டும் என்பது இல்லை. நீ சென்னையில் தொழில் நடத்திய லட்சணமும், அதற்காக நான் அவ்வப்போது பணம் அனுப்புவதும் போதும். மனைவி, மகளோடு கிராமத் துக்குப் போய் விவசாயத்தைக் கவனி. நான் சொல்லும் போது திரும்பி வந்தால் போதும்,'' என்று அதட்டி அனுப்பி வைத்தார்.

மேனகையையும் சேர்த்துதான்.

''உன்னை இங்கே இருக்கட்டும் என்று கூட்டி வந்து விட்டபோது -

''கொஞ்சம் சந்தேகம்தான். ஆனால், பேத்தி பாசத்தில் சம்மதித்தேன். இப்போது நீ செய்த தப்புக்கு. அவர்கள் காவல் துறையை அணுகியிருந்தால், மறுபடியும் பத்திரிகைகளில் பெயர் நாறுவதோடு, சிறைக்கும் போயிருப்பாய். கொஞ்ச காலம் பொறுமையாக இரு. நல்ல இடம் பார்த்து நானே திருமணம் செய்து வைக்கிறேன்,'' என்று கூற, வேறு வழியின்றி, மூவரும் கிராம வாசம் செய்யப் போனார்கள்.

அணைத்துக் கொண்டு அழுத தாயைத் தேற்றி விட்டுத் தன்னைக் கடத்திய கதையை, மைத்திரேயி சொன்னாள்.

''அங்கே இங்கே என்று அலைய வைத்து, ஊருக்கு வெளியே தனியிடத்துக்கு வர வைத்தபோது, இவளிடம் எந்த நிரூபணமும் இல்லை. யாரும் அறியாமல் காலில் விழ எண்ணுகிறாள் என்று நினைத்தேன். ஆனால், தாமஸ் தாத்தாவை அடித்துப் போட்டு, இரண்டு பேரின் செல்லையும் பிடுங்கி... இவளைப் போய், அண்ணனுக்கு மனைவியாக்க நினைத்தேனே என்று, ரொம்பக் குன்றிப் போனேன். என்னைக் காட்டி என்ன பிளாக்மெயில் பண்ணுகிறாளோ என்று, அது வேறு வேதனை! மேனகையுடைய அம்மாதான் காவல்! அந்த முகத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. வயது வித்தியாசம் தவிர, இரண்டு மூஞ்சிகளும் ஒன்றுதான்! ஆனால் நீளத் துப்பாக்கியோடு மேஜர் வரவும், நடு நடுங்கியதைப் பார்க்க வேண்டுமே!'' என்று சிரித்தாள்.

இங்கே நடந்த கதையெல்லாம், எல்லோருமாக மைத்தியிடம் சொல்ல "அண்ணி!" என்று சுமனசியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் அவள்.

அவளது தோளிலேயே சாய்ந்து கொண்டு, "முதலில் இருந்தே, குடும்பத்துக்குள் ஒருவரை அழைக்கிற மாதிரி, உங்களை சுமனசி என்றுதான் நினைக்கவே தோன்றும். என்ன என்ன என்று யோசிப்பேன்! இது அப்போதே எனக்குப் புரிந்திருந்தால், இத்தனை பிரச்சினைகள் நேர்ந்திராது!" என்றாள் மைத்ரேயி.

தாமசுக்குப் பெரிதாக ஒன்றுமில்லை என்று மருத்துவ மனையில் இருந்து தகவல் வர, அதுவும் நிம்மதியா யிற்று.

ஆனால், எல்லாவற்றுக்கும் பிள்ளையார் சுழி போட்டது குணசீலன்தான் என்று, அவன் செய்த உதவி பற்றிப் பேச்சு வந்தது. குணசீலனுக்குப் பெரிதாகச் செய்ய வேண் டும் என்று பெரியவர்கள் கூறினார்கள்.

"அவனுக்குச் சரியான கைம்மாறு செய்ய வேண்டும். சொத்தில் பாதியைக் கொடுத்து விடலாமா? என்னம்மா, நீ என்ன சொல்கிறாய்?" என்று கிண்டல் குரலில் தங்கையிடம் கேட்டான் சைதன்யன்.

"போங்கண்ணா!' என்று சிணுங்கினாலும், "அவர் ஒன்றும் அப்படிச் சும்மா வாங்கிக் கொள்ள மாட்டார். தானே ஒரு நிலைக்கு வந்த பிறகுதான்..." என்றவள், சட்டென முகம் சிவந்து நிறுத்தினாள்.

பெரியவர்கள் சிரித்தவாறே எழுந்து செல்ல, சைதன் யன் தங்கையிடம், "எல்லாம் சரிம்மா. உன் வருங்கால

அண்ணியிடம், நானும் கொஞ்சம், கொஞ்...சம் தனி யாகப் பேசலாம் என்று, நினைக்கிறேன். அனுமதி கிடைக் குமா?'' என்று பணிவாகக் கேட்டான்.

சிரித்துக் கொண்டே அவள் ஓடிவிட, சுமனசியை நெருங்கி, ''சற்று முன், என் தங்கைக்கு ஒரு சுதந்திரம் கொடுத்தாய். எனக்கும் கிடைக்கும்தானே?'' என்று ஆவலாகக் கேட்டான்.

உடனே, ''கட்டாயமாய்!'' என்றவள், ''ஆனால், அப்புற மாய்!'' என்று கண்ணில் சிரிப்புடன் சேர்த்துச் சொல்ல, ''அப்புறமா? அந்த 'அப்புறமாய்' உன்னிடம் யார் அனு மதி கேட்கப் போகிறார்களாம்! பூரண சுதந்திரம்!'' என்று உல்லாசமாய் நகைத்தான் அவன்.

# அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ!



ரமணிசந்திரன்